
# கோகுலம்



## INDIA'S LARGEST SELLING COMIC

# DIAMOND COMICS

**1994**
**Silver Jubilee Year of Chacha Chaudhary**



### JOIN THE DIAMOND BOOK CLUB

**AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER**

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/—

We shall be offering five books every month. To get a rebate of **Rs. 4/- and Free postage (approx. Rs. 7/-)** you'll have to order all the five to six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not sent us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 5 books of your choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these. I promise to accept the V.P. every month.

NAME ______________________

ADDRESS ______________________

______________________

POST OFFICE __________ PIN CODE __________

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-


My Birth date ______________________

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.

### DIAMOND COMICS MAGIC FUN BOX

**PAY Rs. 60/- INSTEAD OF Rs. 120/-**

| | |
|---|---|
| • 5 Multi Dimensional Comics | Worth Rs. 30/- |
| • 1 Lunch Box | Worth Rs. 20/- |
| • 10 Diamond Comics | Worth Rs. 30/- |
| • Lot of Gifts | Worth Rs. 40/- |
| | Total Worth Rs. 120/- |




**DIAMOND COMICS PVT. LTD. 2715, DARYA GANJ, NEW DELHI-110002**

**DISTRIBUTORS : Madras :** Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbatore) **Hyderabad :** • Shailendra Agencies, Bashir Bagh • Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore :** Sapna Book Stall, Gandhi Nagar. • A.K. Agencies, Rajaji Nagar • The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road. **Calicut :** Remami Agencies P.O. Arakinar Calicut • Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut



# கோகுலம்

1994
நவம்பர் மாத இதழ்
மலர் : 12
இதழ் : 10

உயிர்களிடத்தில் அன்பு வேணும்
- தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேணும்
- பாரதியார்

## அருமைச் சிறுவர் சிறுமியரே,

எல்லோருக்கும் அன்பு வணக்கம்.

இந்த மாதத்தை நவம்பர் மாதம் என்று அழைப்பதைவிட சிறுவர் மாதம் என்று அழைப்பதே பொருத்தமாக இருக்கும். இந்த மாதத்தில்தான் சிறுவர் அதிகமாக விரும்பும் தீபாவளிப் பண்டிகை வருகிறது. குழந்தைகள் தினமான நேருஜியின் பிறந்தநாள் வருகிறது. சிறுவர் இலக்கியம் தழைக்க அரும்பாடுபட்ட கோகுலத்தில் முதல் கௌரவ ஆசிரியர் அமரர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா வின் பிறந்தநாளும் வருகிறது. இவைகளுக்கு எல்லாம் சிறப்பளித்து இந்த இதழ் மலர்கிறது.

சிறுவர் இலக்கியத்தை வளமாக்கி வரும் டாக்டர் பூவண்ணனின் அரிய பணிகளைப் பற்றிக் கோகுலம் வாசகர்கள் அனைவரும் அறிவார்கள். தமிழில் சிறுவர் இலக்கியம் தோன்றிய விதம், படிப்படியாக வளர்ந்த விதம், செம்மைப்படுத்திய முன்னோடிகள் எடுத்த முயற்சிகள், இன்றுள்ள நிலை போன்றவற்றை விளக்கி, 'சிறுவர் இலக்கிய வரலாறு' என்ற ஓர் அரிய ஆராய்ச்சி நூலையும் இவர் எழுதியுள்ளார். சிறுவர் இலக்கியத்தை ஆய்வு செய்பவர்களுக்கும், சிறுவர் இலக்கியம் படைத்து வருபவர்களுக்கும் இது கீதையைப் போன்றது. இந்த அரிய ஆராய்ச்சி நூலின் திருந்திய பதிப்பு வெகுவிரைவில் வெளிவர உள்ளது. சிறுவர் இலக்கியத் துறையில் தொண்டு செய்தோர், சாதனை புரிந்தோர், சிறுவர்க்காகப் பத்திரிகை நடத்தினோர், டி.வி., வானொலி, நாடக மேடை முதலியவற்றில் பங்கு கொண்டோர் தங்களைப் பற்றிய விரிவான விவரங்களை 25.10.94 க்குள் அவரது முகவரிக்கு (1, பாரதி பூங்கா, 4வது குறுக்குச் சாலை, சாயிபாபா காலனி, கோவை - 641 011.) அனுப்பி வைத்தால், நூலில் சேர்க்க உதவியாக இருக்கும். இந்த அரிய நூல் முழுமை பெற சிறுவர் இலக்கியம் படைப்பவர்கள் அனைவரது ஒத்துழைப்பும் இதற்குத் தேவை.

இடம் இல்லாததால் இந்த இதழில் 'கலைப் பொருள் செய்வோம்' பகுதி வெளியாகவில்லை. வாசகர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி, குழந்தைகள் தின வாழ்த்துகள்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்

அன்புடன்,
ரேவதி
(கௌரவ ஆசிரியர்)




# கோகுலம் நவம்பர் 1994


## இந்த இதழில்....






* கடல் கடந்த மகிபாலன்
பக்கம் 45



## அருமைக் கோகுலம் வாசகர்களுக்கும் அன்பார்ந்த பெற்றோர்களுக்கும்...

கடந்த பதினோரு ஆண்டுகளாக கோகுலத்தின் விலையை உயர்த்தாமல் இருந்து வந்திருக்கிறோம் என்பதை நீங்களெல்லாம் நன்கு அறிவீர்கள். பத்திரிகை தயாரிப்பதற்குத் தேவையான எல்லாப் பொருள்களின் விலைகளும் உயர்ந்து விட்ட போதிலும் குழந்தைக் குலத்திற்குச் செய்யும் பெரும் தொண்டாக இதைக் கருத்தில் கொண்டு கோகுலத்தின் விலையை உயர்த்தாமல் நஷ்டத்தைத் தாங்கி வந்தோம். 'நூறு பக்கங்களை மூன்று ரூபாய்க்கு எப்படிக் கொடுக்க முடிகிறது?' என்று அதனால்தான் பலரும் அதிசயப்பட்டதுண்டு.

ஆனால், தற்போது இனியும் சமாளிக்க முடியாது என்ற நிலை தோன்றியுள்ளது. எனவே, கோகுலத்தின் விலையை உயர்த்தியாக வேண்டிய கட்டாய நிலைக்கு வந்துள்ளோம். இனி உங்கள் அபிமான கோகுலத்தின் தனிப்பிரதியின் விலை ஐந்து ரூபாய். இந்த விலை உயர்வு டிசம்பர் '94 முதல் அமுலுக்கு வருகிறது.

இதற்கேற்ப சந்தா விகிதங்களும் மாறுகின்றன. ஓராண்டுச் சந்தா ரூ. 60/- ஆறு மாத சந்தா ரூ. 30/-

கோகுலத்தின் அன்பான வாசகர்களும், அபிமானப் பெற்றோர்களும் இந்த நியாயமான விலை உயர்வைப் பொருட்படுத்தாது தொடர்ந்து தங்கள் நல்லாதரவை அளித்து வரக் கோருகிறோம்.

மானேஜர்,
கோகுலம்.







தீபாவளி என்றதும் 'பட்டாசுகளின்' நினைவு தான் வரும். சீனாவெடி எனப்படும் அந்தப் பட்டாசுக் கட்டுகள் முன்பெல்லாம் சீனா நாட்டிலிருந்து தான், நம் நாட்டுக்கு இறக்குமதியாயின. அந்தச் 'சீனா வெடி' தான் இன்னமும் தீபாவளியின் கதாநாயகனாக விளங்கி வருகிறது!

சரி... வெடி மருந்தை முதன் முதல் கண்டு பிடித்து நம் தீபாவளிக்கு அந்தப் பட்டாசுகளை அனுப்பி வந்த சீனா, தன் நாட்டில் இந்தத் தீபாவளியைக் கொண்டாடுகிறதா?

ஆமாம்! கொண்டாடுகிறது. எப்படித் தெரியுமா?

வெவ்வேறான பழக்க வழக்கங்களைக் கொண்ட மக்கள் வாழும் நாடு சீனா. அவர்களின் பண்டிகைகள் மற்றும் பழக்க வழக்கங்கள் வெவ்வேறானவை. ஆனாலும் அவர்களின் பல பண்டிகைகளும் அவற்றை அவர்கள் கொண்டாடும் விதங்களும் ஏறத்தாழ நமது இந்தியப் பண்டிகைகள் போலவே அமைந்துள்ளன. அத்தகைய பண்டிகைகளில் ஒன்று நம் தீபாவளியைப் போன்றது. அதை அவர்கள் 'பட்டாசுத் திருநாள்' என்றழைக்கிறார்கள்.

அதை அவர்கள் பல நூற்றாண்டுகளாகக் கொண்டாடுகின்றனர். ஆனால், கொண்டாடும் விதத்தில் இடத்துக்கு இடம், இனத்துக்கு இனம் இந்தப் பட்டாசுத் திருநாள் வேறுபடுகிறது. கொண்டாடப்படும் விதத்தில் அல்லாது கொண்டாடும் தேதிகளிலும் இந்த வேற்றுமை உண்டு. க்வாங்ஷியின் சன்ச்யாங் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால், இடத்துக்கு இடம் இந்த வேறுபாடு நன்கு தெரிய வரும். சங்சாங்கில் உள்ளவர்கள் சந்திரப் பஞ்சாங்கப்படி முதல் மாதத்தின் மூன்றாம் நாள் இதைக் கொண்டாடுகிறார்கள். ஆனால் 'மெய்லிங்'கின் மக்கள் இரண்டாம் மாதத்தின் இரண்டாம் நாள் கொண்டாடுவர். அதே போல், ஷூலோவில் உள்ளவர்கள் மூன்றாம் மாதத்தின்

ஜானகிமணாளன்



# பட்டாசுத் திருநாள்

மூன்றாம் நாளும், லின்ஷியினர் பத்தாம் மாதம் 26ஆம் நாளும் கொண்டாடுகிறார்கள்.

முதன் முதல் இந்தப் 'பட்டாசுத் திருநாள்' கொண்டாடும் வழக்கம் எப்படி ஏற்பட்டது தெரியுமா? அது ஒரு சுவையான கதை.

சீனாவை அப்போது 'ச்சிங்' வமிசத்தினர் ஆண்டு வந்தனர். அப்போது மலர்களுக்குப் பிரசித்தமான ஒரு பிரதேசம். அங்கு மர வியாபாரம் மிகுதி. அவ்விடத்து மரவியாபாரிகள் தமது வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகத் தினம் தினம் புதுப் புது வியாபாரத் தந்திரங்களைக் கண்டுபிடித்துக் கையாண்டார்கள். ஒரு சமயம் அவர்களுக்கு ஏற்பட்ட வாணிபப் பெருக்கத் திட்டம் தான் இந்தப் 'பட்டாசுத் திருநாளாக' உருப்பெற்றது. 'சந்திர பஞ்சாங்க முறைப்படி மூன்றாம் மாதத்தின் மூன்றாம் நாள் பட்டாசுகளைக் கொண்டு வாண வேடிக்கைக் காட்சிப் போட்டியும் நடத்தப்படும். அதில் விருப்பமுள்ளவர்கள் வந்து கலந்து கொள்ளலாம்'; என்று அறிவித்தனர். மேலும், அப்போது நடக்கும் போட்டியில் சிறந்த திறமையாளர்களுக்குப் பரிசுகளும் பாராட்டுகளும் உண்டு என்றும் அறிவித்தனர். வெற்றி பெற்றவர்களுக்கு இறைச்சி, முட்டை சுவையான பானம் போன்ற பல பரிசுகளை வழங்கினர். இது ஓராண்டு நடந்தது. இதற்கு நல்ல வரவேற்பும் உற்சாகமும்



இருக்கவே இதே கொண்டாட்டங்களை ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாளில் தொடர்ந்து நடத்தத் தீர்மானித்தனர். அதுவே 'பட்டாசுத் திருநாள்' என்ற பெயரில் கொண்டாடப்படலாயிற்று.

இந்தத் திருநாளுக்குச் சில தினங்கள் முன்னமேயே அந்தப் பிரதேசம் விழாக் கோலம் பூணத் தொடங்கிவிடும். வெளியூரிலிருந்தெல்லாம் போட்டியில் கலந்து கொள்பவர்கள் வரத் தொடங்கி விடுவார்கள். அவர்களை உள்ளூர் மக்கள் வாழ்த்தி வரவேற்பார்கள். அவர்களை மட்டுமா? தமது உற்றார் உறவினர்களையும் கூடத்தான். ஒவ்வொரு வீட்டிலும் விருந்தினர் கூட்டமும் அவர்களுக்கு விருந்தளிப்பு வைபவமும்தான்.

பட்டாசுத் திருநாளன்று அதிகாலையிலேயே ஊர் மக்கள் திருவிழா நடைபெறும் இடத்தில் வந்து குமியத் தொடங்கி விடுவார்கள். குழந்தைகளும் பெண்களும் வெள்ளியினால் ஆன அணிகலன்களையும் பலவித வண்ண உடைகளையும் அணிந்து உல்லாசமாக வந்து கூடுவார்கள். இளைஞர்கள் கறுப்பு நிறச் சட்டையும், பட்டி வைத்துத் தைத்த வெள்ளை பைஜாமா அல்லது பேண்ட்டும் அணிந்து வருவார்கள். அனைவர் முகத்திலும் மகிழ்ச்சி பெருக்கெடுத்து ஓடும்.

அம் மக்கள் வந்து கூடுமிடம் வண்ண வண்ணத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். நிகழ்ச்சியின் போது கச்சேரியும் நடனக் காட்சிகளும் நடத்தப்படுவதற்காக உயரமான பெரிய மேடை போட்டிருப்பார்கள். அதில் காட்சி ஜோடனைகளுடன் ஒளி விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கும்.

மூன்று பட்டாசுகளை வெடிப்பதன் மூலம் விழா துவங்கி விட்டதை அறிவிப்பார்கள். அது நம் நாட்டு ராக்கெட் வாணம் போன்றது. ஒரு நீண்ட மூங்கில் குழாயில் வெடிமருந்தை நிரப்பி அதைச் செய்வார்கள். அதன் ஒரு முனை வழியாக அதனுள் சிவப்பு - பச்சை நிற நூல்களால் சுற்றி மறைக்கப்பட்ட மோதிரம் போன்ற இரும்பு வளையம் ஒன்று வைக்கப்பட்டிருக்கும். கொளுத்தப்பட்டதும் அது விண்ணில் சீறிப் பாய்ந்து உயரே சென்று சிதறி வெடிக்கும். அதைக் கண்டு மக்கள் கைதட்டி ஆரவாரிப்பார்கள். அது வெடித்துச் சிதறும் போது, அதனுள் வைக்கப்பட்டிருக்கும் இரும்பு மோதிரம் சிதறிப் போய் எங்காவது பூமியில் விழும். எங்கு விழுந்தாலும், அதைத் தேடிக் கைப்பற்றிக் கொண்டு வந்து, விழா மேடையில் ஏறித் தன் வெற்றியை அறிவிப்பவர்தான் வீரதீரர். அதனால், வாணம் வானத்தில் பூப்பூவாகச் சிதறியதும் எல்லாரும் விழுந்தடித்துக் கொண்டு நாற்புறமும் ஓடித் தேடுவார்கள். அது அருகில் உள்ள நதியில் கூட விழுந்து விடலாம். அப்போது திறம் மிக்க நீச்சல் வீரர்கள் நீரில் குதித்து மூழ்கித் தேடுவார்கள். மோதிரம் கிடைத்ததும் அதைப் பத்திரமாக எடுத்து வர வேண்டும். வழியில் தட்டிப் பறித்துக் கொண்டு போய் மேடையேறி அறிவித்தாலும் பரிசு உண்டு. எனவே கவனமாக எடுத்து வருவார்கள். வெற்றி பெறுபவருக்குத் தடபுடலான ராஜமரியாதையும் வரவேற்பும் தருவார்கள். பரிசுகளும் பாராட்டுகளும் வந்து குவியும்.

அதையடுத்து மேடையில் ஆடல் பாடல்கள், போட்டிகள் எல்லாம் உண்டு. அப்போட்டிகள் வயதுக்கு ஏற்றவாறு வேறுபடும். அன்று இரவு ஊரின் எல்லா வீடுகளிலும் ஒரே அமர்க்களம்தான். பலவித இசைக் கருவிகள் துணையுடன் பண்டைய கிராமியப் பாடல்களின் முழக்கம்தான். எல்லா வீடுகளிலும் விருந்து உண்டு. இது நம்ம ஊர் தீபாவளி இல்லாமல் வேறு என்ன?

அட்டையில் : சிறுவன் ஏ. கார்த்திக்
வண்ணப்படம் : ஓம். சுப்ரமணியன்


தலைசிறந்த பிரில் தயாரிப்புகள்!
Bril
• இங்க் (INK) • கம் (GUM)
• பேஸ்ட் (PASTE)
• ஜியாமெட்டரி பாக்ஸ் (GEOMETRY BOX)
• கலர் கிரேயான்கள் (COLOUR CRAYONS)
• பால் பென்கள் (BALL PENS) • ரீ-பில்கள் (REFILLS)
• பென்கள் (PENS) • பென்சில் ஷார்ப்பெனர் (PENCIL SHARPENER)
• கலர் ஸ்கெட்ச் பென்கள் (COLOUR SKETCH PENS)
இண்டஸ்டிரியல் ரிஸர்ச் கார்ப்பொரேஷன்
பெங்களூர்-560 055
போன்: 3341567
சென்னை-600 041
போன்: 411166
ADWAVE/IRC/4727/TAM

# புஸ்வாண தீபாவளி!

(சேதுபதியின் வீட்டுக்கூடம். மாலை நேரம். அம்மா, அப்பா, சேதுபதி)

**சேதுபதி:** (வந்து கொண்டே) சுட்டாச்சு...! சுட்டாச்சு...!

**லதா :** (திடுக்கிட்டு) சுட்டாச்சா...? யாரைச் சுட்டே? வர... வர... உன் தொல்லை தாங்கலடா...!

**சேது:** லதா அக்கா... சதா என்னைத் திட்டறதுதான் உங்க வேலை. எதையும் முழுசாக் கேட்கணும்... பொறுமையாக் கேட்கணும்.

**லதா :** எட்டாவது படிக்கறே நீ... பி.எஸ்ஸி படிக்கிற எனக்குப் பொறுமையைப் பத்திச் சொல்லித் தர்றியா? பொறுமைக்கு அர்த்தம் தெரியுமா உனக்கு?

**சேது :** அக்கா, சேது பாக்கறதுக்குத் தான் சாது. ஆனால் எனக்கு எல்லாத் தமிழ் வார்த்தைக்கும் அர்த்தம் அழகாத் தெரியும்.

**லதா :** (கிண்டலாக) தமிழ் மேதை சேதுபதி அவர்களே... தாங்கள் யாரை சுட்டாச்சு என்று சொன்னீர்கள்...?

**சேது :** பட்பட்பட்... பட்டாசு சுட்டாச்சு!

**லதா :** பட்டாசா! நல்ல தமாஷ் உன்னோட... நாளைக்குக் காலையிலதாண்டா தீபாவளி... புது டிரஸ் போட்டுக்கிட்டு சுடறதுக்கும் கொஞ்சம் பட்டாசு வெச்சுக்கடா!

**சேது :** இந்த சேதுபதி ஒரு முழுமதி. அப்பாவை அசத்தி கட்டுக் கட்டாப் பட்டாசு வாங்கி வச்சிருக்கேன் தெரியுமா?

**அப்பா :** (உள்ளேயிருந்து) கட்டுக் கட்டா... பட்டாசு வச்சிருக்கானாம்.... கட்டுக்கட்டா... ரூபாய்... நோட்டுல்ல... காலியாயிருக்கு?

**சேது:** (திடுக்கிட்டு)... ஐயய்யோ.... உள்ளே அப்பா இருக்கறதை நீங்க சொல்லலையே அக்கா?

**லதா :** தம்பி சேதுபதி, நீதான் முழுமதி படைச்சவன்னு சொன்னியே. வெளியே பஜாஜ் செட்டாக் நிக்கறதைப் பார்க்கலையா?

**சேது :** செட்டாக்கை முதல்லேயே பார்த்திருந்தால் எனக்கு அட்டாக்கே வந்திருக்கும்!

**அப்பா :** விட்டாச்சு! விட்டாச்சு...! உன்னைத் தண்ணி தெளிச்சு விட்டாச்சு!

**அம்மா :** (வந்து கொண்டே) விடிஞ்சா தீபாவளி. விடிய விடிய பிள்ளையைத் திட்டறதே உங்க பழக்கமாப் போச்சு. வருஷத்துல ஒருநாள்... அவன் சந்தோஷமா இருக்கறது



உங்களுக்குக் கண்ணைக் கரிக்குதோ?

**அப்பா** : நீ வெங்காயம் வெட்டின கையோட இங்கே வந்து நிக்கறே, அது தான் கண்ணைக் கரிக்குது. உனக்கு என்ன வேணும்?

**அம்மா** : சாமி படத்துக்குப் பூ வேணும்.

**சேது** : பூ.... இவ்வளவுதானா...! இப்பவே போய் வாங்கிட்டு வந்துட றேன்.

**லதா** : அப்புறம் என்னம்மா கவலை?

**அம்மா**: விலை மலிவாயிருக்கேன்னு உதிரி மல்லிகைப்பூ அறுநூறு வாங்கிட் டேன்.

**அப்பா** : உதிரியைத் தொடுக்கணும். அவ்வளவுதானே? இதுல என்ன பிரச்னை? நார் இல்லியா?

**அம்மா** : நார் இருக்கு. தொடுக்கற

# கமலவேலன்

துக்குப் பொன்னம்மா இல்லே!

**லதா** : என்னம்மா சொல்றே?


**அம்மா** : நேத்து முறுக்கு சுட றப்போ... என் கையில எண்ணெய் கொட்டிட்டுது. அதனால என்னால பூத்தொடுக்க முடியாது. வேலைக்காரி பொன்னம்மா... ரெண்டு நாள் லீவு கேட் டுட்டு ஊருக்குப் போயிட்டாள்.

**சேது** : அக்கா... நீங்க தொடுக்க வேண்டியதுதானே!

**லதா** : பூ... பூ... தொடுக்கலாம்... ஆனா...

**சேது** : தொடுக்கலாம்ங்கறப்பவே... வார்த்தையெல்லாம் தடுக்குது!

**அப்பா** : உங்க அக்கா படிப்பிலே



புலி... வீட்டு வேலையெல்லாம் இன்னும் பழகலே...

**அம்மா** : இனிமேல்தான் அவ ளுக்குப் பூக்கட்டறதுக்கு... கோலம் போடறதுக்கு... சமையல் செய்யறதுக்கு எல்லாம் சொல்லிக் கொடுக்கணும்.

**அப்பா** : அதுக்குள்ளே அடுத்த தீபா வளி வந்துடுமே!

**அம்மா** : கேலி பண்றீங்க... நல்ல நாளும் அதுவுமா... சாமி படத்துக்கு... ஒரு முழம் பூ கூடத் தொடுக்க வழி யில்லாமப் போயிடுச்சு.

**அப்பா** : அறுநூறு குண்டுமல்லிகை... என் கண் எதிரிலேயே வாடி வதங்கி... குப்பைத் தொட்டிக்குப் போகப் போகுது.

**லதா** : இப்ப வருத்தப்பட்டு என் னப்பா ஆகப் போகுது...? அப்பா, நீங்க சொல்றதும் சரிதான். நானும் பூத் தொடுக்கறதுக்குப் பழகியிருக்கணும்.

**அம்மா** : நல்ல நாளும் அதுவுமா புலம்பாதீங்க. பரந்தாமா... கிருஷ்ணா... நீதான் காப்பாத்தணும்.

**சேது** : தீபாவளி நேரத்துல கிருஷ்ண பரமாத்மாவுக்குப் பல வேலைகளிருக் கும்... அக்கா, நீங்க அந்த உதிரிப் பூவை யெல்லாம் கொண்டு வாங்க. நாரைத் தண்ணீர்லே ஊற வச்சுக் குடுங்க. அரை மணி நேரத்துல அழகா... சாமி படத் துக்கு ஒரு பூ மாலை தொடுத்துத் தர்றேன்.

**அப்பா** : பூத்தொடுக்கறதுக்குப் பள்ளிக்கூடத்துல சொல்லித் தர்றாங் களா?

**லதா** : பூவும் நாரும் வீணாகப் போவுது.

**சேது** : அப்பா, அக்கா... நீங்க ரெண்டு பேருமே "நான் ஒரு அறி வொளித் தொண்டன்"ங்கிறதை மறந்துட் டீங்க!

**அம்மா** : அதுக்கும் பூத்தொடுக்கற துக்கும் என்ன சம்பந்தம்?

**சேது** : அம்மா... "கற்போம், கற்பிப் போம்" இதுதான் அறிவொளி இயக் கத்தின் தாரக மந்திரம். நான் கற்பிக்கப் போற பகுதி முஸ்லீம்கள் பகுதி. அங்கே 'குலாம் பாய்'னு ஒரு முஸ்லீம் பெரியவர் எங்கிட்டே பாடம் கத்துக்கறாரு. அவரு... பூ வியாபாரி. தினமும் பாடம் சொல்லிக் கொடுத்துட்டு அவர் பூத்தொடுக்க றதைப் பார்த்துக்கிட்டேயிருப்பேன். நிமிஷ நேரத்துல... மாலை தொடுத்துடு வாரு... அவர்கிட்டேதான் நான் பூத் தொடுக்கக் கத்துக்கிட்டேன்... அதுமட்டு மல்ல... கூடை பின்னவும் தெரியும்... கற்போம்; கற்பிப்போம் தத்துவம் இப்பப் புரியுதா?

**அப்பா** : டேய்... சேது. உன்னைத் தப்பாப் புரிஞ்சுக்கிட்டேண்டா...

**அம்மா** : என்னிக்கும் என் பிள்ளை புத்திசாலி.

**லதா** : புத்திசாலித்தனத்தாலதான்... மாவட்ட ஆட்சித் தலைவர் அவனை அறிவொளித் தொண்டனா நியமிச்சருக் காரு. சேதுபதி... இனிமே நீ 'பூ' பதி!

**சேது** : ஆளுக்கு ஆள் ஐஸ் வச்சா... காலையில எப்படி எண்ணெய் தேய்ச் சுக் குளிக்க முடியும்? வாழ்க அறி வொளி! வாழ்க தீப ஒளி!


---

**"நகரத்துல எல்லோரும் கோழையா இருப்பாங்க போலி ருக்கே?"**

**"எப்படிச் சொல்றீங்க?"**

**"அவர் வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டதுக்கு இந்த எட்டுப் பேரும் இப்படி ஓட றாங்களே!?"**

**– ச. ஞானப்பிரகாசம்**



# பிள்ளையார் வந்தார்!

அந்த ஊரிலேயே மிகப் பெரிய பணக்காரர் தனகோடி தான். கோபமும், கர்வமும் மிகுந்தவர். அவர் வீட்டில் பத்து வயதுச் சிறுவன் பாலு வேலைக் காரனாக இருந்தான். பாலு எல்லா வேலைகளும் செய்வான். இருந்தும் தனகோடிக்குத் திருப்தியே இருக்காது. வேண்டும் என்றே திட்டுவார். இவ்வளவுக்கும் சம்பளம் மிகக் குறைவு.

பாலுவுக்கு அப்பா இல்லை. அம்மாவுக்குக் கால் ஊனம். அம்மாவைக் காப்பாற்ற வேண்டுமே என்பதற்காகத்தான் தனகோடியிடம் இத்தனை துன்பங்களையும் பொறுத்துக் கொண்டு வேலை செய்து வந்தான்.

தனகோடி எந்த ஒரு பண்டிகையையும் விசேஷமாகக் கொண்டாடுவார். அன்று விநாயக சதுர்த்தி. வழக்கம் போல் விதவிதமாகக் கொழுக் கட்டைகள், அப்ப வகைகள், சுண்டல் வகைகளைச் செய்தார். கோவிலுக்குப் போய் விட்டு வந்து பூஜை செய்யலாம் என்ற எண்ணத்தில் தனகோடி பாலுவை வீட்டில் இருக்க வைத்து விட்டுக் குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்றார்.

தனகோடி சென்றதும் பாலு மண் விநாயகர் முன் அமர்ந்தான். "பிள்ளையாரப்பா, முதலாளி மாதிரி எனக்கும் வித விதமா உனக்குப் பலகாரங்கள் எல்லாம் செய்து படைக்க ஆசைதான். ஆனால் என்னிடம் அதற்கான வசதியில்லை. சீக்கிரத்திலேயே நான் கடுமையாக உழைத்து முன்னுக்கு வருவேன். அப்போ கண்டிப்பாக இது மாதிரியே செய்கிறேன்" என்றான்.


அந்த அறையில் திடீரென்று ஒளி வீசியது. நிமிர்ந்து பார்த்தவனுக்கு ஒரே வியப்பு. எதிரே விநாயகர் நின்றிருந்தார். பானை வயிறு. துதிக்கை! ஒரே தந்தம்! மூஞ்சுறு கூட இருந்தது. பாலு தரையில் விழுந்து வணங்கினான்.

"எழுந்திரு பாலு, எனக்குப் பசிக்கிறது. இங்கேயுள்ள கொழுக்கட்டைகளை எடுத்துக் கொடு" என்று கேட்டார் விநாயகர்.

"பிள்ளையாராப்பா, இது எங்க முதலாளி உனக்குப் படைக்க வைத்திருக்கும் பலகாரங்கள். அவர் கோவிலுக்குப் போயிருக்கிறார். வந்ததும் பூஜை பண்ணி உனக்குப் படைப்பார். அது வரை பொறுத்திரு. அவருடைய அனுமதியின்றி நான் இவைகளைத் தரமாட்டேன்" என்றான் பாலு.

"எனக்கு நேரம் இல்லை பாலு. நான் உடனே போக வேண்டும் நிறைய வேலை இருக்கிறது. இன்றைக்கு விநாயக சதுர்த்தி இல்லையா? நானே வந்து கேட்டதால் எனக்குக் கொடுத்தேன் என்று சொல். ஒன்றும் சொல்ல மாட்டார்" என்றார் விநாயகர்.

"முதலாளி அனுமதியில்லாமலா? சரி, என் பங்குக்கு இரண்டு கொழுக்கட்டை தருவார். அதை மட்டும் வேண்டுமானால் தருகிறேன்" எனக் கூறிய பாலு இரண்டு கொழுக் கட்டைகளை எடுத்துத் தந்தான். அங்கேயே உண்ட விநாயகர்




பாலுவை வாழ்த்தி விட்டு மறைந்தார்.

கோவிலிலிருந்து திரும்பிய தனகோடியிடம், நடந்ததைக் கூறினான் பாலு. அவர் கோபத்துடன், "கதையாடா விடறே? நீ எடுத்துத் தின்னுட்டு நான் கண்டு பிடிச்சுடுவேனோன்னு பிள்ளையார் மேலே பழி சொல்றியா?" என்று கையை ஓங்கினார்.

அப்போது ஒரு குரல், "தனகோடி நில்! பாலு கூறுவது உண்மையே" என்று ஒலித்தது.

"விநாயகப் பெருமானே, உங்களை தினமும் பூஜித்து விதவிதமாகப் படைத்து வரும் எனக்குக் காட்சி தராமல், இந்த வேலைக்காரப் பயலுக்குக் காட்சியளித்துள்ளீரே! இது உமக்கே நியாயமா?" என்று கேட்டார் தனகோடி. விநாயகர் ஏழைப் பையன் பாலுவுக்குக் காட்சி யளித்ததை அவரால் ஏற்க முடிய வில்லை.

குரல் சிரித்தது. "தனகோடி, தினம் பூஜித்தால் மட்டும் போதாது. மனத் தூய்மை வேண்டும். கர்வம், பொறாமை, கோபம் ஆகியவற்றை அடக்க வேண்டும். நீ அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. அதனால்தான் உனக்கு நான் காட்சி தரவில்லை" என்றார் விநாயகர்.

தனகோடிக்கு அப்போது கூடப் புத்தி வரவில்லை. அவர் கர்வத்துடன், "ஓகோ! எனக்குக் காட்சியளிக்க மாட்டீர்கள். ஆனால், எங்கள் வீட்டில் செய்த கொழுக்கட்டைகளை மட்டும் உண்பீர்கள். அப்படித்தானே?" என்றார்.

விநாயகர் சிரித்து, "மூடனே! இது உன்னுடையப் பணத்தால் வந்தது என்றாலும் பாலுவின் கைபட்டதால் தூய்மையாகி விட்டது. அதனால்தான் நான் அதை விருப்பமாகக் கேட்டு உண்டேன்" என்றார்.

அத்துடன் குரல் ஒலிப்பது நின்று விட்டது. தனகோடி வெட்கித் தலை குனிந்தார்.

- வாண்டுதாசன்.

முரளியும், ரகுவும் ஒரே வகுப்பில் படித்து வருபவர்கள். முரளி எல்லாப் பாடங்களையும் நன்றாகப் படிப்பான். நன்கு படிப்பதால் கர்வம் அதிகம். சுமாராகப் படிப்பவர்களைக் கிண்டல் செய்வான். தனக்குத் தெரிந்த பாடங்களை யாருக்கும் சொல்லித் தரமாட்டான். பிறருக்கு எவ்வித உதவியும் செய்ய மாட்டான்.

ரகு படிப்பில் சுமார் தான். குறிப்பாகக் கணக்கில் 'வீக்'. ஆனால் விளையாட்டில் சூரன். நீச்சல் போட்டியில் எப்போதும் முதலிடம். பிறருக்குத் துன்பம் வந்தால் தனக்கு வந்ததைப் போல் எண்ணி ஓடோடி வந்து உதவி செய்வான். இதனால் ரகுவைக் கண்டாலே முரளிக்குப் பிடிக்காது.



கணக்குப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது. பரீட்சைக்காக ரகு கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான். சில கணக்குகள் அவனுக்குப் புரியவில்லை. அருகில் இருந்த முரளியின் வீட்டுக்குச் சென்று அவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே என்று சென்றான்.

முரளிக்கு இவனைப் பார்த்ததுமே எரிச்சலாக இருந்தது. அவன் கணக்கில் சந்தேகம் கேட்டது அதைவிட எரிச்சலாக இருந்தது. 'எனக்கு ரொம்பத் தலைவலியாக இருக்கு. என்னால் சொல்லித் தர முடியாது. வாந்தி வரும்போல இருக்கு. அதோட நான் யாருக்கும் கணக்கெல்லாம் சொல்லித் தர்றது கிடையாது'' என்று கூறி அனுப்பி விட்டான்.

ரகுவிற்கு முகத்திலடித்ததுபோல் இருந்தது. தொலைவில் அடுத்த ஊரில் இருந்த கணக்காசிரியரின் வீட்டுக்கே விரைந்து சென்றான். முகம் சுளிக்காமல் கணக்குகளைச் சொல்லிக் கொடுத்தார் அவர்.

**பா. ஜெயக்குமார்**



# நான் எதுக்கு?

அவன் கிளம்பிய போது, "ஏம்பா ரகு, உன் வகுப்பில படிக்கிறானே முரளி, அவன் கணக்கெல்லாம் நல்லாப் போடுவானே. அதில்லாமல் உன் வீட்டுக்கு அருகாமையில் வேறு இருக்கிறானே? அவன்கிட்டே கேட்டால், சொல்லித் தருவானே?" என்று கேட்டார்.

"கேட்டேன் சார். அவன் யாருக்குமே சொல்லித் தர மாட்டேங்கறான் சார்!" என்றான் ரகு.

"அப்படியா சொன்னான்! சரி, நான் அவன்கிட்டே சொல்லிப் பார்க்கிறேன். நாளை பரீட்சைக்குக் கணக்குப் போட்டுப் பார்" என்றார் ஆசிரியர்.

அடுத்த நாள் ஆசிரியர் முரளியை

அழைத்துக் கேட்டார் : "முரளி, உனக்குத் தெரிந்த பாடங்களை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடு. மற்றவர்களுக்குச் சொல்லித் தருவதால் உனக்கும் மேலும் மேலும் நன்கு புரியும். நம்மிடம் உள்ள திறமையை மற்றவர்களுக்காகப் பயன்படுத்துவதால் நமது திறமை குறைந்து விடாது," என்று அறிவுறுத்தினார்.

"சார், எனக்குள்ள திறமை எனக்கே உரியது. அதை எதற்காக நான் மற்றவர்களுக்குப் பயன்படுத்துவது?" என்று அவன் திருப்பிக் கேட்டபோது ஆசிரியரால் பதில் கூற முடியவில்லை. இப்படியும் ஒரு மாணவனா என்று எண்ணினார். "எது எப்படி இருந்தாலும் நீ மற்றவர்களுக்குச் சொல்லித் தரவேண்டியது உன் கடமை இல்லையா?" என்று கேட்டு அவனை அனுப்பி விட்டார்.

விடுமுறையில் முரளி நண்பர்களுடன் பந்து விளையாடச் சென்றான். அருகில் உள்ள குளத்தில் முரளி அடித்த பந்து விழுந்துவிட்டது. முரளி மெதுவாக இறங்கினான். இருந்தாலும் படிகளின் வழுக்கல் அவனை வாரிவிட்டு நடுக் குளத்திற்கு இழுத்துச் சென்றுவிட்டது. நீச்சல் தெரியாத முரளி, "உதவி, உதவி" என்று கத்தினான்; தத்தளித்தான்; மயக்க மடைந்தான்.

முரளி மறுபடி கண் விழித்தபோது அருகே ரகு, தனது ஈர உடையைப் பிழிந்து கொண்டிருந்தான். அருகில் ஆசிரியர்.

"சார், என்னுடைய நன்றியை...." என்று அவன் பேசத் தொடங்கிய போது ஆசிரியர் குறுக்கிட்டார். "நீ நன்றி கூற வேண்டியது ரகுவுக்குத்தான். 'எனக்குள்ள திறமையை நான் எதற்காக மற்றவர்களுக்காகப் பயன்படுத்த வேண்டும்' என்று ரகு மட்டும் உன்னைப்போல் பேசாமல் இருந்திருந்தால் நீ பிழைத்தே இருக்க மாட்டாய்" என்றார் ஆசிரியர்.

"சார், இனிமேல் நான் சுயநலவாதியாக இருக்க மாட்டேன். என்னிடமுள்ள திறமையை மற்றவர்களுக்குச் சொல்லித் தருவதில் பயன்படுத்துவேன்" என்றான் ரகு கண்களில் நீர் கசிய...!



# பூமணியின் பட்டுக்குடை

சின்னபாபு

இரண்டாவது குபேரன் என்று மக்களால் போற்றப்பட்ட தனவணிகர் பொன்னம்பலம் தனது மனைவியுடனும் மூன்று பெண்களுடனும் நிலா முற்றத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

"உங்கள் மூவருக்கும் திருமணமாகிக் கணவன் வீட்டுக்குப் போகிறீர்கள். எனக்கு உங்களை உடனே பார்க்க வேண்டும் போல் தோன்றுகிறது. செய்தி அனுப்புகிறேன். நீங்கள் என்ன பண்ணுவீர்கள்?" என்று விளையாட்டாக மூன்று பெண்களையும் கேட்டார் பொன்னம்பலம்.

"இதென்னப்பா கேள்வி! நீங்கள் செய்தி கூட அனுப்ப வேண்டாம். நீங்கள் எங்களைப் பார்க்க விரும்புகிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரிந்தாலே போதும். உடனே நான் கிளம்பி வந்து விடுவேன்" என்றாள் மூத்த பெண் வைரமணி.

"ஆமாம் அப்பா. அக்கா கூறுவது சரிதான். உடனே நானும் ஓடி வந்து விடுவேன்" என்றாள் பொன்மணி. அவள் இரண்டாவது பெண்.

அனைவரும் மூன்றாவது பெண் பூமணியைப் பார்த்தனர். அவள் பதிலே தும் கூறவில்லை. சிரித்தபடி ஏதோ பின்னல் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தாள்.

"பூமணி, நீ என்னம்மா என் கேள்விக்கு பதிலே கூறவில்லை! நான் கேட்ட கேள்வியையும், உன் அக்காக்கள் இருவரும் அளித்த பதிலையும் கேட்டாயா அம்மா? உன் பதில் என்ன? திருமணமாகிக் கணவன் வீட்டுக்குப் போனபின், திடீரென்று உங்களைப் பார்க்க வேண்டும் போல் எனக்குத் தோன்றினால், தகவல் அனுப்பினால் நீ என்ன செய்வாய் அம்மா? உடனே கிளம்பி வந்து விடுவோம் என்று உன் அக்காக்கள் கூறுகிறார்கள். நீ என்னம்மா செய்வே?" என்று அன்போடு கேட்டார் பொன்னம்பலம். அவர் குரலில் ஆர்வம் மிகுந்திருந்தது.

"அப்பா, இந்தக் கேள்வியே அசட்டுத்தனமானது. அதுதான் அப்படி என்றால், அதைவிட அசட்டுத்தனமானது அக்காக்கள் கூறிய பதில்" என்றாள் பூமணி.

பொன்னம்பலத்தின் முகத்தில் தீவிரம்.

"என் கேள்வி அசட்டுத்தனமா, இல்லை இவர்கள் பதில் அசட்டுத்தனமான்னு நான் இப்போ கேட்கலேம்மா. இந்தக் கேள்விக்கு உன்னுடைய பதில் என்ன?"

"ஆமாம். நம்ப மூன்று பேரில் நீதான் புத்திசாலி, அறிவாளி, கலை ஞானமும் தெய்வபக்தியும் மிக்கவள் என்று இந்த இராஜ்ஜியமே உன்னைப் புகழ்கிறது. அப்பா கேட்ட கேள்விக்கு அறிவாளியான உன் பதில் என்ன?" என்று கேட்டாள் வைரமணி.

"நாங்க எவ்வளவுதான் அன்பாக இருந்தாலும் அப்பாவுக்கு உன் பேரில் தானே அளவுக்கு அதிகமான அன்பு? அப்பாவுக்கு செல்லப் பெண் நீதானே? நீ உன் பதிலைக் கூறு?" என்று வற்புறுத்தினாள் பொன்மணி.

இனி பதில் கூறாது முடியாது. அதற்கு அவர்கள் விட மாட்டார்கள் என்பதைப் புத்திசாலியான பூமணி நன்கு புரிந்து கொண்டாள். தயக்கத்துடன் பதில் கூறினாள்.

"அப்பா, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இரண்டு அக்காக்களும் அளித்த பதிலால் நீங்கள் அடைந்த பேரானந்தத்தைப் போல் என் பதில் உங்களுக்கு



மகிழ்ச்சியைத் தராது."

அன்பு மகளைத் திகைப்புடன் நோக்கினார் பொன்னம்பலம்.

"திருமணமாகி விட்டால், எனக்குப் புதிய பொறுப்புகளும் கடமைகளும் ஏற்பட்டு விடும். அதனால், இவர்கள் கூறியது போல் என்னால் உடனே ஓடி வர முடியாது. காரணம், என் கணவன் வீட்டில் என்னுடைய உழைப்பும் கவனமும் அதிகம் தேவைப்படும் நிலை இருந்தால், நான் எப்படி உடனே ஓடி வர முடியும்?

என் கணவனுக்கே உடம்பு குணமில்லை. என் குழந்தைக்கே உடல்நிலை சரியில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். இவர்களை விட்டு விட்டு என்னால் உடனே ஓடி வர முடியுமா? அதனால், ஆனபின், எனது பொறுப்புகள் கூடுகின்றன. அவைகளை நான் நிறைவேற்ற வேண்டாமா?''

பொன்னம்பலத்தின் முகத்தில் ஏமாற்றத்தின் நிழல் படிந்தது.



கணவன் வீட்டுச் சூழ்நிலையைக் கவனித்து அதற்கு ஏற்பவே உங்களைக் காண வருவேன்'' என்றாள் பொன்னம்பலத்தின் செல்லப் பெண் பூமணி.

"உன் தந்தையிடம் உனக்கு இவ்வளவு தானா அன்பு?''

"அன்புக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை அப்பா. இங்கே, எல்லாமே எனக்கு நீங்கள்தான். இங்கே உங்களுக்காக நான் என் உயிரையே கூடத் தியாகம் பண்ணத் தயார். ஆனால் திருமணம்

"உங்களுக்கு நன்றாக வேண்டும்பா. புத்திசாலி என்று தலையில் வைத்துக் கொண்டு கூத்தாடினீர்களே... அவளுடைய பதிலைக் கேட்டீர்களா?'' என்று வைரமணியும், பொன்மணியும் தந்தையை உசுப்பி விட்டனர்.

"பூமணி, அப்பாவின் கோபத்திற்கு ஆளாகாதே. மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, உடனே ஓடி வருவேன் என்று பதில் சொல்லும்மா'' என்று பூமணியின் தாய் கெஞ்சினாள்.

"இல்லையம்மா. அப்பாவுக்கு மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக நான் பொய் கூற மாட்டேன்" என்றாள் பூமணி.

பொன்னம்பலத்தின் முகத்தில் கனல் பறந்தது.

"இந்த நன்றி கெட்டவளை, கை கால்களைக் கட்டி ஒரு படகில் போட்டு, நடுக்கடலில் தள்ளி விட்டு வாருங்கள்" என்று உத்தரவிட்டார்.

அடுத்த மூன்றாவது நாள், கை கால்கள் கட்டப்பட்ட நிலையில், நடுக்கடலில், படகில் தத்தளித்துக் கொண்டிருந்தாள் பூமணி. வந்தது வரட்டும் என்று மனதில் தெய்வத்தை நினைத்தபடி கிடந்தாள்.

கப்பலில் பயணம் செய்த கொள்ளைக்காரர்கள், பூமணியைக் காப்பாற்றினர். ஒரு பணக்காரப் பிரபுவிடம் அவளை அடிமையாக விலைக்கு விற்றனர்.

பூமணியை விலைக்கு வாங்கிய பிரபுவுக்கு மூன்று பெண்கள். அவர்கள் பூமணியின் அழகைப் பார்த்துப் பொறாமைப்பட்டனர். அவளை மாடாக உழைக்க வைத்து சரியான உணவு கூடக் கொடுக் காது துன்பப்படுத்தினர். தேளும் பாம்பும் ஊறிக் கொண்டிருந்த விறகு சேமிக்கும் அறையில் அவளை அடைத்து வைத்தனர்.

அந்த ஊர் ராஜகுமாரனுக்குப் பிறந்த நாள் வந்தது. நகரில் உள்ள எல்லா இளம்பெண்களுக்கும் அழைப்பு வந்தது. காரணம் அவர்களில் ஒருத்தியைத்தான் அவன் தேர்ந்தெடுத்து மணம்புரிந்து கொள்ள இருந்தான்.

மூன்று பெண்களும் தங்களை நன்றாக அலங்கரித்துக் கொண்டனர். ராஜ குமாரனுக்குப் பிறந்த நாள் பரிசாகத் தர விலைமிக்க பொருள்களை எடுத்துக் கொண்டனர். பூமணியை விறகு அறைக்குள் தள்ளிப் பூட்டிக் கொண்டு சென்றனர்.

பூமணி, தன்னுடைய நிலையை எண்ணிக் கண்ணீர் வடித்தாள்.

"கீக்கீக்" என்று சத்தம் கேட்டது. உயரே இருந்த புகைபோக்கியின் வழியாக



உள்ளே நுழைந்த சிட்டுக்குருவி ஒன்று பூமணிக்கு எதிரே வந்து அமர்ந்தது.

"அழாதே பூமணி!" என்றது.

பேசுகின்ற அந்த அதிசயக் குருவியை பூமணி திகைப்புடன் பார்த்தாள்.

"பயப்படாதே பூமணி. நான் உனக்கு உதவி செய்யவே வந்திருக்கிறேன். உனக்கு ஓவியம் வரையத் தெரியும் அல்லவா? எங்கே, கரிக்கட்டியால் இந்தச் சுவரில் ஒரு மந்திரக் கோலின் படத்தைப் போடு" என்றது குருவி.

பொன்மணி போட்டாள். அந்த ஓவியத்தைச் சுற்றிச் சுற்றிப் பறந்து வந்து ஒன்பது முறை கொத்தியது குருவி. உடனே அந்தக் கரிக் கட்டி ஓவியம் உண்மையான மந்திரக்கோலாக மாறியது!

"இந்த மந்திரக்கோலை எடுத்து என் உடலைத் தடவு!" என்றது குருவி.



பூமணி அப்படியே செய்தாள். உடனே குருவி ஓர் அழகான தேவதையாக மாறியது.

"ஒரு மந்திரவாதி என்னை இப்படிக் குருவியாக மாற்றி விட்டான். உன் உதவியால் மீண்டும் பழைய நிலையை அடைந்தேன். உனக்கு ஏதாவது உதவ வேண்டாமா?" என்று கேட்ட தேவதை, அவளைப் பார்த்து வாயால் ஊதியது. அடுத்த கணம் தகதகக்கும் வண்ண உடை அணிந்து அழகுதேவதையாக நின்றாள் பூமணி. அவள் கையில் அழகான பட்டுக் குடை.

"பயப்படாதே பூமணி. எல்லாக் கதவுகளும் உன்னைக் கண்டதும் தானாகத் திறக்கும். நீ நேராகக் கோவிலுக்குப் போ. அரசகுமாரன் சாமி கும்பிட அங்கே வருவான். உன்னைக் கண்டதும், "பிறந்த நாள் விருந்துக்கு வருகிறாயா" என்று கேட்பான். நீ மறுத்து விடு. "எனக்குப் பிறந்த நாள் பரிசாக ஏதாவது கொடு" என்று உன்னிடம் இருக்கும் பட்டுக் குடையைப் பிடித்துக் கொள்ளுவான். அதன் அதிசயமான கைப்பிடி கழன்று உன் கையுடன் வந்து விடும். நீ நேராக இங்கே வந்து விடு. நல்லதே நடக்கும்" என்றது தேவதை.

சாமி கும்பிட ஆலயத்திற்கு வந்த ராஜகுமாரன், அழகுத் தேவதையாக நின்ற பூமணியைப் பார்த்ததும் மயங்கிப் போனான்.

"நீ விருந்துக்கு வரவில்லையா?" என்று தானாகவே வலிய வந்து கேட்டான் அரசகுமாரன்.

"இல்லை."

"எனக்கு இன்று பிறந்த நாள். எனக்கு உன் கையால் ஏதாவது பரிசு கொடேன்" என்று நெருங்கி வந்த அரசகுமாரன், அவள் கையில் இருந்த கண்கவரும் பட்டுக் குடையைப் பிடித்தான். அதன் அழகிய கைப்பிடி, பூமணியின் கையில் தங்கி விட, குடை மட்டும் அரசகுமாரனிடம் போய் விட்டது.

பூமணி தேவதையை நினைத்தாள். அடுத்த நிமிடமே பூமணி பழைய அடிமையாக மாறி விறகு அறைக்குள் இருந்தாள்.

மூன்று பெண்களும் வீடு திரும்பினர்.

"ஆனாலும் அநியாயம். நம்மையெல்லாம் விருந்துககு அழைத்து விட்டு, நம்மை வந்து சந்திக்கக் கூட இல்லாமல் இப்படி அனுப்பி விட்டானே இந்த அரசகுமாரன்!" என்றாள் ஒருத்தி.

"கோவிலில் யாரோ ஒரு பெண்ணைப் பார்த்தானாம். அவளைத்தான் மணந்து கொள்ளுவேன் என்று ஒரே முடிவாகக் கூறிவிட்டானாம்."

"யார் அந்த பாக்கியசாலிப் பெண்?"

"அதுதானே தெரியலே!"

ஏமாற்றத்துடன் திரும்பிய மூன்று பெண்களும் பேசிக் கொண்டதைக் கேட்டு பூமணி மனதிற்குள் சிரித்துக் கொண்டாள்.

குடையை வைத்துக் கொண்டு பூமணியைக் கண்டுபிடிக்க திட்டமிட்ட அரசகுமாரன், அந்த பட்டுக் குடையை

அரண்மனைப் பணியாளர்களிடம் தந்து, "இந்தக் குடைக்கு ஏற்ற கைப்பிடியைக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசு" என்று அறிவிக்கச் சொன்னான். நூற்றுக்கணக்கான குடைப்பிடிகள் வந்தன. எதுவும் அந்தப் பட்டுக் குடைக்குச் சரியாகப் பொருந்தவில்லை. அரசகுமாரன் தானே அந்தப் பட்டுக் குடையை எடுத்துக் கொண்டு தெருத் தெருவாக வந்தான்.

காலையில் பூமணியை எழுப்ப வந்த மூத்த பெண், விறகுக் குவியலில் ஒரு அழகான குடைக் கைப்பிடியைப் பார்த்ததும் எடுத்துக் கொண்டு போனாள். அரசகுமாரன் தெருத் தெருவாக வந்ததும், அந்தக் கைப்பிடியை எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்தாள். அது சரியாகப் பொருந்தியது. பணியாளர்கள் வீட்டைச் சோதனை போட்டு, விறகு அறைக்குள் அடைபட்டுக் கிடந்த பூமணியைக் கொண்டு வந்து அரசகுமாரனுக்கு முன்னால் நிறுத்தினர்.

பூமணி விரும்பியபடி அரசகுமாரன் அவளை அழைத்துக் கொண்டு அவள் தந்தை பொன்னம்பலத்தைப் பார்த்து வரக் கிளம்பினான். அவர்கள் போன போது பொன்னம்பலம் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடந்தார். அக்காக்கள் இருவரும் பூமணியைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாகக் கசப்பை உமிழ்ந்தனர். பொன்னம்பலத்தின் முகத்திலும் வெறுப்புப் படர்ந்தது. பூமணி இதையெல்லாம் பொருட்படுத்தவே இல்லை.

அன்று இரவு நடுநிசி. பொன்னம்பலத்தின் முன்னால் ஒரு ஒளிவெள்ளம் எழுந்தது. எமதர்மராஜன் சிரித்தபடி நின்றார்.

"பொன்னம்பலம், உங்கள் வாழ்நாள் கணக்கு இன்னும் அரைமணி நேரத்தில் முடியப் போகிறது. உங்களுக்கு இன்னும் சிறிது காலம் வாழ ஒரு வாய்ப்புத் தருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. உங்களுக்கு வந்துள்ள இழுப்பு நோயை வாங்கிக் கொள்ள யாராவது மனமுவந்து முன்வந்து புளியம்பூவைத் தலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும்" என்றார் எமன்.

பொன்னம்பலம் மிகுந்த நம்பிக்கையுடன் தனது மூத்த பெண்கள் இருவரையும் அழைத்துக் கேட்டார்.

"ஐயையோ! இந்த இழுப்பு நோயை நாங்க வாங்கிக் கொள்வதா? எங்களால் முடியாது" என்று இருவரும் கைவிரித்தனர். பொன்னம்பலம் ஏமாற்றத்துடன் கூடியிருந்த உறவினர்களிடம் கேட்டுப் பார்த்தார். எல்லோரும் பதில் கூடக் கூறாது எழுந்து சென்று விட்டனர். இதற்குள் மற்றவர்கள் மூலம் செய்தியை அறிந்த பூமணி, அவரிடம் வந்தாள். "அப்பா, உங்கள் இழுப்பு நோயை நான் வாங்கிக் கொள்கிறேன். இதனால் நீங்கள் இன்னும் சில காலம் உயிர் வாழ்வீர்கள் என்றால், இதைவிட எனக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடியது எதுவுமே இல்லை" என்றாள்.

"பூமணி, உனக்காக உன் தந்தையின் நோயை நான் வாங்கிக் கொள்கிறேன். என்னை நீ கண்ணுக்குள் வைத்துக் கவனிப்பாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது" என்று முன்வந்தான் அரசகுமாரன்.

பொன்னம்பலம் உருகிப் போனார்.

"உண்மையான அன்பு எது என்பதை இப்பொழுதாவது நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த நாடகம்" என்று மறைந்தார் எமன்.



**"எதுக்கெடுத்தாலும் "எரிஞ்சு" விழறாரே... அவர் எங்கே வேலை பார்க்கறார்...?"**

**"தீப்பெட்டி" தொழிற்சாலையில்.**

**- இரா. அ. தென்றல் நிலவன்**

# பாம்பு பாம்பு!

இரா. வசந்தராஜன்

"அப்பா... அடிக்காதீங்கப்பா... குமார்கிட்டே சத்தியமா பேச மாட்டேன். இன்னைக்குத் தெரியாம பேசிட்டேன். என்னை விட்டுடங்கப்பா" - ரவி பெரிதான குரலில் அலறினான்.

"எத்தனை தடவை சொல்லியிருக்கேன், பக்கத்து வீட்டுக்காரர்களுக்கும் நமக்கும் காலம் காலமா சண்டை. அதனால அவங்களோட யாரும் பேசக் கூடாதுன்னு? அவங்களும் நம்மளோட பேச மாட்டாங்க. ஆனா நான் சொன்னதை மறந்து அந்தக் குமார்கிட்டே அழகா பேசிண்டு இருக்கியே! எப்படிடா நான் சொன்னது மறந்து போகும்? இன்னொரு தடவை பக்கத்து வீட்டுக்காரங்க யார்கிட்டயாவது நீ பேசறதைப் பாத்தேன், தோலை உரிச்சு உப்புக் கண்டம் போட்டிடுவேன்" - கோபமான குரலில் கத்தி விட்டு அலுவலக அறைக்குள் நுழைந்தார் அப்பா.

அப்பா அடித்த அடியின் வலி பொறுக்க முடியாமல் விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தான் ரவி.

"ரவி..."

கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தான் ரவி.


எதிரே பரத்! ரவியின் அண்ணன். பத்தாவது படிப்பவன். கையில் கிரிக்கெட் பேட். முகம் முழுக்க வியர்வைத் துளிகள்.


"என்ன ஆச்சு? ஏன் அழறே?"

"வந்துண்ணா... அடுத்த மாதம் போகப் போற எங்க ஸ்கூல் எக்ஸ்கர்ஷன் பத்தி, பக்கத்து வீட்டுக் குமார்கிட்ட பேசிக்கிட்டு இருந்தேன். அதை அப்பா பார்த்துட்டு, என்னைப் பயங்கரமா அடிச்சிட்டார்."

பரத்தின் மனம் வெகுவாக வலிக்க ஆரம்பித்தது.

என்ன பெரியவர்கள் இவர்கள்? இரண்





தலைமுறைக்கு முன்பாக எப்பவோ நடந்த சண்டையை இன்னும் மனத்தில் வைத்துக் கொண்டு, பகையை அழிய விடாமல் வளர்த்துக் கொண்டு வாழ்க்கையை நரகமாக்குகிறார்களே! அவர்கள் கொள்ளுத் தாத்தா காலத்தில் நடந்ததாம் அது. இரண்டு வீட்டுக்கும் இடையே கொல்லைப்புறத்தில் ஒரு புளிய மரம் இருந்ததாம். அதில் புளியமரத்தை உலுக்கும் போது நல்ல நாள் பார்க்காது உலுக்கி விட்டாராம் பக்கத்து வீட்டுக்காரர். அதுதான் சண்டைக்கு முக்கிய காரணம். அந்தப் புளிய மரம் கூட இப்பொழுது இல்லை. பகைமைக்குக் காரணமானவர்களும், காரணமாக இருந்ததும், காலமாகி எத்தனையோ ஆண்டு போய் விட்டது. ஆனால், பகை மட்டும் இன்னும் வளர்க்கப்படுகிறது!

பழைய சண்டையை இவர்கள் மறக்கவே மாட்டார்களா? எப்பொழுது இவர்கள் திருந்தப் போகிறார்கள்? கலங்கிய கண்களோடு, தம்பியை அணைத்துக் கொண்டான் பரத்.

ஒரு வாரம் ஓடியது.

மாலை நேரம். சூரியன் பதவியிலிருந்து இறங்கலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அப்பா பாத்ரூமில் சோப் போட்டு முகம் கழுவிக் கொண்டிருந்தார். ரவி எட்டாவது ஆங்கிலப் புத்தகம் வாங்க நண்பனின் வீட்டுக்குப் போய் விட்டிருந்தான்.

செடிகள் மண்டிக் கிடந்த கொல்லைப் பக்கத்தில் அறிவியல் புத்தகத்தை உரத்த குரலில் படித்துக் கொண்டிருந்த பரத், திடீரென்று, "ஐயோ... பாம்பு... பாம்பு... அப்பா வாங்களேன்!" என்று பயம் கலந்த குரலில் ஓலமிட்டான்.

'திக்'கென அதிர்ந்தார் அப்பா.

முகத்தில் பரவியிருந்த சோப் நுரையைப் போக்க, அவசரம் அவசரமாகத் தண்ணீர் மக்கை எடுக்க... அது கை தவறிக் கிழே விழ... கண்களைத் திறக்க

முடியாது, தட்டுத் தடுமாறி மறுபடியும் மக்கைத் தேடி எடுத்து, முகத்தைக் கழுவிக் கொண்டு பதைபதைப்போடு ஓடினார்.

அங்கே...

ஒரு பெரிய பாம்பு கீழே கிடக்க, அதன் தலையை ஒரு பெரிய கோலால் நசுக்கிக் கொண்டிருந்தான் பக்கத்து வீட்டுக் குமார்.

அப்பாவைக் கண்ட குமார் லேசாக வியர்த்தான்.

"சார்... என்னை மன்னிச்சிடுங்க. உங்க அனுமதி இல்லாம உங்க வீட்டுக்குள் நான் வந்தது தப்புத்தான். சுவத்துக்கு அந்தப் பக்கம் நான் படிச்சிக்கிட்டு இருந்தேன். பாம்பு, பாம்புன்னு பரத் கத்தினதும், காப்பாத்தறத்துக்காக சுவர் எட்டிக் குதிச்சுட்டேன். நான் உங்க வீட்டுக்குள் வரக் கூடாதவன் என்பது மறந்து போச்சு. உடனே உதவணும்கற பரபரப்புல சுவர் ஏறிக் குதிச்சு ஓடி வந்திட்டேன். நான் வந்தது நல்லதாப் போச்சு. இன்னும் கொஞ்சம் தாமதமா வந்திருந்தால் என்னவாகியிருக்குமோ? பாம்பை அடிச்சிட்டேன். இனிமே உங்க அனுமதி இல்லாம கண்டிப்பா உங்க வீட்டுக்குள் வர மாட்டேன்."

பயம் கலந்த குரலில் சொல்லி விட்டு குமார் மெதுவாக சுவர் ஏறினான்.

"குமார்..."

அப்பாவின் கரகரத்த குரலைக் கேட்டு வியப்போடு திரும்பினான் குமார்.

"என்னை நீதான் மன்னிக்கணும்பா. என் தாத்தாவுக்கும் உன் கொள்ளுத் தாத்தாவுக்கும் எப்பவோ புளியமரம் காரணமா நடந்த ஒரு சண்டையை முடிவுக்குக் கொண்டு வராம, பகையை மனசுல வச்சிக்கிட்டு, நம்ப இரண்டு வீட்டாரும் இன்னமும் வன்மத்தை வளர்த்து வருவது எத்தனை முட்டாள் தனம் என்பதை நான் உணர்ந்திட்டேன்."

"பரத்தைக் காப்பாத்த சுவர் எட்டிக் குதிச்சு வந்து நீ உன் உயிரைக் கூட பொருட்படுத்தாம, பாம்பை அடிச்சிருக்கியே! இனி நம்ப இரண்டு குடும்பங்களுக்கும் இடையே எந்தச் சண்டையும் இல்லை. நீ பகைமையைப் பாராட்டிக்கிட்டு பேசாம இருந்திருந்தால் பரத்தோட நிலை என்னவாகியிருக்கும்? எனக்குப் புத்தி வந்திடுத்து. உங்கப்பா எத்தனையோ தடவை பழைய பகையை மறந்து பேச வந்தப்போ அவமானப் படுத்தி அனுப்பினது எத்தனை பெரிய பாவம்னு இப்போ உறைக்குது. இதோ... இப்பவே உன் அப்பாவைப் பாத்துப் பேச நான் உன் வீட்டுக்கு வரேன். உள்ளே வாப்பா. பரத்தோட பேசிட்டிரு" - உருக்கமான குரலில் சொல்லி விட்டு அப்பா கிளம்பினார்.

"தெருவுல ஏற்கெனவே யாரோ அடிச்சிப் போட்டுட்டிருந்த ஒரு செத்த பாம்பை யாருக்கும் தெரியாம இங்க கொண்டு வந்து போட்டு, என் அப்பா முகம் கழுவுற சமயமா பாத்து, நாம்ப ஆடின நாடகம் எவ்வளவு பெரிய நன்மையை ஏற்படுத்தி இருக்கு பாத்தியா?" என்று மெல்லிய குரலில் பரத், குமாரைக் கேட்டான்.

"உங்க அப்பா, எங்கப்பாவைப் பார்த்துப் பேசி விட்டுத் திரும்புவதற்குள் இந்தப் பாம்பைக் குழிதோண்டிப் புதைத்து விடலாம். இல்லே குட்டு வெளிப்பட்டாலும் வெளிப்படும்" என்று பரபரத்தான் குமார்.

*''என் பையன், பணத்தை முழுங்கிட்டான் டாக்டர்.''*


*''ரூபா நோட்டுத்தானே...? ஒண்ணும் ஆகாது, விடுங்க.''*

*''ஹீ... ஹீ... எனக்கு இப்பப் பணம் தேவையே டாக்டர்...?''*

*– சீர்காழி வி. ரேவதி*



# எங்கள் ஊரில் நடந்தது!







## நரைக்குக் காரணம்

**“ஏ**ன் அப்பா உங்கள் முடி நரைத்திருக்கு?” என்று கேட்டான் என் தம்பி சங்கர்.

“நீங்க தப்புப் பண்றது னாலதான். சாமி ஒவ்வொரு தப்புக்கும் என்னோட ஒரு முடியை நரைக்க வைக்கிறார்” என்றார் என் தந்தை.

உடனே என் தம்பி, “அதானே பார்த்தேன், தாத்தா வின் தலை முழுவதும் ஏன் இப்படி ஒரேயடியா வெள்ளையா இருக்குன்னு” என்றான். உடனே எல்லோரும் சிரித்தோம்.

**- கே. கருப்பையன், பட்டீஸ்வரம்.**

## எழுவாய்


**எ**ங்கள் தமிழாசிரியரின் நகைச்சுவைப் புலமையும் அறிவாற்றலும், நெஞ்சை விட்டகலாதவை. வகுப்பில் தமிழ் இலக்கணப் பாடம் நடைபெற்றது. ஒரே ஓர் மாணவன் மட்டும், ஆசிரியர் சொல்வதைக் கவனிக்காமல், வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அதை ஆசிரியர் கவனித்து விட்டார்! அந்த மாணவனை அழைத்து, “எழுவாய் பயனிலை, செயப்படுபொருள், இவற்றுக்கு விளக்கம் சொல்லு” என்றார். அவன் விழித்தான்.

“எழுவாய்! - நீ இருக்கையை விட்டு எழுவாய். செய்ப்படுபொருள் - நீ செய்து கொண்டிருக்கும் செயல். அதாவது வேடிக்கை பார்ப்பது. பயனிலை - அதாவது நீ வேடிக்கை பார்ப்பது எதற்கும் பயன்படாது”

என்றார் ஆசிரியர்.

மற்றவர்கள் நகைக்க, அந்த மாண வன் வெட்கத்தால் தலைகுனிந்தான்.

- எல். கோபாலகிருஷ்ணன், அரக்கோணம்.





## டேபிளை எடு!

நான் 11-ஆம் வகுப்பில் படிக்கிறேன். மாலையில் டியூஷன் வகுப்பில் சேர்ந்திருக்கிறேன். டியூஷன் வகுப்பில் வேதியியல் பாடம். ஆசிரியர் வேதியியலில் வரும் கணக்குகளைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். எல்லோரும் நெருக்கியடித்து உட்கார்ந்து கொண்டிருந்தோம். அங்கே இருந்த ஒரு சிறிய எழுதும் மேஜை எங்கள் எல்லோருக்கும் இடைஞ்சலாக இருந்தது. அப்பொழுது ஆசிரியர் திடீரென்று அருகேயிருந்த மாணவனைப் பார்த்து, "அந்த டேபிளை எடு" என்று கூறினார். எங்களுக்கு இடைஞ்சலாக இருந்த எழுதும் டேபிளைத்தான் எடுக்கச் சொல்கிறார் என்று எல்லோரும் எண்ணினோம். அருட்செல்வி என்ற மாணவி உடனே அந்த நாலு கால் டேபிளை எடுத்துத் தூக்கிக் கொடுத்தாள்.

"ஐயையோ" என்று பதறிய ஆசிரியர், "நான் எடுக்கச் சொன்னது லாகிர்தம் டேபிளை ('logarithm table') நாலு கால் டேபிளை அல்ல என்று கூறியதும், அவர் உட்பட அனைவரும் சிரித்தோம்.


- எம். சுஜாதா, பாப்பாரப்பட்டி.




## நான் கூட

ஒருநாள் கடைசி வகுப்பு முடிவதற்காகப் பொறுமையின்றிக் காத்திருந்தேன். காரணம், என் மாமா ஊரிலிருந்து வந்திருந்தார். அன்று மாலை சினிமாவுக்குப் போய் விட்டு அப்படியே ஒரு பெரிய ஹோட்டலுக்குக் கூட்டிப் போய் டிபன் வாங்கித் தருவதாகக் கூறி இருந்தார். மனதெல்லாம் சினிமாவிலும் டிபனிலுமே இருந்தது. ஆசிரியர் பாடக் குறிப்புகளைப் போர்டில் எழுதிக் கொண்டிருந்தார். நான் அதைக் கவனிக்காது சினிமா பார்ப்பதிலும் பெரிய ஓட்டலில் உட்கார்ந்து




சாப்பிடும் மயக்கத்திலும் இருந்தேன். அந்த மயக்கத்தில் என்னையறியாமல் 'மாமா! என்று கூறி விட்டேன். வகுப்பில் உடனே குபீர் சிரிப்பு எழுந்தது. அப்புறம் தான் என கற்பனை கலைய, கலங்கிப் போனேன். டீச்சர், "யார் அது மாமா வைக் கூப்பிட்டது?" என்று கேட்டார். நான் பயந்து போய் நடுங்கியபடி எழுந்து நின்றேன். ஆனால் அதிசயம். டீச்சர் கோபிக்கவில்லை! சிரித்தபடியே, "பயப் படாதே ராமு. நான் கூட உன் வயதில் என் கணக்கு டீச்சரை இப்படித்தான் என்னை மறந்து 'அப்பா' என்று அழைத் திருக்கிறேன்" என்றார். மீண்டும் வகுப் பில் சிரிப்பு அலை எழுந்தது.

**- எம். ஈ. செல்வகுமார்,**
**சென்னை - 116.**

## சுதந்திரத்திற்காக

**எ**ங்கள் தமிழாசிரியருக்கு மருதாணி இட்டுக் கொண்டால் பிடிக்காது. ஒரு முறை மாணவன் ஒருவனை மனப்பாடச் செய்யுள் ஒன்றைக் கேட்டார். அவனுக்கு அது தெரியாமல் போகவே திருதிரு வென்று விழித்தான். அவனை அடிக்க, அவன் கையைப் பிடித்த ஆசிரியர், அவன் மருதாணி இட்டுக் கொண்டிருப் பதைப் பார்த்து விட்டார். உடனே "ஏண்டா மருதாணி இட்டுக் கொண்டே?" என்று கோபத்துடன் கேட்டார். உடனே அந்த புத்திசாலி மாணவன்," சுதந்திர தினம் இந்தியரான நமக்கு எல்லாம் பண்டிகை மாதிரிதானே சார்? அதான் மருதாணி இட்டுக் கொண்டேன் சார்!" என்றான். நாட்டுப்பற்று உணர்வுடன் சொன்ன பதிலைக் கேட்டு ஆசிரியர் அவனைப் பாராட்டி அடிக்காது விட்டார். நாங்கள் அவன் புத்திசாலித்தனமாகத் தப் பித்ததைக் கண்டு வெகுநேரம் சிரித்தோம்.

**- பா. சரவணகுமரன்,**
**திருக்கண்ணங்குடி.**

## தொலைவு

**நா**ன் நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். ஒருமுறை எங்கள் புவி

யியல் ஆசிரியர், வகுப்பில் இருந்த கோபி என்ற மாணவனை எழுப்பி, "இங்கிருந்து அமெரிக்கா அதிக தூரமா, அல்லது 'நிலவு' அதிக தூரமா?" என்று கேட்டார். அதற்குக் கோபி, "அமெரிக்காதான் நிலவை விட தூரம் சார்! ஏன்னா, இங் கிருந்து பார்த்தா நிலா தெரியுது. ஆனா அமெரிக்கா தெரியலையே?" என்றானே பார்க்கலாம். வகுப்பே சிரிப்பலையால் அதிர்ந்தது.

- ப. கணேஷ்ராகவன்,
சென்னை - 19.





## அரை டிக்கெட்

நான் ஒருநாள் பேருந்தில் சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு நிறுத்தத்தில் ஒரு பெரியவரும், நான்கு வயதுச் சிறுவன் ஒருவனும் ஏறினார்கள். "எத்தனை டிக்கெட் வேண்டும்?" என்று கண்டக்டர் கேட்க, "ஒரு முழு டிக்கெட்டும் ஒரு அரை டிக்கெட்டும்" கொடுங்கள் என்றார் அந்தப் பெரியவர். டிக்கெட்டைக் கொடுத்து விட்டு அப்பால் சென்றார் கண்டக்டர். தனக்குக் கொடுத்த அரை டிக்கெட்டை இரண்டாகக் கிழித்தான் சிறுவன். "ஏண்டா, டிக்கெட்டைக் கிழிக் கிறாய்?" என்று தாத்தா கேட்க, "தாத்தா, நீங்கள் ஒரு முழு டிக்கெட்டும், ஒரு அரை டிக்கெட்டும்தானே கேட்டீர்கள்? ஆனால் கண்டக்டர் மறந்து போய் இரண்டு முழு டிக்கெட் கொடுத்து விட் டார். அதனால்தான் டிக்கெட்டை இரண் டாகக் கிழிக்கிறேன்" என்றான் சிறுவன்.

ஒரே சிரிப்புத்தான். அரை டிக்கெட் டின் அளவு, முழு டிக்கெட்டில் பாதியாக இருக்கும் என்பது சிறுவனுடைய நினைப்பு.

- கு. கருணாநிதி, சோழன்மாளிகை.




## ஒரு முள் காணுமே!

என் மாமா பையன் படுசுட்டி. ஒரு நாள் அவனை மணி பார்த்து வரும்படி கூறினேன். உடனே அவன் கூடத்துக்குப் போய்ப் பார்த்து விட்டு வந்து, "மாமா கடிகாரத்துல ஒரு முள்ளைக் காணும். தொலைந்து போச்சோ என்னவோ!"




என்று கூறினான். பதறிச் சென்று நான் பார்த்தேன். மணி பன்னிரெண்டு. ஒரு முள்ளை மற்றொரு முள் மறைத்திருந்தது. அதனால்தான் அப்படிச் சொல்லியிருக்கிறான். வீட்டில் எல்லாரிடமும் இதைச் சொல்லிச் சிரித்து மகிழ்ந்தோம்.

**- பா. ஜெயக்குமார், வந்தவாசி.**


## நீ வாசி!




எங்களுக்கு ஒரு புது ஆசிரியர் வந்தார். அவர் பேசிய தமிழில் கொஞ்சம் புதுமை இருந்தது. மாணவனை எழுந்து படிக்கச் சொல்ல, மாணவனின் பெயரைச் சொல்லி "நீ வாசி" என்பார். வாசி என்றால் படி என்று அர்த்தம். எங்கள் வகுப்பில் நாதஸ்வரக் கலைஞர் ஒருவரின் மகன் படித்து வந்தான். அவர் ஒருநாள் அவனைப் பார்த்து, "நீ வாசி" என்றார். அந்தப் பையன் எழுந்து "எனக்கு வாசிக்கத் தெரியாது சார். எங்க அப்பா மட்டும் தான் எங்கள் வீட்டில் வாசிப்பார். நான் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை" என்றான் கிண்டலாக. நாங்கள் எல்லாரும் சிரித்து விட்டோம்.

**- எஸ். நாகராஜன், மேலப்பாடி.**

## தம்பி கொண்டு வந்த சாவி!




நானும் என் அம்மாவும் கடைத் தெருவிற்குச் சென்று திரும்பி வந்தோம். அப்பொழுதுதான் நர்சரியிலிருந்து என் தம்பியும் வீட்டிற்கு வந்தான். பக்கத்து வீட்டில் சாவியைக் கொடுத்து விட்டுப் போயிருந்தோம். அதனால் என அம்மா அவனிடம், "பக்கத்து வீட்டில் இருந்து சாவியை வாங்கிட்டு வா" என்று கூறி அனுப்பினார். அடுத்த நிமிடம் அவன் கொண்டு வந்த சாவியைப் பார்த்ததும் நாங்கள் அனைவரும் சிரித்தோம். ஏன் தெரியுமா? அவன் கையில் இருந்தது வீட்டுப் பூட்டுக்கான சாவி அல்ல. 'சாவி' பத்திரிகை!

**- எஸ். தட்சிணாமூர்த்தி, நாகலூர்.**


## ஆணா பெண்ணா?

**எ**ங்கள் பள்ளியில் தொலைக் காட்சிப் பெட்டி வாங்கியிருந்தார்கள். தினமும் காலையில் பல்கலைக்கழக மானியக் குழு (UGC) வழங்கும் நிகழ்ச்சியைப் பார்க்க எங்களை அழைத்துப் போவார்கள். எல்லோரும் வரிசையாகப் போவோம். அப்படி அழைத்துப் போன போது ஒரு நாள் மாணவர்கள் எல்லோரும் 'ஆண்' என்றோம். உடனே மாணவிகள் பக்கமிருந்து 'இல்லை இல்லை பெண்தான்' என்று குரல் வந்தது.

எங்களைக் கூட்டிச் சென்ற ஆசிரியருக்கு ஒன்றும் புரியவில்லை. காட்சி தொடங்கியது. சிறிது நேர அமைதிக்குப் பின் பார்த்துக் கொண்டிருந்த மாணவிகளிடமிருந்து 'ஹே' என்று மகிழ்ச்சிக் குரல் எழுந்தது. தொலைக்காட்சியில் பெண் அறிவிப்பாளர்கள் தோன்றினர்.

நிகழ்ச்சி யின் அறிவிப்பாளராக ஆண் அறிவிப் பாளர் தோன்றுகிறாரா அல்லது பெண் அறிவிப்பாளர் தோன்றுகிறாரா என்பதைப் பற்றி நாங்கள் பந்தயம் கட்டுவது வழக்கம் என்று விளக்கினான் ஒரு மாணவன். இதைக் கேட்டு குழப்பம் நீங்கிச் சிரித்த ஆசிரியர் மறு நாளிலிருந்து அவர்கள் போட்டியில் தானும் மாணவர்கள் அல்லது மாணவிகள் பக்கம் கலந்து கொள்ள ஆரம்பித்தார்.


- **ஆர். ஸ்ரீனிவாஸ பிரபு,**
**சென்னை - 90.**




## காரணம்

**எ**ங்கள் வகுப்பிற்குப் புதிதாக சமூக அறிவியல் ஆசிரியர் வந்திருந்தார். அவர், "மாணவர்களே, உங்களை சில கேள்விகள் கேட்கப் போகிறேன்" என்று கூறிவிட்டு, "மேகம் ஏன் கருப்பாயிருக்கு?" என்று கேட்டார். அதற்கு ஒரு குறும்புக் காரச் சிறுவன் எழுந்து, "இப்பத்தான் எங்கும் தண்ணிக் கஷ்டமாச்சே?" அதனால 'அது குளித்து ரொம்ப நாளாயிருக்கும் சார்' என்றான். எங்கள் வகுப்பே சிரிப் பொலியில் ஆழ்ந்தது ஆசிரியர் உட்பட.

- **த. விஜயராஜ்,**
**சோழன்மாளிகை.**





# ரோஜாவின் ராஜா

நேரு நமது நேரு! - மிக்க
நேர்மை யான நேரு!
மேரு போன்ற நேரு!- ரொம்ப
மேதை நம்ம நேரு!

ஆசி யாவின் ஜோதி! - இந்த
அவனி மெச்சும் நேரு!
பேசி டாமல் செயலைச் செய்து
பெருமை சேர்த்த நேரு!

உலகின் உச்சிப் புகழில் - நன்கு
உயர்ந்த வர்தான் நேரு!
கலகம் ஏதும் இன்றிப் - பாரைக்
காக்க முயன்ற நேரு!

அண்டை நாட்டை மதித்து -
அன்பாய்
அணைத்துச் சென்ற நேரு!
சண்டை வந்த போதும் - சற்றும்
சளைத்தி டாத நேரு!

நாந யத்தில் சிறந்து - எதிலும்
நயமு ரைத்த நேரு!
"நாணை யத்தில் நேரு" - என்று
நாடு புகழும் நேரு!

குழந்தை களையே கண்டு - என்றும்
குதூக லிக்கும் நேரு!
குழந்தை "நேரு மாமா"- என்றால்
கொண்டார் இன்பம் நேரு!

அன்பு, அறிவு, ஆற்றல், - தொண்டு
அனைத்தின் உருவம் நேரு!
என்பை பார தத்தில் - தூவ
எழுதி வைத்த நேரு!

காந்தி சீடர் நேரு! - உலகம்
கவர்ந்த காந்தம் நேரு!
சாந்தி வனத்தில் ரோஜா - மலராய்
சதாம ணக்கும் நேரு!

நாட்டு நலனை எண்ணி - நாளும்
நமக்கு உழைத்த நேரு!
பாட்டி னாலே பாடி - மகிழ்ந்து
பலரும் போற்றும் நேரு!

**கோமதி**




# சிரிப்பு!


"காக்கையாரே என் சோகமா இருக்கீங்க?"
"உங்களுக்குப் பயந்து வடையை மரக்கிளையில வச்சிட்டுப் பாடினேனா? அதை எனக்குத் தெரியாம 'அணிலார்' எடுத்துக்கிட்டுப் போயிட்டார்!"
— ஜி.ஆர்.




"என்ன வெடிச் சத்தம் கேட்கும் போதெல்லாம் திரும்பித் திரும்பி பார்க்கறே?"
"வால் பத்திரமாக இருக்கான்னுதான்..."
— தக்கோலம் அ. முஸ்தபா



"எதுக்கு தம்பி இந்த சின்ன வயசுலேர்ந்தே காசை சேமிக்கறே?"
"வருஷக்கடைசியில ஒரு 'காபி' குடிக்கலாம்னுதான்!"
— ஜி.ஆர்.





"உங்க பையன் ஒரு தப்புக் கூட இல்லாம அருமையா லீவு லெட்டர் எழுதறான் சார்."
"அடிக்கடி எழுதறதால பழகிப் போச்சுங்க!"
— சீர்காழி வி. ரேவதி

"பையன், படிப்புல எப்படி சார் இருக்கான்?"
"தமிழ்ல ஷேக்ஸ்பியர்; இங்கிலீஷ்ல திருவள்ளுவர் சார் உங்க பையன்!"
— சீர்காழி வி. ரேவதி



— ஜெ...

## பிரம்பே!

திரைப் படத்தைத் தந்திட்ட
திறமை அறிஞர் பேர்வாழி!
தொலைக் காட்சியை வழங்கிட்ட
திறனே உந்தன் பேர்வாழி!

வானொலி என்ற விந்தையினை
வழங்கிட்ட அறிஞன் பேர்வாழி!
வானில் பறக்கும் சாதனையை
வழங்கிட்ட அறிஞர் பேர்வாழி!

அறிவியல் ஆக்கம் பலவற்றை
அளித்திட்ட வித்தகர் வரிசையிலே
பிரம்பு என்னும் பேர் இடரை
பாருக்கு அளித்தோர் யார் சொல்வீர்?

தாமத மாக வந்தாலும்
தவறுகள் பலவும் செய்தாலும்
ஏனோ எங்கள் ஆசிரியர்
எதற்கும் பிரம்பால் அடிக்கின்றார்!

வன்முறை ஒழிக கோஷங்கள்
வாத்தியார் காதில் கேட்காதோ?
என்னைப் போன்றோர் மனம்மகிழ
எல்லாப் பிரம்பும் மறையாதோ?

- எம். கே. வேங்கவேல்.



## வாழ்ந்திடு!

விடியல் பொழுதில் விழித்திடு
விரைந்து பல்லைத் துலக்கிடு
படித்துப் பாடம் எழுதிடு
பசிக்குச் சோறு தின்றிடு

நோட்டுப் புத்தகம் எடுத்திடு
நன்கு பையில் வைத்திடு
நாட்ட மாகப் பள்ளியில்
நீயும் பாடம் கற்றிடு.

தந்தை தாயொடு ஆசிரியர்
தன்னிகர் இல்லாத் தெய்வங்களாம்
என்றும் இதனை நினைத்திடு
ஏற்றம் பெற்றே வாழ்ந்திடு!

- ஏரிப்பட்டறை இ. எஸ். லலிதா.




## தொலைக்காட்சி

தொலைக் காட்சியைப் பாருங்கள்
தொல்லை மறந்து களியுங்கள்
காலை கூட நிகழ்ச்சிகள்
கண்டு கண்டு களியுங்கள்

எட்டுத் திக்கின் செய்திகளை
எடுத்து வந்து கொடுக்குது.
பாட்டும் படமும் நாடகமும்
பார்க்கப் பார்க்கத் தெவிட்டாது

அம்மா வுக்கு மனைமாட்சி
அப்பா வுக்கு செய்திகள்
அக்கா வுக்கு நாடகம்
அடியேன் காண ஏதுமில்லை!

- பெ. கவிதாபிரியா.





## அன்னை

பெற்றெ டுத்த அன்னையாம்
பெருமை மிக்க அன்னையாம்
உண்மை யான தெய்வமாம்
உலகம் போற்றும் அன்னையாம்!

பாரில் என்னை உயர்த்தவே
பாடு படும் அன்னையாம்
இரவு பகல் இன்றியே
என்னைக் காக்கும் அன்னையாம்

தவறு செய்யின் என்னையே
திருத்தி மாற்றும் அன்னையாம்
இவரை இன்றி யாரைநான்
இறைவ னாகப் போற்றுவேன்?

- B. விஜயசங்கர்.



## பிள்ளையார்

மக்களைக் காக்கும் பிள்ளையார்
மலைமகள் மகனாம் பிள்ளையார்
முத்தமிழ் வளர்த்த பிள்ளையார்
மூஞ்சூறு வாகனப் பிள்ளையார்

கொழுக்கட்டை விரும்பும் பிள்ளையார்
குட்டியே வணங்கும் பிள்ளையார்
எருக்க மாலைப் பிள்ளையார்
எங்களைக் காக்கும் பிள்ளையார்

கரும்பை விரும்பும் பிள்ளையார்
கருணைக் கடவுள் பிள்ளையார்
விரும்பும் அடியார் குறைகளையும்
வேழ முகத்துப் பிள்ளையார்

- க. ஆ. அலமேலு.



## குயிலக்கா


குயிலே குயிலே குயிலக்கா
கொஞ்சம் என்னைப் பாரக்கா
கூவித் தொண்டை வலிக்காதோ?
கொஞ்சம் ஓய்வு கொள்ளக்கா.

பனியோ வெயிலோ ஆனாலும்
பாடிப் பாடிக் கூவுகிறாய்!
மனதின் துன்பம் மறந்திடவே
மனிதரைக் கூட மயக்குகிறாய்!

உலகே வியக்கும் குயிலக்கா
உன்னைப் பாடாக் கவிஞர்உண்டோ?
நலங்கள் எல்லாம் பெற்றேநீ
நன்கு வாழ வாழ்த்துகிறோம்!

- நாகை சங்கர்தயாள்.






## மைலாப்பூக்குப் போகணும்

நாலாம் நெம்பர் பஸ்ஸையே
நாங்க எல்லாம் பிடிக்கணும்
மைலாப் பூருக்குப் போகணும்
மாமா வீட்டைப் பார்க்கணும்

பஸ்ஸுக் காகக் காக்கணும்
பார்த்து மெதுவா ஏறணும்
காசு கொடுத்து டிக்கெட்டை
கவன மாக வாங்கணும்.

மைலாப் பூரில் இறங்கணும்
மந்தை வெளி போகணும்
மாமா வீட்டில் தங்கணும்
மாதம் முழுக்க கற்றணும்!

- லட்சுமி பிரகாஷ்.



## ஆசிய ஜோதி


அலகாபாத்தில் பிறந்தவராம்
அகிலம் போற்றச் சிறந்தவராம்
நலமார் பாரத பூமிக்கே
நாளும் அயரா உழைத்தவராம்!

நேரு மாமா நல்லவராம்
நீதி நேர்மை மிக்கவராம்
பேரும் புகழும் பெற்றவராம்
பாரோர் போற்ற வாழ்ந்தவராம்!

ஆசிய ஜோதி ஆனவராம்
அமைதி காக்க விழைந்தவராம்
மாசே இல்லா சீலராம்
மனிதரில் மாணிக்கம் ஆனவராம்

குழந்தை களோடு குழந்தையாய்
கொஞ்சிக் கொஞ்சி மகிழ்ந்தவராம்
மழலையர் போற்றும் தலைவரிவர்
வாழி! வாழி! வாழிய வே!

- விகூர் மாணிக்கம்.



## வாருங்க!



அம்புலியக்கா அம்புலியக்கா பூமி வாருங்க
அழகுமிக்க பூமி இது காணவாருங்க
எம்மைப் போன்ற சிறுவர்கூட்டம் இங்குஉண்டுங்க
எல்லோருமே உங்கவிசிறி அருகே வாருங்க!

அறிவுஇயல் வளர்ந்தஅழகைக் காணவாருங்க
அதனைக் கொண்டே உம்மைத் தொட்டோம் அறியவாருங்க
பரிவுகொண்டு அழைத்தோம் உம்மை உடனேவாருங்க
பாலர்கூட்டம் காத்து நிற்குது கடியவாருங்க.

- பா. மாதவி.


## வெண்ணிலா

வட்ட வட்ட வெண்ணிலா
வானில் நீந்தும் வெண்ணிலா
கிட்ட வாரா வெண்ணிலா
கூட வரும் வெண்ணிலா

வனப்பு மிக்க வெண்ணிலா
வளர்ந்து தேயும் வெண்ணிலா
மனிதன் இறங்கி நடப்பினும்
மாற்றம் இல்லா வெண்ணிலா.

வெளிச்சம் தரும் வெண்ணிலா
வெள்ளை வண்ண வெண்ணிலா
களிப்புத் தரும் வெண்ணிலா
கவிஞர் போற்றும் வெண்ணிலா

- மு. முகமது அசேன்.









## வாவாவா!

நன்மையே என்னிடம் வாவாவா
நலன்தரா சோம்பலே போபோபோ
அன்பு மனமே வாவாவா
ஆணவச் செருக்கே போபோபோ!

உழைப்பே என்னிடம் வாவாவா
ஏக்கம் இன்மையே போபோபோ
வாழ்த்தும் குணமே வாவாவா
வன்மை தவிர்ப்போம் வாவாவா!

- Jc. P. பாலுவீரபாண்டியன்.





## தெளிவு பிறந்தாச்சு!

பள்ளிக் கூடம் திறந்தாச்சு
பாடப் புத்தகம் வந்தாச்சு
எல்லா வகுப்பும் நிறைஞ்சாச்சு
எங்கும் கவனம் வளர்ந்தாச்சு

மாதத் தேர்வு நெருங்கிடுச்சு
மனதில் பயமும் வந்தாச்சு
நிதமும் படிக்க முடிவாச்சு
நெஞ்சில் தெளிவு பிறந்தாச்சு!

- வி. ர. ரமேஷ்.

## கேட்கட்டுமா டாக்டர்?

**என். எம். பிரதீப், விருதுநகர்.**
**பருத்த உடலைக் குறைக்க மேல்நாடுகளில் 'ஃபார்முலா-4' என்ற மாத்திரை பயன்படுகிறது என்று ஒரு புத்தகத்தில் படித்தேன். இதைப் பற்றி உங்கள் கருத்தைக் கூறுங்கள், டாக்டர்?**

பருத்த உடலைக் குறைக்க 'ஃபார்முலா-4' போன்ற மாத்திரைகளைப் பயன்படுத்துவதில் எனக்கு உடன்பாடு இல்லை. ஏனென்றால் ஒருவருக்கு உடல் பருமனாவதற்குப் பல காரணங்கள் உள்ளன. பருவ வயது, பரம்பரை அம்சம், உணவுப் பழக்கம், உடலுழைப்புக் குறைவு, நாளமில்லாச் சுரப்பிக் குறைபாடுகள், சில மருந்துகளின் பின்விளைவுகள் இப்படிப் பல காரணங்களால் உடல் பருமனாகும். காரணம் தெரிந்து சிகிச்சை பெற்றால்தான் குணமாகும். மாறாக, ஃபார்முலா-4 மாத்திரைகளைப் போன்று விளம்பரங்களை நம்பி சிகிச்சை செய்தால் குணம் கிடைக்காது. அதுமட்டுமின்றி, ஆபத்தான பக்கவிளைவுகளும் (side effects) ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, விளம்பரங்களை நம்பி உங்கள் ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம். விரும்பினால் பருத்த உடலைக் குறைக்க கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றுங்கள். நல்ல பலன் கிடைக்கும் : 1. அளவான உணவை உண்ணுங்கள்; 2. பசித்த பின் உண்ணுங்கள்; 3. கொழுப்புச் சத்துள்ள உணவுகளைத் தவிருங்கள்; 4. அசைவ உணவுகள் வேண்டவே வேண்டாம்; 5. தினமும் காலையிலும் மாலையிலும் உடற்பயிற்சி செய்யுங்கள். முக்கியமாக நடத்தல், ஓடுதல், நீந்துதல், சைக்கிள் ஓட்டுதல் போன்ற பயிற்சிகளைக் குறைந்தது 40 நிமிடங்களுக்கு மேற்கொள்ளுங்கள்.

# எத்தனை முறை எக்ஸ்-ரே எடுக்கலாம்?

**மீனாட்சி அருள்பிரகாசம், கீழ்புவனகிரி.**
**கண்களைச் சுற்றிக் கருவளையம் உள்ளது. இது எதனால் டாக்டர்? இதனைப் போக்குவது எப்படி?**

கண்ணிற்குக் கீழே உள்ள தோலில் 'மெலனின்' (Melanin) என்ற நிறமிகள் மிகையாகப் படிவதால் கருவளையம் விழுகிறது. மருத்துவர்கள் இதனை 'ஜெல்கின்சன் அறிகுறி' (Jelkinson Sign) என்கிறார்கள். தைராய்டு சுரப்பியின் பாதிப்பால் வரும் நோய் நிலைகளில் இது தோன்றுகிறது. சிலருக்குப் பல ஆண்டுகள் தொடர்ந்து கண்ணாடி அணிவதால் கண்ணாடி ஃபிரேம் அழுத்தி, கருவளையம் உண்டாகிறது. இதனைப் போக்க தோல் நோய் நிபுணரிடம் பரிசோதித்துக் காரணம் தெரிந்து சிகிச்சை பெற வேண்டும்.

**எஸ். பாலாஜி, எழுகிணறு.**
**கல்லீரலைச் சுத்தப்படுத்த முடியுமா?**

முடியாது. சிறுநீரகங்களைச் சுத்தம் செய்வதற்குக் கருவிகள் இருப்பதைப் போலக் கல்லீரலைச் சுத்தம் செய்வதற்கு இதுவரை கருவிகள் எதுவும் கண்டுபிடிக்கவில்லை. பதிலாக கல்லீரலில் ஆபத்தான நோய்கள் ஏற்பட்டு அது முழுமையாகப் பழுதாகிவிட்டால், கல்லீரல் மாற்றுச் சிகிச்சை (Liver Transplantation)யை மேல்நாடுகளில் மேற்கொள்கிறார்கள். இந்தச் சிகிச்சை முறை நம் நாட்டிற்கும் விரைவிலேயே வந்துவிடும்.

**எஸ். நந்தகுமார், தானே (பம்பாய்).**
**கீழே குனிந்தாலோ அல்லது படுத்த உடனேயோ எனக்குத் தலை சுற்றுகிறது. இது ஏன்? தவிர்ப்பது எப்படி?**

தலைசுற்றல் பல காரணங்களால் ஏற்படலாம். முக்கியமான காரணங்கள் இவை : 1. உட்செவிக் கோளாறு; 2. 8-வது கபால நரம்பு (செவி நரம்பு) பாதித்தல்; 3. முன்னெலும்பு தமனி நாள அடைப்பு (Vertebral Artery Stenosis); 4. தலையில் காயம்; 5. ரத்த சோகை; 6. ரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறைதல்; 7. நடுச் செவியில் அழற்சி ஏற்பட்டு சீழ் வடிதல்; 8. வெளிச் செவியில் குரும்பி சேர்ந்து அடைத்துக் கொள்வது; 9. ரத்த அழுத்தம் குறைவது; 10. மூளைக்கு ரத்தம்செலுத்தும் ரத்தக் குழாய்களில் அடைப்பு; 11. மிகையான மது. 12. சில மருந்துகளின் பின் விளைவு (உ-ம்) Streptomysin, quinine; 13. மூளையில் புற்றுநோய்க்கட்டி;




இவற்றுள் எந்தக் காரணத்தால் தலைசுற்றல் உண்டாகிறது என்பதை மருத்துவரிடம் நேரில் சென்று பரிசோதித்துக் கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவைப்படும் சிகிச்சை முறைகளையும் தவிர்ப்பு முறைகளையும் உங்கள் மருத்துவரே விளக்கிக் கூறுவார்.

**ஆர். புனிதா, கே. ஆர். புரம்.**

**உண்ணி என்ற பூச்சி கடித்தால் ரத்தம் எடுக்குமா?**

ஆம். உண்ணியின் உணவு ரத்தம். உண்ணி நம்மைக் கடிப்பது ரத்தம் பெறுவதற்குத்தான். சந்தேகமில்லை. உண்ணி உடம்பில் தென்பட்டால் உடனே அதனை அகற்றுவதற்கு வழி பார், புனிதா!




**ஷே. தமின் அன்சாரி, தக்கோலம்.**


**சாதாரணமாக ஒரு மனிதனுக்கு எத்தனை முறை எக்ஸ்-ரே எடுக்கலாம்? அதிகப்படியாக எடுத்தால் என்ன விளைவு ஏற்படும்?**

ஒருவருக்கு இத்தனை முறைதான் எக்ஸ்-ரே எடுக்க வேண்டும் என்ற அளவு எதுவுமில்லை. மாறாக, ஒருவருடைய உடம்பில் இவ்வளவு எக்ஸ் கதிர்கள்தான் செல்ல வேண்டும் என்று ஒரு அளவு உண்டு. இதனை 'Dossimeter' என்ற கருவி மூலம் அறியலாம். இந்தக் கருவியை சட்டையில் தொங்கப் போட்டுக் கொண்டு எக்ஸ்-ரே எடுத்தால் உடம்பில் நுழையும் எக்ஸ் கதிர்களின் அளவை இது காண்பிக்கும். இந்த அளவானது இயல்பு அளவைக் குறிப்பது. இந்த இயல்பு அளவை (Normal Value)க் கடந்






தால், அந்த நபருக்கு எக்ஸ்-ரே எடுக்கக் கூடாது. ஏன், எக்ஸ்-ரே கருவியின் பக்கமே போகக் கூடாது. பொதுவாக எக்ஸ்-ரே எடுத்துக் கொள்ளும் நோயாளிகளைவிட, எக்ஸ்-ரே எடுத்துத் தரும் தொழில்நுட்ப வல்லுனர் (Technicians)களுக்குத்தான் ஆபத்து அதிகம். தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை அவர்கள் பின்பற்றாவிட்டால் 10 லிருந்து 20 ஆண்டுகளுக்குப் பிறகு தோல் புற்றுநோய், ரத்தப் புற்றுநோய் போன்ற ஆபத்துகள் வரலாம். இவை தவிர, கர்ப்பிணிகளுக்கு அடிக்கடி எக்ஸ்-ரே எடுத்தால் கருப்பையில் வளரும் சிசுவுக்குப் பிறவி ஊனங்கள் உண்டாகலாம்.

**டாக்டர் கு. கணேசன்**


வைகாசி
23
20
INDIA
25
PAISE
INDIA







# வரிசைப்படுத்துங்கள் போட்டி

இங்கே மொத்தம் பதினாறு பொருள்கள் இருக்கின்றன. ஒரு பொருளின் கடைசி எழுத்து இன்னொரு பொருளின் முதல் எழுத்து. இப்படிப் பதினாறு பொருள்களையும் வரிசைப்படுத்தலாம். மாறி மாறி இருக்கும் இவைகளை இப்பொழுது ஒழுங்குபடுத்தி எழுதி அனுப்புங்கள். உங்களுக்கு எளிதாக இருக்க முதல் பொருளைக் கூறி விடுகிறேன். சங்கு. கடைசியாக வரும் பொருள் விலங்கு. கூப்பனில்லாது வருபவை ஏற்கப்படமாட்டா. அயல்நாட்டு வாசகர்கள் இந்தியாவில் உள்ள தங்கள் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

## வரிசைப்படுத்துங்கள் போட்டி

பெயர் :......................................................

வயது :......................................................

முகவரி :......................................................

..............................................................

பின்கோடு :..................................................

முடிவு தேதி : 30.11.94



# நேற்று போய்விட்டதே!

மீனாவுக்கு விசித்திரமான குணம். 'நாட்கள் தினமும் ஓடிக் கொண்டே இருக்கின்றனவே. நம்மால் இழந்த நாட்களைப் பெறமுடியவில்லையே' என்று அடிக்கடி மன வருத்தம் அடைவாள். நேற்று முடிந்து போன நாளை நினைத்து இன்று வருத்தமடைவாள். இன்று முடிந்த நாளை, நாளைக்கு எண்ணி வருத்தமும், ஏக்கமும் அடைவாள். இத்தனை கவலைப்படுகிறாளே, ஏதாவது பயனுள்ள செயலைச் செய்வாளா என்றால், அதுவும் மாட்டாள். வெறுமே உட்கார்ந்து எந்த வேலையும் செய்யாது கவலைப்படுவாள். அதோடு சரி.

மீனாவின் மனத்தை மாற்ற பெற்றோரும் ஆசிரியர்களும் எவ்வளவோ முயன்றனர். அப்பா அவளைப் பெரிய டாக்டர்களிடம் சென்னைக்கு அழைத்துக் கொண்டு போய்க் காட்டி வைத்தியம் பண்ணினார். அவளை மாற்றவே முடியவில்லை. எந்த சிகிச்சைக்கும் பலன் கிடைக்கவில்லை.

மீனா மனநோயாளியாக மற்றவரின் கிண்டலுக்கும் ஏச்சுப் பேச்சுக்கும் ஆளாகி வந்தாள். இவ்வளவுக்கும் அவள் படிப்பில் முதல் மூன்று ரேங்க்குக்கள் வந்து விடுவாள்.

மீனாவின் பள்ளிக்குப் புதிதாக ஒரு ஆசிரியை மாற்றி வந்திருந்தார். முதல் வகுப்பிலேயே ஆசிரியைக்கு மீனாவின போக்கு புரிந்து விட்டது. அவளைப் பற்றி மற்றவர்களைக் கேட்டு முழு விவரத்தையும் அறிந்து கொண்டார். மீனாவின் பெற்றோர்களைச் சந்தித்துப் பேசினார். அவர்களின் அனுமதி பெற்று மீனாவைத் தன் வீட்டுக்கு அழைத்து வந்தார்.

மீனா வந்த அன்று, ஆசிரியை மீனாவுக்குப் பிடித்த அவல் பாயசத்தை வைத்து சாப்பாடு போட்டார். மீனாவுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. இரவு அங்கேயே தங்கினாள்.

மறுநாள் மீனா கண்விழித்த போது ஆசிரியை கவலையோடு இருப்பதைக் கண்டாள்.

"ஐயோ, நேற்றைக்குப் போய் விட்டதே என்று நான் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறேன். நீங்களும் என்னைப் போலவே ஏதோ வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் போல இருக்கிறதே!" என்று வியப்புடன் கேட்டாள் மீனா.

"உனக்கு நேற்றைக்குப் போய் விட்டதே என்று வருத்தம். எனக்கு நேற்று வைத்த அவல் பாயசம் ஊசிப் போய் விட்டதே என்று வருத்தம்" என்றார் ஆசிரியை.

"என்ன டீச்சர்! இதுக்குப் போய் இப்படி வருத்தப்படுகிறீர்களே!" என்று கேட்டாள் மீனா.

"நான் வருத்தப்படுவதில் உள்ள நியாயத்தை நீ உணரவில்லையே மீனா? எத்தனை கஷ்டப்பட்டு வைத்தேன்? விலையுயர்ந்த பொருள்களான சர்க்கரை, முந்திரி, ஏலக்காய், நெய், பால் எல்லாம் போட்டு வைத்தேனே? அதைப் பண்ண எத்தனை நேரம் உழைப்பு செலவழிக்கப்பட்டது தெரியுமா?"

"எனக்கும் தெரியுமே. நானும்தானே கூட இருந்து பார்த்தேன்? சின்ன அடுக்கு நிறைய வைத்தீர்கள். அதில் முக்கால் வாசிக்கு மேல் செலவாகி விட்டதே? ஏதோ இரண்டு கரண்டி மிச்சமாகி, ஊசிப் போயிருக்கு. அவ்வளவுதானே?" என்று சுதந்திரமாக ஆசிரியையுடன் விவாதித்தாள் மீனா.

"அது நஷ்டம் நஷ்டம்தானே?"

"எனக்காக நீங்கள் பாயசம் பண்ணினீர்கள். நான் மகிழ்ச்சியாகக் குடித்தேன். இரவு கூட ஒரு டம்ளர் குடித்தேன். அதோடு நீங்கள் சாப்பிட்டீர்கள். பக்கத்து வீட்டு எதிர் வீட்டுக் குழந்தைகளுக்குக் கொடுத்திருக்கிறீர்கள். ஆக, எந்த நோக்கத்தோடு பாயசத்தைப் பண்ணினீர்களோ, அந்த நோக்கம் முழுதுமாக நிறைவேறி விட்டது. அதைப் பற்றி நீங்கள் மகிழ்ச்சியடையாது, ஏதோ கொஞ்சம் வீணாகி விட்டதை எண்ணி வருந்திக் கொண்டிருந்தால் எப்படி?"

"ஏம்மா மீனா, இத்தனை பேசுப் பேசு கிறாயே! நேற்றைக்கு நீ என்னவெல்லாம் பண்ணினாய்? வரிசையாக நினைவுபடுத்திச் சொல்" என்று கேட்டார் ஆசிரியை.

"காலையில் உங்களுக்கு சமையலில் உதவி பண்ணினேன். சாப்பிட்டு விட்டு இருவருக்கும் டிபன் எடுத்து வைத்தேன். உங்கள் புத்தக அலமாரியை ஒழுங்குபடுத்தினேன். வார் அறுந்து போன உங்கள் செருப்பை எடுத்துக் கொண்டு போய், தைத்துக் கொண்டு வந்தேன். உங்களோடு சைக்கிளில் பள்ளிக்கு வந்தேன். கணக்கு வகுப்பில் புதிய வகை பின்னக் கணக்கைக் கற்றேன். ஆங்கில வகுப்பிலும் இரண்டு புதிய கவிதைகள். புவியியல் வகுப்பில் ஆஸ்திரேலியா பற்றிய பாடம். பிறகு உங்களுடன் வீட்டுக்கு வந்தேன். கரி ஏறியிருந்த சாமி விளக்கைத் துடைத்து புதுத் திரி போட்டு ஏற்றினேன். வீட்டுக் கணக்கைப் போட்டேன். நீங்கள் கட்டுரை நோட்டைத் திருத்தும் போது அந்தப் பக்கங்களைப் பிரித்துக் கொடுத்து உதவினேன். சாப்பிட்டோம். படுத்துக் கொண்டோம். அவ்வளவுதான். ஏன் இதையெல்லாம் கேட்கிறீர்கள்?" என்று வியப்புடன் கேட்டாள் மீனா.


"காரணமாகத்தான கேட்டேன் மீனா. நேற்றைக்குப் போய் விட்டதே என்று நீ தினமும் வருத்தப்படுகிறாயே...! நேற்றைக்கு நீ என்னவெல்லாம் பண்ணியிருக்கிறாய் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளத்தான் கேட்டேன். நான் நேற்று உனக்காக வைத்த பாயசம் உன்னை மட்டும் அல்லாது எல்லோரையும் மகிழ்வித் திருப்பது போல், நேற்று நீ உன்னுடைய காரியங்களை கவனித்துக் கொண்டதோடு, மற்றவர்களுக்கும் எந்த அளவுக்கு உதவியாக இருந்திருக்கிறாய் என்பதை நீ அறிய வேண்டும் என்பதற்காகவே கேட்டேன்."


மீனாவுக்கு ஆசிரியை கூறியது புரிந் தது போலவும் இருந்தது. புரியாதது போலவும் இருந்தது.


ஆசிரியை தொடர்ந்தார். "நேற்றைய நாளை, நீ பயன்மிக்க நாளாகவே கழித்திருக்கிறாய் மீனா. உனது கடமைகளைச் செய்திருக்கிறாய். அதோடு மற்றவர்களுக்கும் உதவியிருக்கிறாய். அதனால் நேற்றுக் கழிந்த நாளைப் பற்றி நீ பெருமைப்படவேண்டும் மீனா. நேற்றுப் போய் விட்டதே என்று யார் வருந்த வேண்டும் தெரியுமா? நேற்றைய நாளை, எதுவுமே செய்யாது, சோம்பி இருந்து, வீணாகக் கழித்தவர்களே, 'ஐயோ நமது வாழ்நாளில் ஒருநாள் வீணாகி விட்டதே' என்று வருந்த வேண்டும். உன்னைப் போல் கடமையைத் தவறாது செய்பவர்கள், பிறருக்கு வலிய உதவுபவர்கள் தாங்களும் கவலைப்பட்டு, மற்றவர்களையும் கவலைப்பட வைக்கலாமா?" என்று கேட்டார் ஆசிரியை.


"எனக்கு எல்லாம் புரிந்து போச்சு டீச்சர். நேற்றைக்குப் போய் விட்டதே என்று இனி நான் வருத்தப்பட மாட்டேன். நேற்றயை நாளை நன்கு பயன்படும் வகையில் செல விட்டோம் என்று பெருமை கொள்வேன்" என்றாள் மீனா.

- கே. தீபா




HAPPY DIWALI!



கமலாபுரத்தில் கமலவர்மனின் கொடூர ஆட்சி~
ஏய் வரி கட்டுடா!
விளைச்சலில் லாம கஷ்டப் படறோம்..
ஐயோ, பெண்டாட்டி வளையைக் கழற்றிக் கொடு.. ..ம்..!
கடல் கடந்த மகிபாலன்
அந்த ஊரில் சந்தரசுவாமி-தேவமதி தம்பதிக்குப் பிறந்தவன் மகிபாலன்...
அப்பா! ஏன் அந்த ஆளை அடிக்கிறாங்க?
வரி கட்டலையாம்.
கதை:
படம்:
வீடு திரும்பியதும்
நம்முடைய ஒரு மூட்டை அரிசியையும் கொண்டு போயிட்டாங்க..
அப்பா ஏன் நம் மலைப் பிடுங்கிக் கிட்டாங்க!
இந்த நாட்டை விட்டு என் பெற்றோர் இருக்கும் இடத்துக்குப் போய் விடலாம்!



மாமனார் வீட்டில் வாழ்வது தன்மானக் குறைவாச்சே?
இந்தக் கொடூரச் சூழ்நிலையில் வளர்ந்தால் இவர்கள் உள்ளமும் கொடூரமாகி விடும்.
உண்மைதான்.
வேணும்னா குழந்தைகள் மட்டும் அங்கு வளரட்டும். நாம் அவ்வப்போது சென்று பார்த்து வரலாம். நான் போய் விட்டுட்டு வருகிறேன்.
தேவமதி அதற்கு சம்மதிக்க—
போயிட்டு வரோம்மா.
சீக்கிரமா வந்து பாரும்மா!
குழந்தைகளுடன் குமாரபுரி நோக்கி வழி நடந்தார் சந்திரசுவாமி—
ஹூம்.. ஒரே பொட்டல் காடு!
அப்பா தாகமா இருக்கு.
அப்பா எனக்கும்..!


மங்களா, சந்திராவதியை ஜாக்கிரதையா பார்த்துக்கோ. நான் போய் தண்ணி கிடைக்குமான்னு பார்த்துட்டு வரேன். இந்த இடத்தை விட்டு அசையக் கூடாது. சரியா?
பக்கத்திலுள்ள கருவேலங்காட்டைக் கடந்து, பாதையைவிட்டு வெகுதூரத்தில் ஒரு மூங்கில் புதர்...... அவர் பின்னிருந்து ஒரு குரல்—
மூங்கில் புதர் அருகில் தண்ணீர் கிடைக்கலாம்...!
டேய், யார் நீ?
தண்ணீர் தேடி வந்தேன் ஐயா!
நானும் உன் மாதிரி ஒரு ஆளைத் தேடுறேன்.. உதவுறா!
வேடர் தலைவன் உத்தரவுப்படி...
ஐயோ! என்னை ஏன் கட்டிப் போடறீங்க?
விடிஞ்சா தெரியும்!


அன்றிரவு அவருக்குக் கைகளை மட்டும் அவிழ்த்துவிட்டு~
இந்தா சாப்பிடு.... நாளைக்கு உன்னைப் பலி போடப் போறாங்க!
கடவுளே!
சந்திரசுவாமி தியானத்தில் ஆழ்ந்தார்.
சூரிய பகவானே! தினமும் நான் உன்னைத் துதித்தது உண்மையானால் என் குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்.... அது போதும்.
சூரியோதயத்தின்போது ஒரு ஒளிக்கீற்று தோன்றி–
உத்தமனே வருந்தாதே. விரைவில் நீங்கள் கூடுவீர்கள். நலமும் விளையும்!
வேடர்கள் வந்தபோது, சந்திரசுவாமியைச்சுற்றி ஒரு ஒளிவட்டம்~
என்ன பிரகாசம்! நெருங்க முடியலை!
சுவாமி உங்கள் மகிமை தெரியாமல் நடந்துட்டோம்!
தகிக்கிறது!
மன்னிச்சுடுங்க!
இது ஆதவனின் மகிமை! அவனைப் பூஜியுங்கள்.


சூரியனின் வெப்பம் தணிய...
வேடுவனே! காளிமாதா உயிர்பலி கேட்பவளே இல்லை! அவள் அன்பே உருவானவள்.
மிருகங்களைக் கொல்லாதீர்கள்.
இனி பயிர் தொழில் செய்யப் போகிறோம், ஐயா!
சந்திரா சுவாமியின் குழந்தைகளைத் தன் சகாக்களுடன் தேடப்போன வேடுவர் தலைவன் வெகுநேரம் சென்று வந்து—
எங்கே தேடியும் காணலை சுவாமி.
எத்தனை காலமானாலும் நானே கண்டு பிடிக்கப் போகிறேன். நான் வருகிறேன்.
இதற்கிடையில் கனகபுரி நாட்டின் மந்திரி அனந்தன் அந்தக் காட்டு வழியே போக நேர்ந்த போது—
அடடா! என்ன அழகான குழந்தைகள்...
தண்ணீர் தாகத்தினால் அரை மயக்கமாய் இருக்கிறார்கள் போலிருக்கிறது...


அவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுத்து~
நீங்கள் யார்?
எங்கள் அப்பா தண்ணீர் கொண்டுவரப் போனார். திரும்பி வரவில்லை!
அவரைக் காட்டு மிருகங்கள் கொன்றிருக்கலாம்..-ம்.. இந்தக் குழந்தைகளுக்கும் அந்தக் கதி ஏற்படவேண்டாம்!
என்னோடு கனகபுரிக்கு வந்துவிடுங்கள்! இனி நான்தான் அப்பா!
நிஜ அப்பா வந்து தேடினால்?..
சந்திரா! இனிமேலும் இந்தக் காட்டில் தனியாக இருந்தால் ஆபத்து... ஆண்டவர் தான் இவரை அனுப்பியிருக்கணும். நாமும் இவருடன் போவோம்.
..ம்..



கனகபுரியில்~ மந்திரியின் மனைவி~
அழகான குழந்தைகள்!
நடுக்காட்டில் அனாதையாகக் கிடந்தார்கள்... நமக்கோ குழந்தையில்லை. நம் குழந்தைகளாக வளர்க்கலாம்!
ஆமாங்க! அப்படியே செய்வோம்!
மகிபாலன் கெட்டிக்காரன்! பார், ராஜகளை.. முகத்தில்!
என் சந்திராவதியும் தான்! என்ன அழகு!
ஒரு ராஜகுமாரனுக்கும், அரசகுமாரிக்கும் தெரிய வேண்டிய எல்லாக் கலைகளையும் கற்றார்கள்....
நன்றாக வளர்ந்தனர்~





ஒரு மாலுமியைச் சந்தித்து..
என் குழந்தைகளைப் பத்து வருடங்களாகத் தேடுகிறேன்.
உங்கள் மன உறுதியைப் பாராட்டுகிறேன்!
பல வருடங்கள் கழிந்தபின் சந்திரசுவாமி ஒரு துறைமுகப் பட்டினத்தை அடைந்தார்-
சந்திரசுவாமியையும் தன் கப்பலில் ஏற்றிக் கொண்டார் அந்த மாலுமி-
அதோ மாதிலங்கத் தீவு!
அங்கே தேடலாம்.
தீவில்-
..என்னங்க குழந்தைகள் காணாமப் போய் பத்து வருடம் கடந்து போய் விட்டதே!..
..ம்.. ..உங்க நம்பிக்கை வீணாகக் கூடாது.
சந்திர சுவாமி மனம் தளராமல்...
..சிம்மத்தீவு, சுவர்ணத்தீவு, மரகதத் தீவு என்று தேடித் தேடி அலைந்தார்..



காட்டின் நடுவே ஒரு கோயிலில் சந்திரஸ்வாமி–
துர்கா தேவி! நான் செல்வம் தேடவில்லை. என் குழந்தைச் செல்வங்களைத்தான் தேடுகிறேன்.
அசரீரி ஒலித்தது....
உன் மன உறுதியைப் போற்று கிறேன். உன் குழந்தைகளை விரைவில் பார்ப்பாய்.
என் பாதத்தில் இருக்கும் வாடாத தாமரையை எடுத் துப் போ. அது எந்த விஷக்கடியை யும் குணப்படுத்தும்.
மேலும் பயணம் தொடர–
அதோ அந்த கிராமத்தைத் தாண்டி பத்து காத தூரத்தில் கனகபுரி..
கனகபுரியில்...
என்ன, எல்லாரும் உற்சாகமின்றிக் காணப்படு கிறார்கள்?


மந்திரி அனந்தருடைய வளர்ப்பு மகனை பாம்பு கடித்துவிட்டது என்பதை விசாரித்து அறிந்து –
இது மந்திரி மாளிகைதானே! சீக்கிரம் வழி விடுங்க. அவர் மகனைக் குணப்படுத் தறேன்.
ஓ! நீங்க வைத்தி யரா?
ம்.. உள்ளே போங்க!
அனந்தரிடம் –
கவலை வேண் டாம்!
தேவி அருளால் உயிர் பிழைப் பான்.
தாமரையின் ஸ்பரிசத்தால் குணமாகி எழுந்த மகிபாலன் –
அப்பா!
தேவி தான் என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்தாள்!
அங்கே வந்தாள் சந்திராவதி –
சந்திரா! நம்ம அப்பாம்மா!
அப்பா!
சந்திராவதியா?! என்னமாய் வளர்ந்திருக் கிறாள்!


அனந்தரிடம்
இவர்களை உங்கள் குழந்தைகளாகவே வளர்த்திருக்கிறீர்கள்... நன்றி ஐயா!
அதில் எங்களுக்குக் கிடைத்த மகிழ்ச்சிதான் பெரியது. நாங்கள் தான் நன்றி சொல்லவேண்டும். நீங்கள்தான் பாவம்... தேடி அலைந்து...
நான் வருகிறேன்.
எங்கே அப்பா?
உன் அம்மா இந்நேரம் மனம் ஒடிந்து போயிருப்பாள். அவளைப் பார்க்க...
நான் போய் அழைத்து வருகிறேன் அப்பா!
சில நாட்களிலேயே சேதுமதியை அழைத்து வந்து விட்டான் மகிபாலன்~
அம்மா!
என் கண்மணி!
மறுநாள் அரச சபையில் மந்திரி அனந்தர்~
அரசர் கனகவர்மன் தன் ஒரே மகள் பானுமதியை எல்லா தகுதிகளும் பெற்ற நமது மகிபாலனுக்கு மணமுடிக்க விரும்புகிறார்..
மகிழ்ச்சி!
நன்று!
ஆமோதிக்கிறோம்!


... அதே முகூர்த்தத்தில், அரசர் தன் தங்கை மகன் விஜயதுங்கனுக்கு சந்திராவதியை மணமுடித்து வைத்தார்.
சில காலத்துக்குப் பிறகு –
நாங்க ஊர் திரும்ப வேண்டியிருக்கிறது, மந்திரியாரே!
ஏன்?
எங்கள் நாட்டு அரசர் இறந்துவிட்டதாக செய்தி வந்திருக்கிறது. கமலபுரத்து மக்கள் தலைவரின்றி தவிக்கிறார்கள். அங்கே ஜனநாயகம் மலரச் செய்யப் போகிறோம்!
தேவமதியும் சந்திரசுவாமியும் புறப்பட்டுச் சென்றனர் –
உங்கள் தூய உள்ளமும் நெஞ்சுறுதியும் நிச்சயம் வெற்றியைத் தரும். வாழ்க! வெல்க!

# 2வது சாலை



## 4. புதியவனுக்கு வேலை கிடைத்தது.

பத்தாவது தடவையாக மேஜர் வாசல் பக்கம் வந்து எட்டிப் பார்த்தார். முகத்தில் கவலைக் கருமேகம் அப்பி இருந்தது.

"தாத்தா! இன்னிக்கு இலக்கிய மன்ற விழா முடிஞ்சு... கொஞ்சம் லேட்டாகத் தான் வருவோம். கவலைப்படாதீங்க" என்று சந்திப்பும் அவன் தோழர்களும் காலையிலேயே புறப்படும் போது சொல்லி விட்டுத்தான் சென்றார்கள். ஆனாலும் அதற்காக இத்தனை நேரமா?

வாசல் திண்ணை மாடத்தில் அகல் விளக்கை ஏற்றி வைத்த பாட்டி மீனாட்சி அம்மாளும் பேரன் வராததைக் குறித்து கவலைப்பட ஆரம்பித்தாள்.

"என்னங்க, நீங்க பைக்கிலே ஒரு எட்டு போயி பார்த்துட்டு வாங்களேன்?"

மீனாட்சி அம்மாள் சொல்லி முடிப்பதற்கும், சந்திப்பும் அவன் நண்பர்களும் ராஜா பின் தொடர உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது.

ராஜாவைப் பார்த்து டைகர் ஆக்ரோஷத்தோடு குரைக்க ஆரம்பித்தது.

"அண்ணே! பயப்படாதீங்க புது ஆளைப் பார்த்தா இப்படித்தான் டைகர் குரைக்கும். நீங்க பழகிட்டீங்கன்னா உங்களுக்காக உயிரையே வேண்டுமானாலும் கொடுக்கும்" என்று கூறியபடி டைகரைக் கட்டிப் போட்டான் சந்திப்.

"ஏண்டா இத்தனை நேரம்?"

கேள்வி கேட்ட தாத்தாவிடம் நடந்த விஷயங்கள் அனைத்தையும் விரிவாகச் சொன்னான் முருகன்.

தாத்தாவும் பாட்டியும் திடுக்கிட்டனர். தக்க சமயத்தில் தங்கள் பேரனைக் காப்பாற்றிய ராஜாவை நன்றியோடு பார்த்தனர். பாட்டி உள்ளே சென்று எல்லோருக்கும் காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். சந்திப்பிற்கு தைரியம் சொல்லியபடி நண்பர்களும் தங்கள் வீட்டிற்குக் கிளம்பி விட்டனர்.

ராஜா நாற்காலியில் அமர்ந்து கொண்டிருந்த மேஜரைப் பார்த்தான். ஆறடி

த. ஜானகி

உயரம். சிவந்த மேனி. கறுப்பு பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி. எடுப்பான மீசை. தீட்சண்யமான கண்கள். வயதைக் குறைத்துக் காண்பிக்கும் ஆரோக்கிய மான உடல் அமைப்பு.

"ராஜா, இப்படி உட்காரு. நீ யார்? உன்னை நான் இதற்கு முன்னாடி பார்த் ததே இல்லையே! உனக்கு என்ன வேணும்? என்னை நீ உற்றுப் பார்க்கிறதிலிருந்து நீயும் என்னைப் பார்த்திருக்க மாட் டேன்னு நினைக்கிறேன்?" என்று பேச் சைத் தானாகவே துவக்கினார் மேஜர்.

சற்றுத் தள்ளி தரையில் பவ்யமாக அமர்ந்து கொண்ட ராஜா தாத்தாவைப் பார்த்து இலேசாக முறுவலித்தான். பிறகு தன்னைப் பற்றிக் கூறலானான். அவன் கூறியதிலிருந்து அவர்கள் அறிந்து கொண் டது :

மணப்பாறைக்கு அருகே ஒரு கிராமத் தில் பிறந்து வளர்ந்த ராஜா மழைக்குக் கூடப் பள்ளிக் கூடத்தில் ஒதுங்கியதில்லை யாம். பத்து வயதில் பெற்றோர் இருவரும் இறந்து விடவே அனாதையாகி விட்ட இவனை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பை ஏற்கவோ, உதவவோ சொந்தக்காரர்கள் யாருமே முன் வரவில்லையாம். எப்படியோ கூலி வேலை செய்து ஊர் ஊராகச் சுற்றி காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தானாம். விராலி மலை முருகனைக் கும்பிட்டா வழி பிறக்கும் என்று யாரோ சொல்லவே நேற்றுத்தான் விராலி மலைக்கு வந்தா னாம். இன்று மதியம் கோவிலில் வேலை செய்யும் ஒருவன் அத்தியூர் கிராமத்தைப் பற்றியும், மேஜர் தேவநாதனின் செல் வாக்கு பெருந்தன்மையைப் பற்றியும், அவ ரிடம் சென்றால் நிச்சயம் ஏதாவது ஒரு வேலை கிடைக்கும், சாப்பாடும் கிடைக் கும் என்றும் அவனிடம் சொன்னானாம். அதனால் உடனே அவரைப் பார்க்க மாலை யில் கிளம்பி காந்தி ரோடு வழியாக வரும் போதுதான், முகமூடி அணிந்த ஒருவன் கத்தியைக் காட்டி சந்திப்பை மிரட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தானாம்.

பிறகு நடந்தது எல்லாம் எல்லோருக் கும் தெரிந்ததுதானே!

எல்லோருக்கும் சாப்பாடு தயார் பண்ண பாட்டி உள்ளே சென்றாள்.

இரவு மணி எட்டிருக்கும். ஹாலில் தாத்தா, பேரன், ராஜா மூவரும் சாப்பிட அமர்ந்தனர். வாழை இலையில் சுடச் சுட பொன்னி அரிசிச் சாதம், முருங்கைக் காய் சாம்பார், கத்தரிக்காய் பொறியல் ஆகிய வற்றை பாட்டி மீனாட்சி அம்மாள் பரிமாறினாள்.

"தம்பி! இது உங்க வீடு மாதிரி. கூச்சப் படாம நல்லா சாப்பிடு" என்று கூறியபடி பாட்டி இன்னும் கொஞ்சம் சாம்பாரை ராஜாவின் இலையில் ஊற்றினாள்.

ராஜாவுக்கு நல்ல பசி போலும். பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"ராஜா, இன்னிக்கு உன்னால தான் சந்திப்புக்கும் அவனோட நண்பர்களுக் கும் வந்த ஆபத்து நீங்கிச்சு. நான் இராணு வத்திலே வேலை பார்த்தவன். நேருக்கு நேர் தாக்கறவனைத்தான் நான் வீரன்னு சொல்வேன். இப்படி மறைமுகமா தாக் கறது கத்தக் கோழைத்தனம். இந்தக் கோழைய ஒரு நாள் கட்டாயம் கண்டு பிடிச்சே தீருவேன்" என்றார் மேஜர். அவரது கண்கள் கோபத்தினால் சிவந்தன!

ராஜா பேசாது அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். "சாரி ராஜா. என் மன நிலை யிலே ஏதோதோ பேசிட் டேன். என்னை நம்பி நீ வந்துட்டே. அதோட, வரும் போதே ஒரு துணிச் சலான நல்ல செயலை யும் பண்ணி, என் பேரனின் உயிரைக் காப் பாத்திட்டே. உனக்குக்



"மத்தாப்பு கொளுத்தணும்; பட்டாசு சுடணும் கற என்னோட ஆசை, எப்பம்மா தீரும்?"

— சுதர்ஸன்



கண்டிப்பா ஏதாவது வேலை தரேன். இன்னிக்கு ராத்திரி வாசல் திண்ணையிலே கட்டில்லே படுத்துக்கொள்! காலையிலே பார்க்கலாம்."

"சரிங்க ஐயா!" என்றான் பணிவான குரலில் ராஜா.

இரவு அந்த வீட்டில் மூன்று பேருக்குச் சரியாக உறக்கம் வரவில்லை.

இனிமேலாவது பேரனுக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாது என்று வேண்டியபடியே புரண்டு புரண்டு படுத்தாள் பாட்டி மீனாட்சி அம்மாள்.

புதிய இடம். மனதில் பல வித எண்ணங்கள். எதிர் காலம் பற்றிய கவலை ஆகியவற்றால் மன உளைச்சல் பட்டுத் தூக்கம் வராமல் புரண்டு படுத்தான் ராஜா.

கடைசியாக மேஜர். தன் பேரனைக் கடத்த நினைக்கும் அந்த எதிரி யார்? எதற்காக அவன் தன் பேரனைக் கடத்த முயற்சிக்கிறான்? அவனைக் கண்டு பிடிக்க முடியுமா? போலீசில் சொல்லி சந்தீப்பிற்கு பள்ளிக்கூடத்திற்குப் போகும் போதும் வரும் போதும் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்தால் என்ன? - என்று என்னென்னவோ யோசித்தபடியே மேஜர் புரண்டு படுத்தார்.

ஆறாவது விரல் மனிதனைப் பற்றிய சந்தேகத்தைத் தாத்தாவிடம் சொல்லி விட்டதால் நிம்மதியாக உறங்கினவன் சந்தீப் மட்டும்தான்.

மறுநாள் காலை. ஆறரை மணி சுமாருக்குக் கண் விழித்த ராஜா திடுக்கிட்டு எழுந்தான்.

"தம்பி! பின் பக்கம் போய் பல் வெளக்கிட்டுவா. காப்பி தயாரா இருக்கு" என்று பாட்டி மீனாட்சியம்மாள் கூறவே வீட்டின் பின் பக்கம் சென்றான்.

கிணற்றில் நீர் இறைத்து முகம் கழுவிக் கொண்டான். அருகில் பல் பொடி டப்பா வைக்கப்பட்டிருந்தது. பல்லைத் தேய்த்தபடியே பார்வையை ஓட விட்டான்.

பின்னால் பெரிய தோட்டம். அதற்கு

அருகில் மாட்டுக் கொட்டகை. இரண்டு பெரிய சீமைப் பசுக்கள் கொழு கொழு வென்று காட்சியளித்தன.

பல்லை விளக்கி விட்டு அந்தப் பெரிய வீட்டைப் பார்த்து வியந்தபடியே உள்ளே நுழைந்தான். ஹாலில் மேஜரின் போட்டோவுக்குப் பக்கத்தில் காந்தியடிகள் போட்டோ. சந்தனமாலை போடப்பட்டிருந்த அதையே சில வினாடிகள் பார்த்துக் கொண்டிருந்தான். மீனாட்சி அம்மாள் கொடுத்த காப்பியை வாங்கிக் குடித்தான்.

"நிறைய பால் போட்டிருக்கீங்க. காப்பி நல்லாவே இருக்கு" என்று கூறியபடி காப்பி டம்ளரைக் கீழே வைத்தான்.

"பால் குடிச்ச வீட்டுக்கு யாரும் பாதகம் செய்யக் கூடாதாம். அது அந்தக் காலப் பழமொழி. காப்பி குடிச்ச வீட்டுக்குக் களங்கம் நினைக்கக்கூடாதாம். இது இந்தக் காலப் பழமொழி. அதனால்தான் எங்க வீட்டுக்குப் புதியவங்க யார் வந்தாலும் முதல்லே எங்க பாட்டி நிறைய பால் போட்டு நல்ல காப்பியாவே கொடுப்பாங்க" என்றான் சந்திப் தானும் காப்பியைக் குடித்தபடி.

அங்கு வந்த மேஜர், ராஜாவைப் பார்த்து, "ராஜா! ராத்திரி நல்லா தூங்கினையா?" என அன்பும் அக்கறையும் கலந்த குரலில் வினவினார்.

"புது இடம் இல்லே. ரொம்ப நேரம் தூக்கம் வரலீங்க. அப்புறமா என்னையறியாம கண் அசந்திருக்கேன். அதனாலதான் நேரங்கழிச்சுத்தான் முழுச்சுக்கிட்டேங்க."

"இந்தக் கிராமத்துக்குக் கடைசியிலே பெருமாள் கோவில் இருக்கு. அதிலே வேலை பார்த்துக் கொண்டிருந்த முத்து சாமி ஒரு மாசம் லீவு கேட்டுக் கொண்டு சொந்த ஊருக்குப் போயிருக்கான். தன் பேத்தி கல்யாண வேலையை எல்லாம் முடிச்சுட்டுத்தான் வருவான். அவன் திரும்ப வரும்வரை திரும்ப தற்காலிகமா இந்த வேலையைச் செய்துகிட்டிரு! அப்புறமா வேற வேலை ஏதாவது ஏற்பாடு செய்யறேன்."

"சரிங்க ஐயா!"

"உனக்கு என்ன வேலை தெரியுமா? தினம் காலையிலே கோவிலைப் பெருக்கி, வாசல்லே தண்ணீர் தெளிச்சு சுத்தமா வைக்கணும். கோவில் பிரகாரத்திலே நிறைய பூச்செடிகள் இருக்கு. அத்தனை பூக்களையும் பறிச்சு பூஜைக்குக் கொடுக்கணும். பூச்செடிகளுக்கும், அங்கு இருக்கிற பத்து தென்னங் கன்று களுக்கும் தண்ணி ஊற்ற ணும். சுருக்கமா சொன்னா கோவிலையே நீதான் பார்த்துக்கணும்!"


"செய்யறேங்க."

"இந்தத் தெரு மூலையிலே சண்முகம்னு ஒருத்தன் டீக்கடை வெச்சிருக்கான். அந்தக் கடையை வைக்க நான்தான் அவனுக்கு உதவி செய்திருக்கேன். அவன் கிட்டே விவரமா எல்லாம் சொல்லியிருக்கேன். காலைக்கும் ராத்திரிக்கும் அங்கேயே சாப்பிட்டுக்கோ. மத்தியானம் குருக்கள் அய்யா கோவில்லே சாமிக்குப் படைச்ச சாப்பாட்டை உனக்குக் கொடுப்பாரு."

ராஜா ஆவலுடன் கேட்டுக் கொண்டிருக்க மேஜர் தொடர்ந்தார்.

"கோவிலை ஒட்டி முத்துசாமி இருந்த வீட்டையே திறந்து விடச் சொல்லியிருக்கேன். அதுலையே தங்கிக்க... தினம் நம்ப வீட்டுக்கும் வந்துட்டுபோ. அம்மா ஏதாவது வேலை சொன்னாங்கன்னா அதையும் செய். இந்தா உன் கைச் செலவுக்கு ஐம்பது ரூபா. அப்புறமா கணக்கு பார்த்துப் போட்டுத் தரேன்."

"உங்களை நம்பி வந்ததுக்கு எனக்கு எம்புட்டு உதவி செய்யறீங்க! ரொம்ப நன்றிங்க ஐயா."



**"தாத்தா குறிபார்த்துப் பற்றவைப்ப தற்குள் வலை பின்னிடலாம்..."**

**- சுதர்ஸன்**





கூறியபடி ரூபாய் நோட்டைப் பெற்றுக் கொண்டான் ராஜா.

"என் பேரனைக் காப்பாத்திய உனக்குத்தான் நான் நன்றி சொல்லணும். சரி... கிளம்பு. குருக்கள் ஐயா கிட்டேயும் சண்முகத்துகிட்டேயும் உன்னை அறிமுகம் செய்து வைக்கிறேன்."

"இதோ வரேனுங்க."

ராத்திரி பெஞ்சு ஓரமாக வைத்திருந்த தன்னுடைய அழுக்குப் பையை எடுத்துக் கொண்டு ராஜா கிளம்பினான்.

அடேயப்பா! இந்த ஒரு வாரம் என்ன வேகமாக ஓடிவிட்டது!

மேஜர் பயந்தபடி நிகழ்ச்சிகள் ஒன்றும் நடைபெறவில்லை. ஆனாலும் அவர் அடி மனத்தில் ஒரு சந்தேகத் தீ புகைந்து கொண்டே இருந்தது. ஒருவேளை சிறையிலிருந்து தப்பி வந்த சக்ரவர்த்தி என்ற கைதிதான், ஏதோ ஒரு காரணத்திற்காகத் தன் பேரனைக் கடத்த இப்படியெல்லாம் முயற்சி செய்திருப்பானோ? மகனுக்கு போன் போட்டோ கடிதம் போட்டோ கேட்கலாமா என்று நினைத்தார். ஆனால் அப்படிச் செய்தால் மகன், சந்தீப்பைப் பற்றிக் கவலைப்படுவான் என்ற எண்ணம் தோன்றவே அந்த நினைப்பை மாற்றிக் கொண்டார். எனினும் விராலி மலை காவல் நிலையத்தில் தன் சந்தேகத்தைத் தெரிவித்தார். சந்தீப்பிற்கு பள்ளிக்கு வரும் போதும் போகும் போதும் போலீஸ் பாதுகாப்பு அளித்தார் இன்ஸ்பெக்டர்.

ராஜா தனக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளைச் செவ்வனே செய்து வந்தான். அவன் கோவிலைத் தூய்மையாக வைத்திருந்தது மேஜருக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. தினம் வீட்டிற்கு வந்து சொன்ன வேலைகளைச் செய்ததால் பாட்டி மீனாட்சி அம்மாளுக்கும் அவனைப் பிடித்ததிருந்தது. சமயத்தில் தன்னைக் காப்பாற்றியதால் சந்தீப்பிற்கும் அவனைப் பிடித்திருந்தது. டைகரும் ராஜாவுடன் பழகிக் கொண்டு விட்டது. ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை அவனுடைய நண்பர்கள் முருகனுக்கும் அகமதுக்கும் மட்டும் ராஜாவை அவ்வளவாகப் பிடிக்கவே இல்லை. இருந்தாலும் ஆபத்தான சமயத்தில் தங்கள் உயிர் நண்பனைக் காப்பாற்றியவன் என்ற நன்றி உணர்வில் அன்புடன் பழகி வந்தனர்.

ராஜாவுக்கு முதலில் கிராமம் பிடிக்காமல்தான் இருந்தது. எரிச்சலும் கோபமும் வந்த பொழுது தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். நான்கே நாட்களில் கிராமத்தின் மூலை முடுக்கெல்லாம் அவனுக்கு அத்துபடியாகி விட்டது. கிராமத்தில் மேஜருக்கு நல்ல செல்வாக்கு இருப்பதை அறிந்தான். மெதுவாக கிராம வாழ்க்கை அவன் மனதை ஈர்த்தது.

சந்தீப்பும் அவன் நண்பர்களும் ராஜாவிடம் நெருங்கிப் பழக ஆரம்பித்தனர். அவனுடைய பட்டிக் காட்டுத்தனமான வெகுளிப் பேச்சு அவர்களுக்குப் பிடித்திருந்தது. காலையும் மாலையும் பள்ளி சென்று திரும்பி வரும் அவர்களைச் சந்திக்க நண்பர்களும் தவறுவதில்லை.

அன்று புதன் கிழமை. கோவில் வேலைகளை முடித்துக் கொண்டு சண்முகத்தின் கடையில் டிபன் சாப்பிடுவதற்காகக் கோவிலை விட்டு ராஜா வெளியே வருவதற்கும், சந்தீப்பும் அவன் நண்பர்களும் கோவிலின் வாசல் பக்கம் வருவதற்கும் சரியாக இருந்தது.

"வணக்கம் அண்ணே!" என்றான் டேவிட்.

"இந்த ஊர் உங்களுக்கு பிடிச்சுருக்குங்களா?" இது மயிலு.

ராஜா பதில் சொல்லாமல் தங்கள் சைக்கிளையே உற்றுப் பார்ப்பதை இருவரும் கவனித்து விட்டனர்.

"என்ன பார்க்கறீங்க அண்ணே?"

> **"பயப்படாம தீ வைப்பா! நான் உன்னை கெட்டிமா புடிச்சுக் கிறேன்..."**
>
> — சுதர்ஸன்

என்று கேட்டான் மயிலு.

"நானும் தெனம் உங்களைக் கவனிச்சுக்கிட்டுத்தான் வரேன். தெனமும் கலர் கலரா இருக்கும் இந்த பிளாஸ்டிக் பாட்டில்லே தண்ணி கொண்டு போறீங்க. ஏன் ஒங்க ஸ்கூல்லே குடிக்க தண்ணி கெடைக்காதா?"

"இப்ப சமீப காலமா தண்ணீர் கிடைக்கிறதில்லை!"

"அப்படியா?"

"ஆமா அண்ணே. எங்க பள்ளிக் கூடத்திலே ஒரு பெரிய கேணி இருக்கு. தண்ணீர் பாதாளத்திலே கொஞ்சமாக இருக்கு. ஆயிரம் பேர் படிக்கிறோம். அதோட சத்துணவு சமைக்கவும் தண்ணி தேவையாக இருக்கு. அதுக்கு என்று ஒரு போரிங் பைப்பு போட்டாங்க. ஆனா, அதிலேயும் தண்ணீர் நன்றாக வரமாட்டேங்குது. அதனால எங்க ஹெட் மாஸ்டர் மாணவர்கள் எல்லாரையும் தண்ணீர் கொண்டு வரச் சொல்லி விட்டார். அதனாலதான் நாங்க தினமும் புஸ்தகம், டிபனோட தண்ணியையும் சுமக்கிறோம்," என்றான் சந்தீப்.

"அந்தக் கேணிய ஆழப்படுத்தி தூர் எடுக்க முடியாதா?"

"ஓ செய்யலாமே. ஆனா, அதுக்கு ஐம்பதாயிரம் ஆகும் என்று எங்க ஆசிரியர் சொன்னார்.

"அம்புட்டுப் பணம் ஆகுமா? அடேங்கப்பா...?

"ஆமா அண்ணே! இன்னும் முப்பது நாற்பது அடி ஆழத்துக்கு ஆழமா வெட்டினால்தான் தண்ணீர் நல்லா வருமாம். மோட்டார் போட்டு மேலே தொட்டி கட்டி, தண்ணிய மேலே ஏத்தி எப்ப வேண்டுமானாலும் தண்ணீர் குடிக்க பத்து இருகு குழாய்களைப் போட வேண்டுமாம். இதுக்கு எல்லாம் செலவு ஐம்பதாயிரம் ஆகாதா என்ன?"

"பெரிய பெரிய பேச்செல்லாம் பேசறீங்க! எனக்கு எங்கே வெளங்குது?"

"உங்களுக்கு விளங்கா விட்டால் பரவாயில்லை. உங்க கிட்டே பணம் இருந்தா இந்த வேலைக்குப் பணம் கொடுத்து விடுவீங்களா?" என்றான் முருகன்.

"என் கிட்டே இருந்தா கண்டிப்பா கொடுத்துப்புடுவேன். ஆனா காசுக்கு எங்கே போகறது? எனக்கு லாட்டரி சீட்டிலே கூடப் பரிசு விழாதே!"

"டாட்டா" சொல்லியபடி இவரும் பள்ளிக்குக் கிளம்பினர்.

**ம**றுநாள் வியாழக் கிழமை காலை. சந்தீப் வீட்டிற்கு அகமது வந்தான். சந்தீப்பை வாசல் பக்கம் அழைத்துக் கொண்டு வந்து மெதுவான குரலில் சொன்னான்.

"சந்தீப்! நேற்று ராத்திரி எங்க வாப்பா விராலிமலையிலே ராஜாவைப் பார்த்தாராம்."

"என்ன...! நிஜமாவா?"

"எங்க வாப்பா மதுரைக்குப் போயிருக்கார்னு சொன்னேன் இல்லே. நேற்று ராத்திரி ஒன்பது மணிக்கு மதுரையிலேந்து விராலிமலைக்கு வந்திருக்காரு. நம்ப கிராமத்துக்கு வர வாடகை சைக்கிளை எடுக்கப் போனாராம். அப்ப எஸ்.டி.டி. பூத்திலே ராஜா அண்ணன் யாரா கிட்டயோ போன்லே பேசிக்கிட்டிருந்தாராம். அந்த அண்ணன் எங்கப் பாவைப் பார்க்கலையாம். ராத்திரியே வீட்டுக்கு வந்த எங்க வாப்பா எங்கிட்ட சொன்னாரு."

"நம்பவும் முடியலே! நம்பாம இருக்கவும் முடியலேயே? எதற்கும் நாம் பள்ளிக்கூடம் போகும் போது கேட்டுப் பார்ப்போமா?"

"சந்தீப்! நீ வழக்கம் போல ஏதாவது பேசிக் கொண்டிரு. நான் கேட்டுப் பார்க்கிறேன். என்ன சரியா?"

"அப்படியே செய்வோம்."

அகமது வேகமாகத் தன் வீட்டை நோக்கி நடக்கலானான்.

(தொடரும்)




தீபாவளி என்பது இந்தியாவின் எல்லாப் பகுதி மக்களும் கொண்டாடும் பண்டிகை என்றாலும், வடமாநிலங்களில் குறிப்பாக மகாராஷ்டிராவில் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுவது. தொழிலாளர், முதலாளி என்று எல்லாத் தரப்பு மக்களிடமும் பணம் புரளும் மாதத்தில் இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. தமிழ்நாட்டில், புதுமணமானவர்கள் தலை தீபாவளி கொண்டாடுவதைப் போல் மகாராஷ்டிராவில் மாப்பிள்ளைகளுக்கு மாமனார் வீட்டில் சிறப்பான வரவேற்பு தரப்படும். சீர் நகைகள், பலகாரம், புதுச் சட்டை, பணம் என்று எல்லாப் பரிசுகளும் உண்டு. இவை ஆண்டுதோறும் நடக்கும்.

அப்படித்தான் அந்த மாப்பிள்ளைக்கும் சீர்வைக்க மாமனார் எல்லா ஏற்பாடுகளையும் செய்ய ஆசைப்பட்டார். எதிலும் குறை வைக்கக் கூடாது என்பதற்காகத் தான் செய்துள்ள எல்லா ஏற்பாடுகளையும் மாப்பிள்ளையிடம் கூறி, மேலும் அவருக்கு என்ன தேவை என்று மாமனார் கேட்டார்.

தனக்கு தீபாவளிச் சீதனம் என்று பணமோ, நகையோ, துணிமணிகளோ தேவை இல்லை என்று உறுதியாகக் கூறி விட்டார் மாப்பிள்ளை. மாமனாரின் கவலை அதிகமாயிற்று. இப்படிப் பேருக்குக் கூறிவிட்டு, ஒரு வீட்டையோ, இல்லை அயல்நாட்டுக் காரையோ தீபாவளிச் சீதனமாகக் கேட்கும் பல மாப்பிள்ளைகளைப் பற்றி மாமனார் அறிந்திருந்தார். அந்த மாதிரி ஏதாவது கேட்டுத் தன்னைக் கடனாளியாக்கிவிடுவாரோ என்று கலங்கினார் மாமனார்.

"பணமோ, நகையோ, துணிமணிகளோ வேண்டாம் என்றாலும், தீபாவளிச் சீதனமாக எதையாவது நீங்கள் வாங்கிக் கொண்டே ஆகவேண்டும். அதுதான் எங்களுக்கு மகிழ்ச்சி; பெருமை" என்று வற்புறுத்தினார் மாமனார்.

"அப்படியானால் தீபாவளிச் சீதனமாக ஒரு புத்தகத்தை வாங்கிக் கொடுங்கள். எனக்கு அது போதும்," என்றார் மாப்பிள்ளை. இப்படியும் ஒரு மாப்பிள்ளையா? என்று வியந்த மாமனார், மாப்பிள்ளை கேட்ட புத்தகத்தை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தார். அந்தப் புத்தகம் என்ன தெரியுமா? பகவத் கீதையின் திருத்திய பதிப்பு!

அந்த அதிசய மாப்பிள்ளை எளிமைக்கு ஓர் உதாரணமாகத் திகழ்ந்தார். அவரது சொல்லுக்கு இந்திய நாடே கட்டுப்பட்டுக் கிடந்தது. நாவன்மையாலும், எழுத்துத் திறத்தாலும் இந்திய நாட்டின் மக்களை, சுதந்திர இந்தியாவைப் பெற அவர் தயாராக்கினார். "சுதந்திரம் எனது பிறப்புரிமை" என்று அவர் முழக்கமிட்டதைக் கேட்டு ஆங்கில அரசாங்கம் கலங்கியது. அவரைச் சிறையில் இட்டது. சிறையை அவர் தவச் சாலையாக அமைத்துக் கொண்டார். சிறையில், கூட இருந்த தொண்டர்களுக்கும், ஏன் வார்டன்களுக்கும் கூட அவர் மராத்தி பாடம் கற்பித்தார். இராமாயணத்தையும், பகவத் கீதையையும் மராத்தியில் மொழி பெயர்த்தார்.

மாமனாரிடம் தீபாவளிச் சீதனமாக பகவத் கீதையைக் கேட்டு வாங்கிக் கொண்ட இந்த அதிசய மாப்பிள்ளை வேறு யாரும் இல்லை. லோகமான்ய பால கங்காதர திலகர்தான்.

- ஆர். செல்வராணி.

# எத்தனை பெருமை!



புதிய ஆடை அணிவதுவும் - காது
பொடிபட வெடிகள் கொளுத்துவதும்
விதியாய் தீபத் திருநாளில் - நாம்
விரும்பிச் செய்யும் குறும்புகளாம்.

இனிப்பை உண்டுகளிப்பதுவும் - இன்னும்
எழுத்தால் வாழ்த்தை உரைப்பதுவும்
நினைப்பே மகிழ்ச்சி வெள்ளமென -
நெஞ்சில்
நிற்பதும் தீபத் திருநாளாம்

பெரியவர் தம்மை வணங்குவதும் - பின்னர்
பிழையறக் கோயிலைச் சுற்றுவதும்
நெறிமுறை தீப நந்நாளில் - இவை
நிச்சயம் போற்றப் படவேண்டும்.

மற்றும் இன்னோர் நல்லுணர்வும் - நம்
மனத்தில் புகுந்தால் மதிப்புண்டு
பற்றும் வளரும் பாசத்தில் - மனம்
பாகாய்க் கரையும் நேசத்தில்

இல்லா ஏழைச் சிறுபிள்ளை - தன்னை
இதயம் கனிய அழைத்து வந்து
சொல்வால் செயலால் பண்டிகையை -
நாம்
சுகமாய்க் களிப்போம் உடனிருந்து


எத்தனை மகிழ்ச்சி அவன் முகத்தில் -
காண
எத்தனை பெருமை நம் மனத்தில்
வித்தையும் இல்லை விளைவிதுவும் -
இந்த
வெற்றியில் உண்டு தெளிவதுவும்!

- மதிஒளி





# தன் வினை



**பா**லாஜியும் கதிர் வேலுவும் ஒரே வகுப்பில் படிப்பவர்கள். முதல் ரேங்கைப் பிடிப்பதற்கு இருவரும்தான் போட்டி போடுவார்கள். இருவரும் ஒருவரை ஒருவர் மிஞ்ச கடுமையாக உழைத்துப் படிப்பார்கள். ஆனால் சொல்லி வைத்தது போல் பாலாஜிதான் ஒரு மார்க் அல்லது அரை மார்க் வித்தியாசத்தில் முதல் ரேங்கைத் தட்டிக் கொண்டு போய் விடுவான்.

கதிர்வேல் அப்பாவிடம் சொல்லித் தனியாக மாலை நேரத்தில் டியூஷன் வைத்துக் கொண்டு பார்த்தான். பாடங்களை அட்வான்சாகப் படித்துக் கொண்டு சந்தேகங்களை அப்பாவிடம் கேட்டுத் தெரிந்து கொள்வான். விடாப்பிடியாக நெடுநேரம் கண் விழித்துப் படித்துப் பார்த் தான். எந்த முயற்சியு பாலாஜியைத் தோற் கடித்து முதல் ரேங்கை பெற உதவி செய்ய வில்லை.

நண்பர்கள் வேறு கதிர்வேலுவை அடிக்கடி உசுப்பி விடுவார்கள். "என்னடா பெரிய டியூஷன்? இப்படி விழுந்து விழுந்து வேற படிக்கிறே? என்ன பண்ணி என்ன பிரயோஜனம்? பாலாஜியிடமிருந்து ஒரு தடவையாவது அந்த முதல் ரேங்க் பேட்ஜை வாங்கிக் குத்திக்க உன்னால் முடியலையே?" என்று அவர்கள் குத்தலாகக் கேலி செய்தபோது கதிர்வேல் தலைகவிழ்வான்.

'ஒருவேளை, ஆசிரியர்ஒரே கேள்விக்கான விடையைத் திருத்தி மதிப்பெண் கொடுக்கும்போது பாலாஜிக்கு மட்டும் கூடுதல் மதிப்பெண் போட்டுவிடுகிறாரோ

என்று கதிர்வேலுவுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. அதற்காக பாலாஜியின் விடைத்தாளை ஒரு முறை கேட்டு வாங்கிக் கொண்டு வந்து வீட்டிலே சாவகாசமாக வைத்துக் கொண்டு வரிவரியாகப் படித்துப் பார்த்து தனக்கு எங்கேயாவது அநியாயம் இழைக்கப்பட்டிருக்கிறதா என்பதைச் சோதித்துப் பார்த்தான். ஆசிரியரைக் குற்றம் கூறும்படி அவனுக்கு எதுவும் அகப்படவில்லை.

அன்று, மாதத் தேர்வு. எப்படியும் பாலாஜியை முந்திவிடத் துடித்த கதிர்வேல் குறுக்கு வழியில் ஒரு திட்டம் போட்டான். மாதப் பரிட்சை என்பதால் பள்ளிக்கூடத்தில் தேர்வு எழுதக் காகிதம் தர மாட்டார்கள். அவரவர்களே கொண்டு வரவேண்டும்.

பாலாஜி, தான் கொண்டு வந்த காகிதத்தைத் தன் டெஸ்கில் வைத்துவிட்டுத் தண்ணீர் குடிக்கப் போனான். வகுப்பில் இன்னும் யாரும் வரவில்லை. கதிர்வேல் அவசரம் அவசரமாக பாலாஜியின் பேப்பரை எடுத்து, தன் பேனாவைத் திறந்து மையைத் தெளித்தான். திரும்ப பேப்பரை எடுத்த இடத்தில் வைத்து விட்டான். வந்து பார்த்த பாலாஜி, "சார் என் பேப்பரில் எப்படியோ மை கொட்டியிருக்கு" என்று கலங்கினான்.

ஆசிரியர் அவனுக்கு அருகே வந்து பார்த்துவிட்டு, "யாரிடமாவது அதிகப்படியான காகிதம் இருந்தால் பாலாஜிக்குக் கொடுத்து உதவுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.


"சார், என்கிட்ட வேண்டிய காகிதம் இருக்கு. நான் தரேன்" என்று மூன்றாவது பெஞ்சியில் இருந்த கருணன் கொடுத்து உதவினான். பாலாஜி நன்றி தெரிவித்து விட்டு எழுத ஆரம்பித்தான்.

ஏமாந்து போன கதிர்வேல், யோசனையுடன் தான் எழுத பேனாவைத் திறந்தான்.

பேனா காலி. சொட்டு மை இல்லை! எல்லாவற்றையும்தான் பாலாஜியின் பேப்பரில் கொட்டி விட்டானே? எப்படி இருக்கும்!

தன் வினை தன்னையே சுட கதிர்வேல் பரிதாபமாக எழுந்து 'சார்' என்று அழைத்தான்.

- பாலாஜி ஆதித்தன்



# கண்ணாடி

பொன்னாய் மின்னும் கண்ணாடி
முன்னால் நின்றால் முகங்காட்டும்
கண்ணால் நம்மை நாம் காண
பின்னால் தன்னுள் ரசம் பூசும்.

அகத்தில் இருக்கும் அழுக்கெல்லாம்
எடுத்துக் கூறும் நண்பன்போல்
முகத்தில் இருக்கும் குறையாவும்
முழுக்கக் காட்டும் கண்ணாடி.

சற்றே கவனம் இழந்தாலும்
கையில் நழுவும் கண்ணாடி
முற்றும் நொறுங்கித் தூளாகும்
முகத்தைக் காட்டும் தூள்கூட.


சிதறித் தூளாய் விழும்போது
சிரிக்கும் விதமாய் ஒலிகாட்டும்.
எதிலும் கவனம் வரவேண்டும்.
இதனை விளக்கும் கண்ணாடி.

ஒளிதான் விழியில் குறைந்தோர்க்கு
உதவும் நண்பன் கண்ணாடி.
விளக்கில் திரிகள் எரிந்தாலும்
வெளிச்சம் பெருக்கும் கண்ணாடி.

கடுகா னாலும் பெரிதாக
காட்டும் பூதக் கண்ணாடி.
படிக்கும் நாளில் கண்ணாடி
பரிசோதனையில் துணையாகும்.

படங்கள் மாட்டும் சட்டத்துள்
பளிங்காய் மின்னும் கண்ணாடி.
குடிக்கும் கிளாஸாய் உருமாறும்.
கொடுக்கும் பயன்கள் பலவாகும்.

– சி.விநாயக மூர்த்தி



# வெங்காய

வெங்காயம் கிழங்கு வகைப் பயிராகும்! இதில் 500 க்கும் மேற்பட்ட வகைகள் உள்ளன! வெள்ளை வெங்காயத்திலும், பெரிய வெங்காயத்திலும் காரம் குறைவு! சிறிய ரக காட்டு வெங்காயத்தில் காரம், மணம், குணம் அதிகம்! நாட்டு வெங்காயமும், வெள்ளை வெங்காயமும் வைத்தியத்திற்கு ஏற்றவை!

மேலை நாடுகளில் பயிராகும் வெங்காயம் உருண்டு திரண்டு பருமனாக அழகாக இருக்கும்! ஆனால் நமது நாட்டில் பயிராகும் வெங்காயம் சிறியதாக பிளவுடன் இருக்கும்! சிறிய வெங்காயத்தை பூண்டுகளை நட்டே பயிர் செய்வார்கள்! இது ஒரு குறுகிய காலப் பயிர்! ஐந்தே மாதங்களில் அறுவடையாகும்! இது லில்லியோ சியீ எனும் ஒற்றை விதையிலைக் குடும்பத்தைச் சேர்ந்தது! இதன் தாவரப் பெயர் ஆலியம் சிப்பா!

வெங்காயத்தில் பலவிதமான ஊட்டச் சத்துக்கள் உள்ளன! சுண்ணாம்புச் சத்து, இரும்பு, புரதச் சத்து, வைட்டமின்கள் பி, சி,டி..ஆகியவை இருக்கின்றன! ஜீரண சக்தியை ஊக்குவிக்கவும், வயிற்றுப் பொருமல், வயிற்று உப்புசம் முதலியவற்றிற்கும் ஆயுர் வேதத்தில் இதை மருந்தாகப் பயன் படுத்துகிறார்கள்!

வெங்காயத்தை உரிக்கும் போதோ, நறுக்கும் போதோ நம் கண்களில் கண்ணீர் வருகிறதே! ஏன் தெரியுமா? இதற்குக் காரணம் இதில் அடங்கியுள்ள புரோபானியல் எஸ் ஆக்ஸைடு என்ற விரைவில் ஆவியாகும் தன்மையுடைய பொருள்தான்! இப்பொருள் காற்றில் கலந்து கண்ணில் படுகிறது. இதிலுள்ள ரசாயனப் பொருள் கண்ணில் உள்ள சிறிதளவு நீரில் கலந்து சல்பூரிக் அமிலத்தை உருவாக்குகிறது. அந்த அமிலமே கண்ணில் எரிச்சலூட்டி. கண்ணீரை வரவழைக்கிறது!

வெங்காயம் ஒரு சிறந்த கிருமி நாசினி! பிளினி என்பவர் வெங்காயத்தின் மூலம் இருபத்தெட்டு வகை நோய்களைப் போக்க முடியும் என்று கூறியுள்ளார்! மருத்துவத்தின் தந்தை என்று அழைக்கப்படும் ஹிப்போகிரேட்டஸ், வெங்காயம் பார்வைக் கூர்மையை அதிகரிக்க வல்லது என்று கூறியுள்ளார்!

1596–ல் வெளியான 'தி கிரேட்





ஹெர்பக்' எனும் நூல் வெங்காயச் சாறு வழுக்கைத் தலையில் கூட முடியை வளர்க்கும் நன்மை கொண்டது என்றும்,

# புராணம்!

வலிப்பு நோய்களுக்குச் சிறந்த நிவாரணி என்றும், வெறி நாய்க்கடியைக் குணப் படுத்தக் கூடியது என்றும் கூறுகிறது!

நமது நாட்டில் வெங்காயத்திற்கு ஒரு தனி மதிப்பு! அநேகமாக எல்லாவீட்டு சமையல் அறைகளிலும் ஆட்சி புரிவது வெங்காயம்தான்! வெங்காய சாம்பார், வெங்காய பஜ்ஜி, சட்னி, ஊறுகாய் என்று பல விதங்களில் பயன் படுத்து கிறார்கள்!

"வெங்காய வாசனை வெந்தால் தெரியும்!" என்ற பழமொழியே உருவாகி யுள்ளது! இதை வேகவைத்தோ, வதக் கியோ, ஏன் பச்சையாகக் கூட உடயோ கிக்கலாம்!

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் எழுதப் பட்ட ஒரு வைத்திய நூலை மேற் கோளாகக் காட்டி 'சரக சம்ஹித'வில் வெங்காயத்தின் மருத்துவ குணங்களைப் பற்றி எழுதப் பட்டுள்ளது!

கி.மு. பதினாறாவது நூற்றாண்டைச் சேர்ந்த எபெர்னப் பாப்பிரஸ் எனும் பழைய எகிப்திய ஏட்டில் வெங்காயத் தின் பலன்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன! எகிப்தியர்கள் இறந்த உடலைப் பாடம் செய்ய இதைப் பயன் படுத்திய தாகத் தெரிகிறது! சில முக்கிய நிகழ்ச் சிகளின் போது தங்கள் கூற்றை வற் புறுத்த வெங்காயத்தின் மீது ஆணை யிட்டு உறுதிமொழி எடுப்பார்களாம்! வெங்காயத்தின் ஒரு வகையை தெய்வ மாகக் கருதி வணங்கியும் வந்ததாகத் தெரிகிறது.

உலகில் வெங்காயத்தை ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமாகப் பயன்படுத்துகிறார்கள்! நம் நாட்டில் பழைய சாப்பாட்டுடன் வெங்காயத் தைக் கடித்துச் சாப்பிடும் வழக்கம் இருப்பது போல் இங்கிலாந்திலும் கிராம வாசிகள் தங்கள் உணவு டன் பச்சை வெங்காயத் தைச் சேர்த்து உண்கின் றனராம்!

ரோபின் நீரோ இனி மையான குரல் வளர்ச்சிக் காக தினமும் வெங்காயம் சாப்பிட்டு வந்தானாம்! ஐரோப்பாவில் சில பகுதிகளில் வாடகையாகப் பணத்திற்குப் பதில் வெங் காயத்தைக் கொடுத்து வந்திருக்கின்றனர்! திரும ணங்களில் வெகுமதியாக வெங்காயத் தைக் கொடுக்கும் பழக்கமும் இருந்திருக் கிறது! திருஷ்டி பரிகாரமாக இதை வாயிற் படிகளில் கட்டி வைப்பதும் உண்டாம்! நேபாளத்தில் ஆலயங்களில் நிவே தனத் திற்குக் கூட வெங்காயத்தை எடுத்துச் செல்கிறார்கள்!

வெங்காயத்தோலைக் கொண்டு வண்ணச் சாயம் தயாரிக்கலாம்! புதிதாக வண்ணம் பூசிய வீட்டில் அந்த வாடையை நீக்க வெங்காயத்தை ஒரு வாளி நீரில் துண்டு துண்டாக நறுக்கிப் போட்டு சிறிது நேரம் வைத்திருந்தால் அந்த வாடை போய்விடும்!

இத்தனை சிறப்புடைய வெங்காயம் பிறந்தது இந்தியாவில்தான்! எனினும் இதன் பெருமையை உலகறியச் செய்தது எகிப்துதான்!

– அ.சுப்பையன்.

# கேளுங்கள் சொல்லப்படும்!

அதிக எண்ணிக்கையில் விளையாட்டு வீரர்கள் பங்கு கொள்ளும் நிகழ்ச்சி ஒலிம்பிக் தானே?

- மு. புண்யகோடி, ராணிப்பேட்டை.

ஆமாம். ஆனால், 1986 இல் நடைபெற்ற உதவி நிகழ்ச்சிக்கான விளையாட்டு விழாக்களில் மொத்தம் சுமார் 15 மிலியன் ரன்னர்கள் பங்கு கொண்டு ஒரு சாதனையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவை இந்தியா உட்பட, 78 நாடுகளில் 277 நகரங்களில் நடைபெற்றன.




ஷட்டில் காக்கில் எத்தனை சிறகுகள் இருக்க வேண்டும்?

- லெ. கிருஷ்ணவேணி, மன்னார்குடி.

டோர்னமெண்டுகளில் விளையாடப்படும் ஷட்டில் காக்கில் 16 சிறகுகள் இருக்க வேண்டும்.

நமது தேசியக் கொடியில் உள்ள அசோகச் சக்கரத்தில் எத்தனை கோடுகள் இருக்க வேண்டும்?

- வெ. பாபுராஜ், செஞ்சி.

தேசியக் கொடியின் அசோகச் சக்கரத்தில் மொத்தம் இருபத்திநான்கு பிரிவுகள் இருக்க வேண்டும். சாரநாத் புத்த ஸ்தூபியில் உள்ள சக்கரம் 24 பிரிவுகளைக் கொண்டது. இதைத் தான் தேசியக் கொடியில் பொறித்திருக்கிறார்கள்.

க்ளிமஞ்ஜரோ என்பது என்ன?

- சைமன் பாக்கியநாதன், குடியாத்தம்.

ஆப்பிரிக்காவின் உயர்ந்த மலைத் தொடரின் பெயர்தான் க்ளிமஞ்ஜரோ. இது தாங்கனீசாவின் வடக்கே இருக்கிறது. இதன் உயரம் 19,340 அடிகள். இதன் காடுகள் விசித்திரமான வனவிலங்குகளுக்கும், தாவரங்களுக்கும், விளைபொருள்களுக்கும் பெயர் போனவை.

"இன்செக்ட் டே" (Insect Day) என்று ஒரு நாளைக் கொண்டாடுகிறார்களாமே! எந்த நாடு இதைக் கொண்டாடுகிறது?

- லீலா, பெர்னாண்டஸ், பாளையங்கோட்டை.

## காகித ஃபுல்ஸ்கேப் எப்படி வந்தது?

இது இன்செக்ட் டே அல்ல. இன்செக்ட் டிரேடிங் டே. (பூச்சி விற்பனை நாள்) இப்படி ஒரு நாளை ஜெர்மனியின் ஃபிராங்க்போர்டில் (Frank Furt) கொண்டாடுகிறார்கள். அதிசய மான பூச்சிகள் அன்று காட்சிப் பொருளாக வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

**Ass என்றால் பொதுவாகக் கழுதை என்றும் பெண் கழுதைக்குத் தனிப் பெயர் உண்டு என்றும் கூறுகிறார்களே, இது உண்மையா?**
- ரா. சுந்தரமூர்த்தி, திருவானைக்காவல்.


உண்மைதான். ஜென்னி (Jenny) என்ற பெயர் பெண் கழுதைகளை மட்டுமே குறிக்கும்.


**குதிரைகளுக்கு நடனமாடக் கற்பிக்க பள்ளிக் கூடங்கள் இருக்கிறதாமே! நம் நாட்டில் இது இருக்கிறதா?**
- லெ. சுக்கூர் முகமத், அதிராமபட்டினம்.

குதிரைகளுக்கு நாட்டியப் பயிற்சி அளிக்கும் பள்ளிகள் வியன்னாவில் உள்ளன. இந்த நாட்டியத்துக்குப் பெயர் கூட உண்டு. லெபிசானர் (Lipizzaner) நம் நாட்டில் சர்க்கஸில் மட்டும்தானே குதிரைகள் ஒரு சில நிமிடங்கள் நடனமாடுகின்றன? பள்ளி எதற்கு?

**காகிதத்தை ஃபுல்ஸ்கேப் என்று குறிப்பிடுகிறார்களே! இது எப்படி வந்தது?**
- சி. ரம்யா, மூணார்.

காகிதங்களில் அளவுக்களைக் குறிக்கத் தொடக்க காலத்தில் "வாட்டர்மார்க்" என்ற முத்திரையை வைத்தே காகிதத்தைத் தயாரித்தார்கள். தேவையான அளவில் காகிதத்தை வெட்டிக் கொடுக்க இது தேவைப்பட்டது. பின்னால் இதைப் படிக்காதவர்களும் அறிய வேண்டும் என்பதற்காக எழுத்துக்குப் பதில் கோமாளிக் குல்லாய் அணிந்த ஒரு தலையைப் பதித்தார்கள். இந்த கோமாளித் தலை அளவே Fool's Cap ஆகி, உலக முழுவதும் பரவியது.




**டார்வின் கொள்கை என்று படிக்கிறோமே, இந்த டார்வின் கொள்கை அடங்கிய நூலின் முழுப் பெயர் என்ன?**
- வா. சி பெரியதம்பி, தர்மபுரி - 2.

டார்வின் தனது உயிரினத் தோற்ற வளர்ச்சியைக் குறிப்பிட்டிருக்கும் நூலின் முழுப் பெயர் Origin Of Species என்பது.

**தொடக்க காலத்தில் ரயிலைக் குதிரைகள் தான் இழுத்தனவாமே?**
- பொன் ரமணி, வத்தலகுண்டு.

கேட்க வேடிக்கையாக இருந்தாலும் உண்மை இதுதான். தொடக்க காலத்தில்

சேரநம்பி

# கேளுங்கள் சொல்லப்படும்!

பஸ்களையும் ரயில்களையும் குதிரைகளே இழுத்துச் சென்றன!

ஆக்ஸிஜன் இல்லாமலேயே இமய மலையில் ஏறியவர்கள் இருக்கிறார்களா?
- வெ. ரியகல்லாஹக், விருதுநகர்.


இருக்கிறார்களே. ஆஸ்திரியாவைச் சேர்ந்த பீடர் ஹெப்ளரும், இத்தாலியின் ஃபெய்ன் ஹோல்டு மெஸ்னரும் ஆக்ஸிஜன் இன்றியே எவரெஸ்டில் ஏறிச் சாதனை புரிந்துள்ளனர். நாள் 8.5.1978.

ஏலம் போடுபவர்கள் குறைந்த விலையில் தொடங்கித்தான் ஏலத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற கட்டாயம் உண்டா?
- மு. பெரியநாயகி, நாட்டரசன்கோட்டை.

எல்லாம் பழக்கம்தான். ஏலமிடல் என்பதற்கு என்ன விளக்கம் அளிக்கப்பட்டு அதைக் கம்பெனி பதிவு செய்துள்ளதோ அதைப் பொறுத்தே இது. டச்சுக்காரர்கள் அதிக விலையில் தொடங்கி, குறைத்துக் கொண்டே வருவார்கள்.

ஆண்கள் மட்டுமே பங்கு கொள்ளும் நாட்டிய நிகழ்ச்சி ஏதாவது இருக்கிறதா?
- பூ. பொன்னம்மாள், சாத்தூர்.

தமிழ்நாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை. கர்நாடக மாநிலத்தில் "யட்ச கானம்" என்று ஒரு நாட்டிய நிகழ்ச்சி முழுக்க முழுக்க ஆண்கள் மட்டுமே பங்கு கொள்வது.




'என்னால் முடியாதது எதுவுமே இல்லை' என்று என் நண்பன் ஒருவன் செறுக்குடன் கூறுகிறான். அவனை மட்டம் தட்டுவது எப்படி?
- கிரிப்ஸ் பில்டன், கோடையாறு.

இந்த நூற்றாண்டில் இப்படி ஒரு நண்பனா? ஒன்றுமே வேண்டாம். இரண்டு கண்களையும் திறந்து கொண்டு தும்மச் சொல்லுங்கள். அது போதும். சுருண்ட தலைமுடியை நேராக்கி நிமிர்த்து வதும், கண்களைத் திறந்து கொண்டு தும்முவதும் யாராலும் இயலாத செயல்.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று அடிக்கடி மேடைகளில் பேசி, எழுதி வருகிறார்களே! இது யார் கூறியது?
- வெ. சாரநாதன், பரம்பிகுளம்.

இது அப்பர் என்று அழைக்கப்படும் திருநாவுக்கரசரின் தேவாரப் பதிகத்தில் இருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது.

சென்னை மாநகராட்சியின் முதல் மேயர் யார்? வெள்ளைக்காரரா?
- து. நல்லதம்பி, வேம்பம்பட்டு

சென்னை மாநகராட்சியாவதற்கு முன்பே மேயர்கள் இருந்திருக்கிறார்கள். முதல் மேயராகும் பெருமையைப் பெற்றவர் அமரர் ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள்.


## சாதனைப் படைப்பு

**அரும்புகளுக்கு ஒரு அரசர் கதை, அ. வெற்றிவேலன், பக். 188, ரூ. 25/-, கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 600 017.**

வாழ்க்கை வரலாற்று நூல்கள் எல்லாமே வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு; குறிப்பாக சிறுவர்க்கு வழிகாட்டக் கூடியவை. உண்மையான உழைப்பும், தன்னம்பிக்கையும் இருந்தால் வாழ்க்கையில் முன்னேறலாம் என்ற நம்பிக்கையை ஊட்டுபவை. அப்படித் தன்னம்பிக்கை கொள்ள வைக்கும் வித்தகர் வரிசையில் சிறப்பான ஓர் இடத்தைப் பெற்றுத் திகழ்பவர் வானதி பதிப்பக உரிமையாளர் ஏ. திருநாவுக்கரசு அவர்கள். தமிழ்நாட்டின் புத்தகப் பதிப்புத் துறையில் ஒரு பொன்னேட்டைத் துவக்கி வைத்துப் பெருமையோடு திகழ்பவர். தொடக்க காலத்தில் அவர் எப்படியெல்லாம் துன்பப்பட்டுப் படிப்படியாக முன்னேறினார் என்ற வாழ்க்கை வரலாற்றைத் தனக்கே உரிய கொஞ்சு தமிழ் நடையில் கூறியுள்ளார்,ஆசிரியர். திருநாவுக்கரசர் ஒரு பதிப்பாளர் மட்டுமல்ல; சிறந்த குழந்தை எழுத்தாளர், குழந்தை எழுத்தாளர் சங்கம் தோற்றுவிக்கப்பட்ட காலத்தில் செயலாளராக இருந்து வழிநடத்தியவர். வாழ்க்கையில் எந்தத் தடைகள் வந்தாலும் தன்னம்பிக்கை இருந்தால் ஏற்றம் பெறலாம் என்பதைப் படிப்பவர் மனத்தில் விதைக்க வைக்கிறது புத்தகம். தன்னம்பிக்கை ஊட்டும் வழிகாட்டி நூல். இது ஏவி எம். அறக்கட்டளையின் தங்கப்பதக்கம் பரிசு பெற்ற நூல் என்பது ஒன்றே இதன் தரத்தை உணர்த்தப் போதுமானது. பதிப்பாளருக்கும், படைத்தவருக்கும் ஏற்றமளிக்கும் சாதனைப் படைப்பு.

**அரும்பு மலர்கள், பரிதி இரா. வேங்கடேசன், பக். 148, ரூ. 25/-, பரிதி பதிப்பகம், 44, பாரதிதாசன் தெரு, டாக்டர் ஆர். கே. நகர், அரியாங்குப்பம், புதுச்சேரி - 605 007.**

பல ஆண்டுகளாக சிறுவர்களுக்காக எழுதிவரும் பண்பட்ட எழுத்தாளரின் அருமையான சிறுகதைத் தொகுப்பு. இதில் முத்து முத்தான 12 சிறுகதைகள் உள்ளன. ஒவ்வொன்றும் தனித்தனிப் பலாச்சுளை. எத்தனை வித்தியாசமான கதைக்களங்கள்! தேசிய ஒருமைப்பாட்டில் ஆசிரியருக்கு எத்தனை உறுதியான பற்று இருக்கிறது என்பதைப் பல கதைகள் விளக்குகின்றன. சித்தார்த்தன் என்ற ஒரு சிறுவன், பேசும் போதும் எழுதும்போதும் நேருவின் பொன்மொழிகளைப் பயன்படுத்துவதைத் தந்தை கண்டிக்கிறார். பிறர் கூறியவற்றைத் தன் கருத்தாகக் கூறிக் கொள்வது




கருத்துத் திருட்டு என்று கூறுகிறார். நேருஜி என் மனதில் வாழ்வதால் அவர்தம் கருத்துக்கள் என் பேச்சில் வெளிப்படுகின்றன என்கிறான் சிறுவன். நேரு குடியிருப்பது சிறுவர் நெஞ்சில் அன்றோ? அண்மையில் மணிவிழாக் கண்ட ஆசிரியருக்குப் பெருமை சேர்க்கும் படைப்பு.

**உயர்வோம் நாம், மு. நடராஜன், பக். 48, ரூ. 9/-. வசந்தா பிரசுரம், 6, ஜெய்சங்கர் தெரு, மே. மாம்பலம், சென்னை - 33.**

சிறுவர்க்குப் பாடல்களை எழுதுவது என்பது எல்லோருக்குமே எளிதில் வந்துவிடாது. யாப்பை மட்டுமே பார்த்து சந்தத்தைக் கோட்டை விடுவோர் பலர். அதனால் பத்திரிகைகளில் வெளிவந்ததோடு நின்று விடும் பாடல்கள் ஏராளம். அப்படி இன்றி, சந்தம் நிறைந்த பாடல்களை எழுதிவரும் பொறுப்பு மிக்க கவிஞர் வரிசையில் இந்த நூலாசிரியர் சிறப்பான இடத்தைப் பெறுகிறார். இவரது 39 பாடல்கள் இந்தத் தொகுப்பில் உள்ளன. பழைய பொருள்கள் மட்டுமின்றிப் புதிய தலைப்புகளிலும் இனிமையான பாடல்களைத் தந்துள்ளார், இதோ ஒரு பாடல் சுற்றுச் சூழலைப் பற்றி :

வசந்தா வசந்தா இங்கே பார்
வண்டிகள் கக்கும் புகையைப் பார்
காற்று மண்டலம் கறுக்குது பார்
காரணம் விளைவு எண்ணிப் பார்

மாலா மாலா உடனே பார்
மனிதன் மரத்தை வெட்டுதல் பார்
மரங்கள் குறைந்து போனதனால்
மழையே இல்லா நிலையைப் பார்

படங்களே இல்லாததுதான் குறை. அருமையான தொகுப்பு.

**பண்ணாரம், பரிதி ஆர். வேங்கடேசன், பக். 88, ரூ. 13/-. பரிதி பதிப்பகம், 44, பாரதிதாசன் தெரு, ஆர். கே. நகர், அரியாங்குப்பம், புதுச்சேரி - 605 007.**

நல்லாசிரியர் விருது பெற்ற கவிஞரின் சிறப்பான 69 பாடல்களின் தொகுப்பு எல்லாமே கீர்த்தனைகளாகப் பாட, இசைக்கேற்ற வகையில் ஸ்வரப்படுத்தப்பட்டுள்ளன. ஒன்றிரண்டைத் தவிர எல்லாமே சிறுவர்க்கானவைதான். சிறுவர் பாடல்களை இசையோடு பாட வேண்டும் என்று விரும்பு கிறவர்களுக்கு இவை பேருதவியாக இருக்கும். நல்ல பயனுள்ள முயற்சி.



# தினமும் இதானா?

ராமு பல்லைத் துலக்கி விட்டு வந்தான். அம்மா அலுமினியத் தட்டை எடுத்து வைத்து பழைய சாதத்தைப் பிழிந்து போட்டாள். உப்பைப் போட்டு விட்டு மோரை ஊற்றினாள்.

ராமுவின் முகத்தில் வெறுப்பு தாண்டவம் ஆடியது.

"தினம் தினம் இந்தப் பழைய சாதம் தானா? எனக்கு வேண்டாம். நீயே சாப்பிடு."

தட்டை மூர்க்கத்தனமாக நகர்த்தி விட்டு பையை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான் ராமு.

ஆட்டோமெடிக் சிக்னல் அருகே ஒரு புத்தகக் கடைக்குப் பக்கத்தில் வெங்கடேஷ் எதிர்ப்பட்டான். வெங்கடேஷின் குடும்பத்தாரும், ராமு குடியிருந்த அதே தெருவில்தான் வசித்து வந்தனர். அவன் அப்பாவுக்குப் போன ஆண்டு முடக்கு வாதம் வந்தது. வறுமை தாங்க முடியாது வீட்டைக் காலி செய்து கொண்டு போனார்கள்.

ராமுவைக் கண்டதும் வெங்கடேஷ் ஆவலோடு பேசினான்.

"எப்படி இருக்கே வெங்கடேஷ்?" என்று பதிலுக்கு கேட்டு வைத்தான் ராமு.

"எங்க அப்பா நடமாட்டமில்லாது போயிட்டார். காலையிலும் மாலையிலும்

பத்திரிகை போடறேன். சில தெரிந்தவர்கள் வாரத்தில் ஒருநாள் அவரவர்கள் வீட்டில் சாப்பாடு போடுகிறார்கள். மூச்சைப் பிடித்துக் கொண்டு படிக்கிறேன்," என்று சிரித்த வெங்கடேஷ், "நீ கொடுத்து வைத்தவன் ராமு. உங்க அம்மா மாதிரி ஒரு அம்மா யாருக்குக் கிடைக்கும்? கஞ்சியோ கூழோ, தன் கையால் பண்ணிப் போட்டு நீ படிக்கனும்னு உன்னை அனுப்பி வைக்கிறாங்களே! என்ன உழை உழைக்கிறாங்க! எனக்கு சோர்வு வரும் போதெல்லாம் நான் உங்கம்மாவைத்தான் நினைச்சுப்பேன். ராமு, உங்கம்மா என்ன வேலை செய்யறாங்கன்னு உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"கூலி வேலைன்னு சொல்லுவாங்க. ஏன்?" என்று கேட்டான் ராமு குழப்பத்துடன்.

"கூலி வேலையும் செய்யறாங்க. அதோட கை வண்டியும் இழுக்கறாங்க. நம்ம ஊரில் கைவண்டி இழுக்கும் முதல் பெண் என்ற பெருமை உங்க அம்மாவுக்குத்தான். இத்தனையும் அவங்க எதுக்காகத் தெரியுமா பண்றாங்க? உன்னை உயர்ந்த பள்ளியில் படிக்க வைச்சு உயர்த்தத்தான். நீ கவனமா, அக்கறையா படிச்சு நல்ல வேலை பார்த்து உங்கம்மாவை நல்லபடியா வைச்சுக்கணும் ராமு" என்று விடைபெற்றான் வெங்கடேஷ்.

அம்மா, ஆண்களைப் போல் கை வண்டி இழுத்து சம்பாதித்துத் தன்னைப் பெரிய பள்ளிக்கூடத்தில் படிக்க வைக்கிறாள்! ராமுவுக்கு வெங்கடேஷ் கூறியது அதிர்ச்சியாக இருந்தது.

வீட்டுக்குத் திரும்பி வந்த ராமுவை அம்மா வியப்புடன் நோக்கினாள். மூடி வைத்திருந்த பழைய சாதத் தட்டைத் தானே எடுத்து வைத்துக் கொண்டான். அம்மா மோர் ஊற்ற வந்தாள்.

"தினம் தினம் இந்தப் பழையதுதானான்னு இனிமே கேட்டு உன் மனதை நோக வைக்க மாட்டேம்மா. கவனமா படிச்சு பெரிய வேலை பார்த்து உன்னை நல்லபடியா வைச்சிருப்பேம்மா" என்று ராமு அழுத போது, அம்மா மனநிறைவோடு அவனை அணைத்துக் கொண்டாள்.


- பா. சரவணன், திருக்கண்ணங்குடி.



# மரவீட்டு மனிதர்!

"கிழக்கு பாப்புவாவிலுள்ள தோவி பரோக்கள் என்ற சுதேச ஜாதியினர் கல் அல்லது மண்ணில் கட்டிய வீடுகளில் வசிப்பதில்லை. அவர்களது தேசத்தில் "போத்தல்" என்ற மரம் இருக்கிறது. அவர்கள் அந்த மரத்தைக் குடைந்து அதிலே வசிக்கிறார்கள். மரத்தைக் குடைவதால் அந்த மரத்திற்கு எந்த விதச் சேதமும் ஏற்படுவதில்லை!"

- தக்கோலம். அ. முஸ்தபா.



# கண்ணாடிச்சாலை!

மேற்கு ஜெர்மனியில் கண்ணாடி ரோடுகள் போடப்பட்டு வருகின்றன. உடைந்த, மற்றும் பழைய கண்ணாடி பாட்டில்களை மாவு போல் தூளாக்கி, இவை போடப்படுகின்றன. வழ வழப்பாக இருப்பதுடன் வாகனங்கள் மிக வேகமாகச் செல்லவும் இவை ஏற்றதாக இருக்கின்றனவாம்!

- ஏ. நிஷான் ஹலீம்

"இந்த வருஷ தீபாவளிக்கு ஒவ்வொருத்தருக்கும் இருநூறு ரூபாய்க்கு பட்ஜெட்" என்று அப்பா கூறி முடிக்கு முன் பிரசன்னா சிணுங்கினான்.

"அப்பா எனக்கு முந்நூறு ரூபா வேணும். விலை உயர்ந்த ஜீன்ஸ்... நிறைய பட்டாசு எல்லாம் வாங்கணும்."

அப்பா ஒப்புக் கொண்டார், வேறு வழியில்லாமல்.

தீபாவளியைக் கொண்டாட ஊரிலிருந்து மாமா வருகிறார் என்று கடிதம் வந்ததும் பிரசன்னா மகிழ்ச்சியில் குதித்தான்.

"ஹையா... மாமாவும் நிறையப் பட்டாசு வாங்கிக்கிட்டு வருவார். ஜாலிதான்."

நினைத்தபடியே மாமா ஏகப்பட்ட பட்டாசுக் கட்டுகளுடன் வந்திறங்கினார். மாமா வாங்கி வந்த விலையுயர்ந்த பட்டாசுகளுக்காக பிரசன்னாவும் அவன் தங்கை ராகவியும் அடித்துக் கொண்டனர். அவர்கள் போட்ட சண்டையை யாராலும் தீர்த்து வைக்க முடியவில்லை.

"இது எனக்கு வேணும்."

"ம்ஹூம். எனக்குதான் இது!"

வேறு வழியில்லாமல் மாமாதான் பிரச்னையைத் தீர்க்க முன்வந்தார்.

"ஏன் இப்படி அடிச்சுக்கறீங்க! நானே உங்க ரெண்டு பேருக்கும் சமமாப் பிரிச்சுத் தர்றேன்" என்று கூறி மாமா பிரசன்னாவிற்கும் ராகவிக்கும் பட்டாசு, மத்தாப்புகளைப் பிரித்துக் கொடுத்தார்.

தீபாவளிக்கு ஒரு வாரத்திற்கு முன்பே பிரசன்னா பட்டாசு விட ஆரம்பித்து விட்டான். பட்டாசு வெடிப்பதற்காகவே அவன் பள்ளிக்கு இரண்டு நாள் மட்டம் போட்டு விட்டான்!

தீபாவளி அன்று, அதிகாலையில் எழுந்து அவசரக் குளியல் ஒன்றைப் போட்டு விட்டு மாமாவுடன் மாடியேறி பட்டாசு வெடித்து மகிழ்ந்தான் பிரசன்னா. இரவும் மத்தாப்புக் கொளுத்தி மகிழ்ந்தான்.

தீபாவளி ஒருவழியா போயிடுச்சு. அடுத்த தீபாவளிக்கு இன்னும் முழுசாக ஒரு வருஷம் காத்திருக்கணும். இனிமே இந்தக் கருப்புப் புகைமூட்டத்தைக் கண்ணால் பார்த்து மகிழ ஒரு வருஷம் ஆகுமே!" -- இப்படியெல்லாம் நினைத்தபடியே சோகத்தோடு இரவு சாப்பிடாமலேயே படுத்து விட்டான் பிரசன்னா.

தீபாவளிக்கு மறுநாள்.

"பிரசன்னா எங்கே? கண்ணுலயே படலையே!" என்று ராகவியைப் பார்த்துக் கேட்டபடி கையில் காப்பி தம்ளருடன் சோபாவில் வந்து உட்கார்ந்தார் மாமா.

"அண்ணனா? வழக்கம் போலத்தான்" என்று சாதாரணமாகச் சொன்னாள் ராகவி.

"அப்படீன்னா?" - புரியாமல் கேட்டார் மாமா.

"நீங்களே போய்ப் பாருங்க மாமா" என்று சொல்லி விட்டு மாடிப் படிக்குக் கீழே இருந்த வளைவு அறையைக் காட்டினாள் ராகவி.

வளைவு அறைக்குள் பிரசன்னா தரையைப் பார்த்தபடி முழங்கால்களைக் கட்டிக் கொண்டு சோகத்தோடு உட்கார்ந்திருந்தான். இவனுக்கு என்ன வந்து விட்டது என்று மாமா குழம்பிப் போனார்.

"என்னாச்சு பிரசன்? ஏன் சோகமா இருக்கே?"

"இது பண்டிகைக்குப் பண்டிகை நடக்கிற வழக்கமான காட்சிதான்! அவனுக்கு ஒவ்வொரு பண்டிகை முடிஞ்சதும் இதே மாதிரி மூட் அவுட்டாய்டும். அது

# தினமும் தீபாவளியானால்..?

வும், தீபாவளி பொங்கல்னா போதும். பண்டிகை முடிஞ்ச அடுத்த ரெண்டு நாளைக்கு இப்படித்தான் சோகமயமா இருப்பான்" என்று சொல்லிக் கொண்டே அம்மா உள்ளே நுழைந்தாள்.

"இதுக்காகவா வருத்தமா இருக்கே பிரசன்? வேணும்னா இன்னிக்கும் பட்டாசு வெடியேன்" என்று மாமா பிரசன்னாவைப் பார்த்து உற்சாகமாகச் சொன்னார்.



"இல்ல மாமா. என்னதான் இன்னிக்கும் பட்டாசு வெடிச்சாலும் நேத்து இருந்த சந்தோஷம் தனிதான். அது இன்னிக்குக் கண்டிப்பா இருக்காது. அதைவிட தினமுமே பண்டிகையா இருந்தா என்ன மாமா? எத்தனை மகிழ்ச்சியா இருக்கும்?" என்று பிரசன்னா கேட்டான்.

"அப்படியா! சரி... நீ தீபாவளிக்கு முன்னால ரெண்டு நாள் பள்ளிக்குப் போகாம மட்டம் போட்டியே. அது ஏன்?"

"போங்க மாமா. தினமும் பள்ளிக்கூடம் போய்ப் போய் போரடிச்சுப் போச்சு! அதுதான் ஜாலியா ரெண்டு நாள் மட்டம் போட்டேன்."

"அதே போலத்தான் பண்டிகைகளும் தினமும் பண்டிகையா இருந்துட்டா அதுக்கும் மற்ற நாட்களுக்கும் வித்தியாசம் இருக்குமா? இல்ல மதிப்பு இருக்குமா? அப்படி தினமும் பண்டிகைன்னா எல்லாரும் கொண்டாடுவாங்களா?"

மாமாவின் கேள்விக்குப் பதில் கூற முடியாமல் அவரைப் பார்த்தான் பிரசன்னா.

மாமா தொடர்ந்தார்.

"நீ பழைய வகுப்புல இருந்து புது வகுப்புக்குப் போகும் போது கவலைப்படுவியா, சந்தோஷப்படுவியா?"

"சந்தோஷப்படுவேன்."

"ஏன்?"

"ஏன்னா, புது வகுப்புக்குப் போறோம், பழைய பாடம் இல்ல; பழைய புத்தகம் இல்லே; பழைய நினைப்பு இல்லே. பழைய கிளாஸ் இல்ல; பழைய ஆசிரியர் இல்லே; எல்லாமே புதுசு. அதனால உற்சாகமா இருக்கும்."

"அதே மாதிரித்தான் பண்டிகையும். ஒவ்வொரு பண்டிகையிலும் நம்மகிட்ட இருக்கிற கெட்ட குணத்தை விட்டுட்டு ஒரு நல்ல குணத்தை ஏற்படுத்திக்கிடணும். அப்பத்தான் ஒவ்வொரு பண்டிகை முடிஞ்சதும் புது உற்சாகம் பிறக்கும். அப்படி இல்லைன்னா ஒவ்வொரு பண்டிகை கொண்டாடுறதுக்கும் அர்த்தமே இல்லாம போயிடும்."


"என்னை மன்னிச்சுக்கோங்க மாமா. இத்தனை நாளும் முட்டாள்தனமா நடந்துக்கிட்டேன். இப்போ நீங்க சொன்னதும் தான், என்னுடைய ஏக்கம் எத்தனை முட்டாள்தனமானது என்பதைப் புரிஞ்சுக்கிட்டேன். இனிமே நீங்க சொன்ன படிதான் நடப்பேன். இந்தப் பண்டிகை நாளில் என்கிட்ட இருக்கும் இந்தக் கெட்ட குணத்தை விட்டுடறேன்" என்று சொல்லி விட்டுச் சிரித்தான் பிரசன்னா.

- கமுதி. மு. ரியாகுல்லா

# யாராக இருந்தாலும்...

அந்த அடர்ந்த காட்டில் எந்த பயமுமின்றி சுதந்திரமாக; சந்தோஷமாக புதர்களுக் கிடையே ஓடி விளையாடிக் கொண்டிருந்தது ஒரு வெள்ளைக் குட்டி முயல்.

அப்போது ஒரு சப்தம் கேட்டது. முயல் விளையாட்டை நிறுத்தி அந்த சப்தத்தை உற்றுக் கேட்டது. யானை ஒன்று வலி தாங்காமல் பிளிறிய சத்தம்தான் அது.




மறுபடியும், மறுபடியும் அதே சப்தம் கேட்கவே, சப்தம் வந்த திசையை நோக்கி ஓடியது குட்டி முயல்.

அதோ, பெரிய யானை ஒன்று படுத்துக் கொண்டு வலி தாங்காமல் அழுது கொண்டிருந்தது. நடுநடுவே பிளிறல்.

முயல் யானையின் அருகில் போய் நின்றது. யானையை ஒரு முறை சுற்றி வந்தது. பிறகு யானையின் காலையே உற்றுப் பார்த்தது. யானையின் வலது காலில் ஒரு முள் குத்தியிருந்தது.

தும்பிக்கையால் முள்ளை எடுக்க முடியவில்லை. யானையால் கத்துவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. யானையையும், அந்த முள்ளையும் ஒருமுறை உற்றுப் பார்த்தது முயல். பிறகு யானையின் காலருகே வந்து மெதுவாக முள்ளைப் பிடுங்கி தூரே எறிந்தது.

முள் எடுக்கப்பட்டவுடன் வலி நின்றது. யானை கம்பீரமாக எழுந்து நின்றது. மகிழ்ச்சியடைந்தது. நன்றியோடு



முயலைப் பார்த்தது.

"நன்றி நண்பனே" என்று யானை உண்மையான நன்றி உணர்வோடு கூறியது. பதிலுக்கு ஒரு புன்னகையை உதிர்த்து விட்டு முயல் வழக்கம் போல் தனது இடத்துக்கு ஓடியது.

சில மாதங்களுக்குப் பிறகு ஒருநாள், வயிறு முட்ட இலைகளையும், பழங்களையும் தின்று விட்டு முயல் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. சுகமான விளையாட்டினால் பக்கத்தில் ஒரு கிணறு இருந்ததைக் கூட மறந்து துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த முயல் கிணற்றில் விழுந்து விட்டது.

கிணற்றில் விழுந்த முயல் சுதாரித்து மெல்ல, மெல்ல நீந்தி கிணற்றின் உட்புறச் சுவரருகே வந்து மேலே ஏறத் தொடங்கியது. கிணற்றில் பாசி ஏராளமாக இருந்ததால் ஏற முடியவில்லை. வழுக்கி வழுக்கி உள்ளேயே நீரில் விழுந்தது.

மெல்ல முயலுக்கு மரண பயம் வந்து விடவே, "வீல், வீல்"லென்று அலறத் தொடங்கியது. அந்த நேரத்தில் சிறிது தொலைவில் சென்று கொண்டிருந்த யானையின் காதில் முயலின் அலறல் சத்தம் கேட்க, வேகமாகக் கிணற்றருகே வந்து நின்றது யானை.

மறுபடியும் அந்த அலறல் சத்தம். யானை கிணற்றின் உள்ளே எட்டிப் பார்த்தது. தண்ணீரில் முயல் தத்தளித்துக் கொண்டிருந்தது.


யானைக்குத் தூக்கிவாரிப் போட்டு விட்டது. தன்னைக் காப்பாற்றிய முயலல்லவா? என்ற உணர்வு அதை உடனே செயல்பட வைத்தது. யானை தன் துதிக்கையை நீட்டியது. அந்தோ பாவம், துதிக்கை எட்டவில்லை.

துதிக்கையை எடுத்து விட்டுத் திரும்பிய யானை படர்ந்து இருந்த ஒரு கொடியை அறுத்து அதைக் கிணற்றின உள்ளே போட்டது. கொடியைப் பற்றிக் கொண்டு முயல் சரசர வென்று மேலே வந்து தரையில் குதித்தது.

"உனக்கு நான் செய்த சிறிய உதவிக்காக இன்று என் உயிரையே காப்பாற்றி விட்டாயே நண்பனே! நன்றி. என் உயிர் இருக்கும் வரை உன்னை மறக்க மாட்டேன்" என்று கண்கள் கலங்க யானையைப் பார்த்து முயல் சொல்லியது.

"நண்பனாக இருந்தாலும் சரி. விரோதியாக இருந்தாலும் சரி. ஆபத்தில் மாட்டிக் கொண்டிருப்பவர் யாராக இருந்தாலும் காப்பாற்ற வேண்டும்" என்று கூறி யானை முயலைத் தட்டிக் கொடுத்து விட்டுச் சென்றது.

— த. அ. மு



சுரேஷ் எந்த வழியில் போனால்
10 ஊர்களையும் பார்க்க முடியும்?
விடை : 1

# பள்ளிக்குப் போன ஜிம்மி!

ஸ்ரீதர கணேசன்



சுப்ரமணிக்கு 'பக்' என்றிருந்தது. தற்செயலாகத் தான் திரும்பினான். பார்த்தால் ஜிம்மி வந்து கொண்டிருந்தது! இப்படி ரெண்டு தெருவைக் கடந்து மாவு மில்லைத் தாண்டியும், பின் தொடருமென்று அவன் நினைக்கவில்லை. புறப்படும் போதே தெரிந்திருந்தால், அம்மாவைக் கூப்பிட்டு, "இந்த ஜிம்மியைக் கூப்பிடுங்க, கூடவே வருது..." என்று சொல்லியிருக்கலாம். "ஜிம்மி இங்க வா" என்று அம்மாவும் கூப்பிட்டிருப்பாள். ஜிம்மியும் இங்க ஏதோ கிடைக்கப் போகுது என்று தலையைச் சரித்து, வாலை ஆட்டியபடி ஓடிப் போயிருக்கும். இப்ப இதற்கெல்லாம் வழியில்லாது போயிற்று.

சுப்ரமணி ஒரு சின்னக் கல்லை எடுத்து எறிந்தான். ஜிம்மி கழுத்தைச் சாய்த்துத் தப்பித்துக் கொள்ள, கல் தெருவிலே போன ஒருவர் மேல் பட்டு அவர் முறைத்தார். "சார், மன்னிச் சுக்குங்க" என்று அசடு வழிந்தான் சுப்ரமணி.

இத்தனை ஆன பிறகும் ஜிம்மி திரும்பிப் போய்விடவில்லை. அதிர்ந்து ஓடிவிட வில்லை. நானும் கூட வரத்தான் வருவேன் என்பது மாதிரி சாதுவாய் நின்று பார்த்தது. சுப்ரமணிக்குக் கோபம் கோபமாய் வந்தது.

ஜிம்மிகூட வருவதைப் பற்றி ஒன்றும் இல்லைதான். பள்ளிக்கு இன்னும் ரொம்ப தூரம் நடக்க வேண்டும். கண்டிப்பா இன்னும் கால் மணி நேரமாகும் பள்ளியை அடைய. பள்ளிக் கூடத்திலேயே சத்துணவு. அதுக்கு எட்டே முக்காலுக்கு, 'கரெக்டா' இருக்கணும். ஒன்பதே காலுக்கு பிரேயர். ஒன்பதரைக்கு வகுப்பு ஆரம்பம். கொஞ்சம் பிந்தினாலும் கிளாஸ் லீடர் எழுதிக் கொடுத்து விடுவான். நாலணா ஃபைன்! இப்பப் போய் நாயை மேய்க்க நேரமில்லே. இது பள்ளிக்கு வந்து என்ன செய்யப் போவுது? அனாதையாத் திரும்பித்தான் வரணும். இதுக்காகவே பாதி வழியிலேயே விரட்டி அடிச்சாலும் பாதகமில்லை; பிரச்னையில்லை.

திரும்பவும் ஒரு சின்னக் கல்லை எடுத்து எறிந்தான் சுப்ரமணி. பழைய மாதிரியே கழுத்தைச் சாய்த்துத் தப்பித்துக் கொண்டு முன்னேறியது ஜிம்மி. சுப்ரமணி இன்னொரு கல்லை எடுத்தான். ஜிம்மி உஷாரானது. பள்ளத்தில் பதுங்கிக்


கொண்டது. சுப்ரமணிக்கு அழுகையே வந்துவிடும் போல் ஆகிவிட்டது! ஜிம்மிக்கும் பாவமா இருந்திருக்க வேண்டும். 'ரொம்பவும் நொந்துக்கிடாதே! நான் திரும்பிப் போயிடுவேன்' என்பது மாதிரி ஒரு அரை வட்டம் அடித்து, ஏதோ புதருக்குள் இறங்கி மறைந்து போனது போல் வேடிக்கை காட்டியது.

ஜிம்மி, சுப்ரமணியின் வீட்டுக்கு வந்து ஆறு மாதந்தான் இருக்கும். மட்டக் கடைத் தெருவை விட்டு, உள்ளே வெகு தொலைவு தள்ளி காலனியில் சின்னதாய் வீடு கட்டி முடிந்ததும், அம்மாதான் ரொம்பவும் பயந்தாள். வீடுகள் விட்டுவிட்டு ஒண்ணு ஒண்ணாய்த்தான் முளைத்துக் கொண்டிருந்தன. பாதுகாப்புக்கு ஒரு நாய் வளர்க்க வேண்டுமென்ற ஆசை வந்தது.

நாம் கொடுக்கிறதைத் தின்னுட்டு வீட்டுல கிடக்கிற நாயாய் இருந்தாப் போதும்னு நினைத்தாள் அம்மா. "ஒரு நல்ல நாய்குட்டி இருந்தா பார்த்துக் கொடுங்க" என்று தெரிந்தவங்ககிட்ட சொல்லி வைத்தாள். அப்படி வந்ததுதான் ஜிம்மி. வரும் போது சொக்கி மாதிரி இருந்தது. தங்கச்சிப் பாப்பாதான் ஜிம்மியைப் பார்த்துப் பார்த்துச் சிரிக்கும். அவள் எறிகிற பந்தைக் கௌவிக் கொண்டு வரும். அதன் உடம்பெல்லாம் ஒரே உண்ணி. சிவப்புச் சிவப்பாய் ஓடியது. பெரிய உண்ணியெல்லாம் வளர்ந்து ரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தன. பாவமாய் இருந்தது.

அம்மா ஒருத்தர் சொன்ன கை மருந்தை அரைத்துப் பூசினாள். உண்ணி பூராவும் மறைந்து போயிற்று. ஜிம்மி உப்பென்று வளர்ந்தது. நல்ல உடம்பு. பூப் பூவாய் முடி. முடியைச் சிலிர்த்துக் கொண்டு குரைத்தால், வருகிறவர்கள் எல்லாம் பயந்து போனார்கள். அப்படியோர் மூர்க்கம். எதிராளியை ஓட ஓட விரட்டுகிற மாதிரி சாம்பல் நிறமும் கொஞ்சம் வெள்ளையும் கலந்த முகம். சுப்ரமணி அதன் முகத்தைத் தடவித் தடவிக் கொடுப்பான். ஜிம்மியும் அவன் போகிற இடங்களுக்கெல்லாம் கூடவே வரும். படுன்னா படுக்கும். போன்னா போகும். வான்னா வரும். இப்படிக் கீழ்படிந்து நன்றி காட்டும் ஜிம்மி இன்றைக்கு, என்னவோ சோதனையாக நானும் கூட வருவேன் என்று பள்ளிக்கு அவனோடு வர அடம் பிடிக்குது. விரட்டு விரட்டுன்னாலும், இந்தாப் போறேன்... அந்தாப் போறேன் என்று கூடவே வருது..!

சுப்ரமணிக்கு அலுத்துப் போனது. இதை வீட்டுக்குத் திருப்பி அனுப்ப மல்லுக்கு நின்னா பள்ளிக்கு நேரமாகி விடும். விரைந்து நடந்தான். இனியும் நம்மை விரட்ட மாட்டான்னு அதுக்கு நன்றாகத்



தெரிந்து போயிற்று. குதித்துக் குதித்து வாலை ஆட்டி மகிழ்ச்சி முனகல் முனகிக் கொண்டு பின்னாலேயே ஓடி வந்தது. வேகமாக வந்த ஒரு பையனின் சைக்கிளில், அடிபடப் பார்த்தது. அவன் சைக்கிளோடு பொத்தென்று விழுந்தான். ஜிம்மி தப்பிக் குதித்து ஓடிப் போனது. சூழ்ந்து கொண்ட தெரு நாய்களின் பட்டாளத்துக்கு டிமிக்கி கொடுத்து ஏமாற்றியது. குறுக் கும், நெடுக்குமாய் ஓடி, யாருக்கும் தொந்தரவு கொடுக்காமல், சுப்ரமணியை நெருங்கியது. 'எக்கேடோ கெட்டுத் தொலைஞ்சு போ!' என்கிற மாதிரி சுப்ரமணி அதைக் கவனிக்காமலேயே நடந்தான்.

பள்ளிக் காம்பவுண்டில், வெள்ளை சட்டை, நீல டவுசருடன் பிள்ளைகள் கலகலவென்று நின்றார்கள். பள்ளி வாசலில் சின்னச் சின்ன பெட்டிக் கடைகள் முளைத்திருந்தன. டேவிட்சார் கனத்த பிரம்போடு அலைந்தார். மைதானத்தில் நிற்பவர்களை ஓட வைத்தார். சுப்ரமணி கேட்டைக் கடப்பதற்குள், ஜிம்மி முந்திக் கொண்டது. காம்பவுண்டுக்குள் ஓடியது. "ஹைய்.... நாய்... நாய்..." என்று பசங்கள் பின்னால் விரட்டிக் கொண்டே ஓடினார்கள். அந்தப் பரபரப்புக்குள் தாவிக் குதித்தது. பின் பக்கமாய்ச் சுற்றி, ஒரு தடியோடு மிக அருகில் அடிக்க வந்த ஒருவனை, முந்திக் கொண்டு 'லொள்... லொள்' என்று அவன் மேல் பாய்ந்தது. அவன் பயந்து கம்பைப் போட்டு விட்டு ஓட்டம் பிடித்தான்.

சுப்ரமணிக்கு லேசான பயம். கொஞ்சம் நடுக்கமும் கூட. ஆனாலும் ஜிம்மி செய்கிற அட்டகாசத்தைப் பார்த்து மனதுக்குள் சிரிப்புத்தான் வந்தது. ஜிம்மி பெரிய ஆள்தான்! யாருக்கும் பிடி கொடுக்காமல் தப்பிப் பள்ளி முழுவதும் ஓடியது.



பைப் பார்த்ததும், சுப்ரமணிக்கு 'திக்' கென்றது. ஜிம்மியும் சுப்ரமணியின் கால்களை ரெண்டு முறை சுற்றி, எல்லோரையும் பார்த்து "லொள்... லொள்" என்று குரைத்தது. யாருக்கும் பிடி கொடுக்காமல் திரும்பவும் ஓடியது. சுப்ரமணி, அது தன்னுடைய நாய் என்பதைக் காட்டிக் கொள்ளவில்லை.

காக்கிச் சட்டை போட்ட வாட்சுமேனும், பியூன்களும் வந்து கல்லையும், சின்னக் கட்டியையும் தூக்கி எறிந்து விரட்டுவதைப் பார்த்தும் ஜிம்மி பயந்து போனது. விருட் விருட்டென்று நாலா பக்கமும் ஓடித் திரிந்தது. வேகமாக வந்த கல் பின் காலில் பட்டதும், வராண்டாவில் இது ஓடுவதையும், முறைப்பதையும் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். இப்படி ரசனையோடு பார்க்கும் பசங்களை, திரும்பவும் ஆசிரியர்கள் வந்து அதட்டினார்கள்.

சுப்ரமணி எதுவும் தெரியாத மாதிரி வராண்டாவில் நடந்தான். அவனுடைய வகுப்பில் ஆசிரியர் இன்னும் வரவில்லை.

மாணவர்கள் ஒருத்தருக் கொருத்தர் நாயைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். ஒரு வகையான இரைச்சல் சூழ்ந்திருந்தது. ரொம்பவும் மகிழ்ச்சியாக இருந்தது. நிறைய நாய் விஷயங்கள் வந்தன. நிறம், வகை, வளர்த்தி, குணம், குரல் என்று பேசிக் கொண்டார்கள். சுப்ரமணி

எதிலும் கலந்துக் கொள்ளாமல் ஒதுங்கியே இருந்தான். தப்பித் தவறிக் கூட வாயைத் திறக்கவில்லை. பாடத்தில் கவனமாக இருப்பது போல பாசாங்கு செய்தான்.

சரியாக ஒன்பது மணிக்கு ஆசிரியர் வந்தார். அட்டெண்டன்ஸ் முடிந்தது. முதல் பீரியடு. தமிழ் சார் திருக்குறளை நடத்தினார். முன் வகுப்பில் நடத்திய மனப்பாடக் குறள்களை, ஒரு ஐந்து நிமிடங்களில் பாராமல் எழுதிக் கொடுக்கும்படி கட்டளையிட்டார். கிளாஸ் லீடர் முதலாவதாக எழுதிவிட்டு, மற்றவர்கள் எழுதின நோட்டுகளை வாங்கி மேசையில் கொண்டு போய் வைத்தான். ஆசிரியர் திருத்தினார். தப்பும், தவறுமாய் எழுதினவர்களையும், எழுதாமல் விட்டவர்களையும் அருகில் அழைத்தார். எழுந்தவர்களுக்கு வயிற்றில் புளி கரைத்தது. நடுங்கிக் கொண்டே போனார்கள்.

அப்போதுதான் அவர்களைக் காக்க வந்தது போல ஜிம்மியின் குரல் கேட்டது. எல்லோருடைய கவனமும் ஜன்னலை நோக்கித் திரும்பியது. ஜிம்மி எம்பி, ஜன்னலின் விளிம்பில் முன் கால்களை வைத்துக் கொண்டு பார்த்தது. சுப்ரமணி அதன் கண்ணில் பட்டு விட்டான். உடனே ஒரு மகிழ்ச்சி முனகல். சுப்ரமணி தன்னை ஒளித்துக் கொண்டு கண்டு கொள்ளாமல் இருந்தான்.

"சார்... சார்... இந்த நாய்தான். காலையிலே பள்ளிக் கூடத்துக்குள்ள ஓடி வந்தது....!" என்று ஒரு பையன் பெருமையாகச் சொன்னான். ஆசிரியரும் மெதுவாக நடந்து வந்து, கையில் உள்ள பிரம்பைக் காட்டி, "ச்சூ, ச்சூ" என்றார். ஜிம்மி அண்ணாந்து பார்த்துக் குரைத்தது. சத்தம் பலமாக வந்ததும், சார் பயந்து போனார். "ஏலே, யாரும் இதும் பக்கத் துலே போகாதீங்க. கடிச்சாலும் கடிக்கும்" என்று எச்சரித்தார். அவருக்கு மேலே பாடம் நடத்த ஓடவில்லை.

மணியடித்தது. பீரியடும் முடிந்து போயிற்று. டிரில் வகுப்பு தொடங்கியது. மைதானத்தில் டிரில் மாஸ்டர் சின்னப் பிரம்போடு நின்றார். பனியன் இல்லாமல சட்டையோடு நின்றவர்களை மட்டும் கூப்பிட்டுக் கண்டித்தார். அதற்குள் ஹெட்மாஸ்டர் கூப்பிடுவதாகப் பியூன் வந்து சொன்னான். டிரில் மாஸ்டர் "எல்லோரும் விளையாடிக் கொண்டிருங்க, வந்துடுறேன்" என்று போனார்.

மாணவர்களுக்கு உற்சாகம் கரை புரண்டது. அவுத்து விட்ட நெல்லிக்காய் போல் சுதந்திரமானார்கள். ஒரு பையன் அலுவலகத்துக்கு ஓடி பெயர், வகுப்பறை, பிரிவு, நம்பர், சொல்லி கால் பந்தை வாங்கிக் கொண்டு வந்தான். குண்டு குருமூர்த்தி டீம் பிரித்தான். இன்னொரு பக்கம் கபடி தொடங்கியது.

சுப்ரமணிக்கு புட்பால்தான் பிடிக்கும். அதன் குழு ஒற்றுமையும் ஓட்டமும் ரொம்பவும் சுறு சுறுப்பானது. அதன் திகைப்பு, ஆர்வம், ஆனந்தம், எல்லாமே அவனுக்குப் பிடித்த அம்சங்கள். அவனுக்கு கோல் கீப்பராக நின்று கொண்டிருக்கப் பிடிக்காது. 'டிபன்ஸ்' தான் பிடிக்கும். அப்படித்தான் போன வாரம் நடந்த மேட்சில், ஒரு கோல் அடித்தான். அது மறக்க முடியாதது. நண்பர்கள் எல்லாம் அவனை அலக்காகத் தூக்கினார்கள். கிரௌண்டு முழுக்கக் கொண்டு போனார்கள்!


இப்படி நல்லா விளையாடுகிறவனை அந்த குண்டுப் பையன் குருமூர்த்தி 'ஏலே, பொடியா, நீ போய் கோலுக்கு நில்லு" என்று சொன்னதும், சுப்ரமணிக்குக் கோபம் மூக்கு நுனியில் வந்தது.

குருமூர்த்தி பெரிய இடத்துப்



“அவர், குழந்தைங்க டாக்டர் தான், குழந்தையை உப்பு மூட்டை தூக்கிக்கச் சொல்லி, ஊசி போட்டாரே!”

— சீர்காழி வி. ரேவதி



பையன். இளைத்தவர்களையெல்லாம் கேலி பண்ணி மகிழ்வான். ஆசிரியர் கண்டு கொள்ளவே மாட்டார். அவன் தன்னை "ஏலே பொடியா" என்றதும் சுப்ரமணிக்குத் துக்கம் பொங்கி எழுந்தது. "நான் பொடியனா இருந்தா நீதடி மாடுடா" என்றான் ஆக்ரோஷமாக. "யாருடா தடிமாடு?" என்று குருமூர்த்தி அவன் தலையில் குட்டினான்.

அவ்வளவுதான். சுப்ரமணி அவனுடைய பனியனை இழுத்து அடிக்கப் போனான். குருமூர்த்தி பலசாலி. உடனே சுப்ரமணியைக் கீழே தள்ளிவிட்டு அவன் மேலே ஏறி உட்கார்ந்து கொண்டான். எல்லாம் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தனர். சுப்ரமணியை தடிப் பையன் குருமூர்த்தி அடிக்கக் கையை ஓங்கிய போது, எங்கோ பதுங்கி இருந்த ஜிம்மி பயங்கரமாகக் குரைத்துக் கொண்டே, தலைதெறிக்க ஓடி வந்தது!

மைதானத்தின் மத்தியில் வெறி பிடித்த மாதிரி ஓடி வரும் நாயைக் கண்டு, எல்லோரும் நாலா பக்கமும் பயந்து ஓடினர். குருமூர்த்தியும் அவசர அவசரமாய் எழுந்து. "அம்மா... ஐயோ..." என்று கத்திக் கொண்டே ஓடினான். கலவரத்தோடு ஓடுபவர்களில் அவனை மட்டும் ஓட ஓட ஜிம்மி விரட்டியது. அவன் வேப்பமரத்தைச் சுற்றி, புளிய மரத்தை நெருங்கும் போது, அவன் இடுப்பளவுக்கு அது தாவிக்குதித்தது. இரண்டாவது தாவில், அவனுடைய பனியன் "டர்..." என்று கிழிந்தது. மூன்றாவது தாவலில், அவனைக் கடித்துக்குதறத் தயாரானதும் சுப்ரமணி வேகமாக ஓடி வந்தான். ஒரு கல்லை எடுத்து விட்டெறிந்தான். கல் வந்த திசையைப் பார்த்ததும் தன் பரபரப்பை அடக்கிக் கொண்டது ஜிம்மி. ஆனாலும், குருமூர்த்தியைத் தாக்கும் முயற்சியை விடவில்லை.

"பயப்படாதே குருமூர்த்தி. என் பின்னாலே ஒளிஞ்சுக்க. இது ஒன்னும் பண்ணாது" என்று சுப்ரமணி சொல்லி அடைக்கலம் தந்ததும் குருமூர்த்தி கலங்கிப் போனான். வெறுப்பெல்லாம் மறைந்து போனது. அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு என்னை மன்னித்து விடு சுப்ரமணி. நான் வேண்டுமென்றே உன்னை வம்புக்கு இழுத்து அடிச்சாலும், அதையெல்லாம் மனசில வைக்காது என்னைக் காப்பாற்றினாயே!" என்று கண்ணீர் விட்டான்.

# சேர்த்தால் என்ன வரும்? - போட்டி முடிவு

இதில் பங்கு கொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் சரியான விடையையே எழுதியிருந்தார்கள். பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் முறையே கைகொடுத்தது.

## ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. வி. ஜே. ஆசித் அலி, பன்னப்பட்டி அஞ்சல்.
2. கோ. வைதேகி, வேலூர் - 6.
3. எஸ். யுவராஜன், பழைய வண்டிப்பாளையம்,
4. ர. சுதா, விருதுநகர்.
5. ஏ. குமாரவேல், நெரூர் அஞ்சல்.
6. எம். எம். ரிஸ்வான், லிளியனூர் அஞ்சல்.
7. ஹேமமாலினி, பம்பாய் - 101.
8. ஜெ. ஆல்வின் ஜோஷி, சாத்தூர்.
9. ர. சிவலிங்கம், உதகை.
10. கே. தாசரதி, மதுரை - 10.
11. இர. இராதிகா, கடலூர் - 1.
12. க. லக்ஷ்மி, வேங்கிக்கால் அஞ்சல், திருவண்ணாமலை.
13. க. கௌரி, கீழ்நத்தம் அஞ்சல்.
14. ஜெ. ஜம்மு, செம்பனார் கோவில்.
15. எஸ். அக்னி, வேளாங்கண்ணி.
16. ஸ்வேதா ரவீந்திரன், சூரத், குஜராத் மாவட்டம்.
17. D.B. அனுபமா, நெய்வேலி - 3.
18. மேகா நடராஜன், நாக்பூர் - 22.
19. எஸ். பிரசன்னா, காரைக்கால்.
20. என். கார்த்திக், நடுப்பட்டி போஸ்ட்.
21. ஜி. அரவிந்த், விஜயவாடா, ஆந்திரப்பிரதேஷ்.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

**சரியான விடை :**

குருவி, தவளை, எலி, கிளி, பூனை.






**வே**ன் ஒரு குலுக்கலுடன் நின்றது. கிராமத்துக் குழந்தைகள் 'ஹோ'வென்று கத்திக் கொண்டு வேனைச் சூழ்ந்து கொண்டனர்.

அம்மா அப்பா இருவரும் முதலில் இறங்கினர். பின்னாலேயே பாபு. சுட்டி இறங்கவே மனமின்றி உட்கார்ந்திருந்தாள்.

டிரைவர் சாமான்களை எடுத்துக் கொண்டு போய் எதிரே இருந்த கட்டிடத்தில் வைத்தார்.

"இறங்கு சுட்டி," என்று அப்பா அதட்டியதும் வேறு வழியில்லாமல் சுட்டி முனகிக் கொண்டே இறங்கினாள்.

# பன்றி சாக்கடையில் புரளுவது ஏன்?



"என்னப்பா இது சுத்தப்பட்டிக் காடா இருக்கு? டெலிபோன், டி.வி., இல்லாட்டாலும் ஒரு மின்சார விளக்குக் கூட இந்த ஊர்ல இல்ல போல இருக்கே!" என்றாள் சுட்டி சலிப்புடன்.

"புதைபொருள் ஆராய்ச்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் இடம் நவநாகரீக வசதிகள் கொண்ட நகரப் பகுதிகளாக இருப்பது ரொம்பவும் அபூர்வம் சுட்டி. சில இடங்களில் குடிக்க நல்ல தண்ணீர் கூடக் கிடைக்காது. இதற்காகத்தான் நான் கிளம்பும்போதே சொன்னேன், இந்த காம்ப் இடங்கள் எல்லாம் உங்களைப் போன்றவர்களுக்குச் சரிப்பட்டு வராது, வேண்டாம்னு. பிடிவாதம் பிடிச்சு வந்திங்க எல்லோரும். இதெல்லாம் டிவில பார்த்து ரசிக்கத்தான் சுவையா இருக்குமே தவிர, நேர்ல வந்து பார்த்தா சலிப்பாத்தான் இருக்கும். என்னுடைய பணி ஏசி அறையில் மேஜையடியில் உட்கார்ந்து எழுதற பணி இல்லேம்மா" என்றார் அப்பா.

"குர்ர் குர்"ரென்று சத்தம் கேட்டது. எட்டுக் குட்டிகள் பின்தொடர கொழுத்த பன்றி ஒன்று பால்மடி அசைய, குட்டை வால் அசைய வந்து கொண்டிருந்தது. எல்லாமே சேற்றில் புரண்டு, சாக்கடைக் கும்பியை அப்பிக் கொண்டிருந்தன. முடைநாற்றம் குடலைப் புரட்டியது.

"என்ன ஊருப்பா இது! இப்படிப் பன்றிக்காடா இருக்கு? எவன்தான் புலி குத்திப் பட்டின்னு பேர் வைச்சானோ! பன்றிகுதித்துப்பட்டிங்கற பேர்தான் பொருத்தமா இருக்கும்" என்றான் பாபு.

"பசங்க ரெண்டு பேருமே காலடி

**ரேவதி**

வைச்சதுமே கரிச்சுக் கொட்டறாங்க. உன் சமாச்சாரம் என்ன? நானா உங்களை வாங்க வாங்கன்னு அழைச்சேன்? நீங்களாத்தானே, வரேன்னு வந்து இப்படிக் கரிக்கிறீங்க? இப்பக் கூட ஒன்றும் குடி முழுகிப் போகலை. பத்தாவது கிலோ மீட்டரில் பள்ளிப்பட்டி இருக்கு. நல்ல லாட்ஜ், உணவு எல்லாம் கிடைக்கும். உங்க மூன்று பேருக்கும் தங்க ஏற்பாடு பண்ணறேன்" என்றார் அப்பா.

இதற்குள் "சூ! சூஊ!"வென்று யாரோ விரட்ட, எல்லாப் பன்றிகளும் 'குர் குர்'ரென்று கத்தியபடி இவர்கள் உட்கார்ந்து இருந்த இடத்திற்கு ஓடி வந்து மறுபடி, இவர்களைக் கடந்து சென்றன. பன்றிக் குட்டி ஒன்று வாலைச் சுழற்றிய போது, நீர் சுற்றித் தெளித்தது!

"என்ன அசிங்கம் புடிச்ச பிறவிகள்! சே! குறைந்தபட்சம் இதுங்களையாவது ஒரே இடத்தில் அடைச்சுப் போட்டு வைக்கக் கூடாதா?" என்றான் பாபு அருவருப்புடன்.

"சின்னையா" என்று அழைத்தார் டிரைவர். எல்லோரும் திரும்பிப் பார்த்தனர்.

"இந்த பன்றிக் குட்டிகள் எல்லாம் நான் வளர்ப்பவைதானுங்க. எனக்கு இந்தப் புலிகுத்திப்பட்டிதான் சொந்த ஊர். இங்கே இருப்பவை மொத்தம் ஐநூறு வீடுங்கதான். இந்த ஊரில் சாக்கடை கிடையாது. திறந்தவெளிதான் கழிப்பறை. இப்பத்தான் இந்தப் புதை பொருள் முக்கியத்துவம் காரணமாக இந்த ஊரில் கூட்டம் சேர ஆரம்பிச்சிருக்கு. ஊர் சுத்தமா இருக்கணும்கறதுக்காகத்தான் நகராட்சியில் பன்றி வளர்க்கச் சொல்லி பன்றிக்கு இருபது ரூபாய் உதவித் தொகை தராங்க."

"அப்படியா! இத்தனையும் உங்க பன்றியா?" என்று வியப்புடன் கேட்டான் பாபு.

"ஆமாம் சின்னையா. நீங்க சொன்னபடி இத்தனை பன்றிகளையும் நான் பட்டிக்குள் அடைச்சுப் போட்டுட்டா என்ன ஆகும் தெரியுமா? இந்த ஊரே நாறிப் போகும். கழிவுகளையெல்லாம் பன்றிகள் தின்று ஊர் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தானே பன்றி வளர்க்கிறோம்?"

"அப்படியா!"

"உங்க சென்னை மாநகரில், துப்புரவுத் தொழிலாளர்கள் ஒருநாள் மட்டம் போட்டால் நகரமே நாறிப் போகுதே இல்லையா? அதே மாதிரிதான் இங்கே இந்தப் பன்றிகளும்."

"என்னவோ, இதுங்க சாக்கடைக் கும்பியைப் பூசிக்கிட்டு குட்டை வாலை அசைச்சுக்கிட்டு 'குர்குர்'ரென்று கத்தியபடி வர்றதைப் பார்த்தா குடலைப் புரட்டுது" என்றாள் சுட்டி.


"சின்னம்மா, நீங்க சொல்றதை நான் ஒப்புக்கறேன். ஆனால், இதுங்க ஏன் இப்படிச் சாக்கடையில் விழுந்து புரண்டு கும்பியைப் பூசிக்குது தெரியுமா?" என்று கேட்டார் டிரைவர்.

"இதுக்குக் காரணம் கூட இருக்கா? எல்லாம் அசிங்கத்தில் புரளும் ஆசைதான்" என்றாள் சுட்டி.

"அதுதான் தப்பு. பன்றிகள் பாலூட்டும் இரட்டைக் குளம்பிகள் வகையில்

**"குரங்கு மார்க் பட்டாசு வாங்க வேண்டாம்னு சொன்னேனே கேட்டீங்களா...? நம்ம வீட்டு வாசலில் கொளுத்திப் போட்டால், தாவிப் போய் அடுத்த வீட்டு வாசலில் வெடிக்குது!"**

**- எஸ். மீனலோசனி**





மிகவும் சுத்தமானவை. பின் இவை ஏன் கும்பிச் சேற்றைப் பூசிக் கொள்கின்றன என்று உங்களுக்குச் சந்தேகமாக இருக்கலாம். இவைகளின் உடம்பில் வியர்வைச் சுரப்பிகள் இல்லை."

"அட! அப்படியா?"

"ஆமாம். உடம்பில் வியர்வைச் சுரப்பிகள் இல்லாததால் உடல் வெப்பத்தைக் குறைக்க முடியாது இவை தவிக்கின்றன. இதன் காரணமாகவே இவை சாக்கடைச் சேற்றை உடம்பில் அப்பிக் கொள்கின்றன. இவை காயக் காய மீண்டும் சாக்கடையில் விழுந்து புரண்டு மறுபடி அப்பிக் கொள்கின்றன. சாக்கடைக் கும்பிக் கவசம், ஈர மண்ணால் கோட்டிங் கொடுத்த மாதிரி, இவைகளின் உடல் வெப்பத்தைக் குறைக்க உதவுகின்றன. அதோடு பூச்சிகளின் தாக்குதல்களில் இருந்தும் இவை தப்பிக்க உதவுகின்றன."

"அதிசயமா இருக்கே!" என்றான் பாபு.

"இவைகளை நல்ல வசதியா வைத்திருந்தால், இவை நீருக்குள்ளேயே எருமைகள் மாதிரி அழுந்திக் கிடக்கும். இப்படிச் சாக்கடையில் புரளாது. நாம்ப நம்ம நாட்டில் இந்த வசதியை இதுங்களுக்குச் செய்து கொடுப்பதில்லை. அதனால்தான் இவை சாக்கடைக் கும்பியில் புரண்டு உடம்பில் சாக்கடைச் சேற்றைப் பூசிக் கொள்கின்றன. உண்மையில் இவை மிகவும் சுத்தமானவை. மேல்நாடுகளிலும் சைனாவிலும் பன்றிகள் இறைச்சிக்காகவே வளர்க்கப்படுகின்றன."

"ஐயையே!" என்றாள் சுட்டி.

"என்ன ஐயையே? அவங்க நம்மை மாதிரிக் கழிவுகளைத் திங்கக் கொடுக்க மாட்டாங்க. பார்லி, சோளம், கம்பு, பால், முட்டை, வைட்டமின் மாத்திரை எல்லாம் தருவாங்க. சுத்தமா வளர்ப்பாங்க. நம்ம நாட்டில் இவை அருவருப்பா இருக்க நாம்தான் காரணம்."

"என்னால் இதையெல்லாம் நம்பவே முடியலே டிரைவர்?"

"பன்றிகள் மிகவும் புத்திகூர்மை மிக்கவை. பயிற்சியளித்தால் இவை ஆடும், சர்க்கஸ் வேலை எல்லாம் பண்ணும். இங்கிலாந்து, அமெரிக்காவில் குழந்தைகள் இவைகளை செல்லப் பிராணிகளாக வீட்டில் வளர்க்கிறார்கள். அமெரிக்காவில் ஒரு பன்றி பாப்சாங் பாடலைக் கூடப் பாடியதே!"

"ஆமாம் ஆமாம். தொலைக்காட்சியில் கூடக் காட்டினார்கள்" என்றார் அப்பா.

"அது மட்டும் இல்லை. பன்றியின் பால், நெய் இரண்டும் மருத்துவ குணம் உடையவை. இதன் முடி கனமாக இருக்கும். இதைக் கொண்டு பிரஷ் செய்கிறார்

கள். பன்றியின் உடம்பில் இருந்துதான், சர்க்கரை வியாதி என்ற நீரிழிவு நோய்க்கு உரிய மருந்தான இன்சுலினைத் தயாரிக் கிறார்கள். இதன் இரைப்பையில் இருந்து தான் பெப்சின் (PEPSIN) மருந்தைச் செய்கிறார்கள். இதன் முரட்டுத் தோல் கால்பந்து செய்யப் பயன்படுகிறது.இதன் எலும்பில் இருந்து உரம் தயாரிக்கிறார் கள்."

"பன்றியை எத்தனை இழிவாக எண்ணியிருந்தேன் என்பதை எண்ணும் போது எனக்கே வெட்கமாக இருக்கிறது" என்றாள் அம்மா.

"ஆமாம் டிரைவர், 'பன்றியைப் போல திங்காதே' என்று கூறுகிறார்களே.. இதற்கு என்ன பொருள்?"

"வயறு முட்ட முட்ட, அளவுக்கு மேல் தின்கின்றவர்களைப் பார்த்துத்தான் இப்படிக் கூறுகிறார்கள். ஆனால் இது சரியல்ல. பன்றிகள் அளவோடுதான் உண்பவை."

"அப்படியானால் அது தவறுதானே?"


"கண்டிப்பாகத் தவறுதான். பன்றி இதைத்தான் தின்னும் என்று குறிப்பிட்டுக் கூற முடியாது. எதையும் தின்னும். அதனால் எதையும் தின்பவர்களை வேண்டுமானால் பன்றிக்கு ஒப்பிடலாம். யானைகளுக்கு இருப்பது போல் ஆண் பன்றிகளுக்குக் கூடத் தந்தங்கள் உண்டு. ஆனால் இவை கோரைப் பற்கள் என்றே அழைக்கப்படுகின்றன."


"எத்தனை குட்டிகள் போடும்?"

"ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பன்னிரண்டு குட்டிகள் வரை போடும். ஒருமுறை கர்ப காலம் நான்கு மாதங்கள் தான். பன்றியின் குவிந்த மூக்கு நுனி உறுதியானது. அதே சமயத்தில் உணர்ச்சி மிக்கது. இதைக் கொண்டு பூமியைத் தோண்டிக் கிழங்கு வகைகளை எடுத்துத் தின்னும்."

"பன்றிகளால் மூளைக் காய்ச்சல் நோய் வருகிறதாமே? அது ஆபத்து இல்லையா?"

மூளைக் காய்ச்சல் உள்ள ஒருவனைக் கடித்த கொசு, பன்றியைக் கடித்தால், பன் றிக்கும் அந்த நோய் பரவுகிறது. அந்த நோயுள்ள பன்றியைக் கடிக்கும் கொசு, குழந்தைகளைக் கடித்தால் மூளைக் காய்ச் சல் வருகிறது. நாய்களுக்கு வெறி பிடித்





துக் கடிப்பதில்லையா? அதே மாதிரித் தான். என்னுடைய பன்றிகளுக்கு நான் தடுப்பு ஊசி போட்டிருக்கிறேன்."

"இவை கழிவுகளை விரும்பி உண்கின் றனவே! இது எப்படி?"

"விலங்குகளில் பன்றிக்குத்தான் அதிக எண்ணிக்கையிலான சுவை அரும்பு கள் இருக்கின்றன. அதனால்தான் எந்தச் சுவை யையும் இவை விரும்பி ஏற்கின்றன; வெறுப்பதில்லை" என்றார் டிரைவர்.

"குர்குர்" சத்தம் கேட்டது. குட்டை வாலை ஆட்டிக் கொண்டு பன்றிகள் கும்பலாக வந்தன. இப்பொழுது எல்லோ ரும் பெரும் வியப்புடன் அவற்றை நோக் கினர்.

## அறிவியல் உண்மைகள்

* பன்றிகள் பாலூட்டும் இரட்டைக் குளம்பிகள் பிரிவைச் சேர்ந்தவை.

* 6 மாதங்களுக்கு ஒருமுறை குட்டி போடும். அதிக அளவு பன்னிரண்டு குட்டிகள். கர்ப்ப காலம் 4 மாதங்கள். குட்டிகள் பிறந்தவுடன் சிவப்புச் சாம் பல் நிறமாக இருக்கும். முதுகில் வரி கள் இருக்கும். வளர வளர மறைந்து விடும்.

* கூர்மையான மூக்கு நுனி உறுதி யானது. மோப்பம் பிடிப்பதில் வல் லவை. கோரைப் பற்கள் ஆண் பன்றி களுக்கு மட்டும் உண்டு.

* எதை வேண்டுமானாலும் தின் னும். இந்தியாவில் கழிவு தின்னவே வளர்க்கப்படுகின்றன. மேல்நாடுகளில் இறைச்சிக்காகவே வளர்க்கப்படுகின் றன. அதனால் சுத்தமான சத்துணவைத் தருகிறார்கள்.

* பழக்கப்படுத்தினால் பன்றிகள் சர்க்கஸ் வேலைகள் செய்யும். ஆடும். பாட்டுக் கூடப் பாடும்.

* சுத்தமாக இருக்க விரும்புபவை. ஆனால், இந்தியாவில் அவைகளுக்கு அந்த வசதி கிடைப்பதில்லை.

* அதிக எண்ணிக்கையிலான சுவை அரும்புகள் உள்ளவை. அதனாலேயே எந்த நாற்றம் பிடித்த பொருளையும் விரும்பி உண்கின்றன. இதன் உமிழ்நீரில் உள்ள விசேஷ எதிர்ப்பு சக்தி, இதற்கு நோய் நொடி வராது காக்கிறது.

* உடலில் வியர்வைச் சுரப்பிகள் கிடையாது. அதனால், சாக்கடைக் கும்பியைப் பூசிக் கொண்டு உடல் வெப் பத்தைக் குறைத்துக் கொள்கிறது. இது இயற்கை அளித்துள்ள வசதி.

* பன்றியின் உடம்பில் இருந்து மருந்துகள், கால்பந்து போன்ற பல பயனுள்ள பொருள்கள் செய்யப்படு கின்றன.

# தவறு தந்த பெருமை!

அந்தக் கவிஞர் அடக்கமானவர். அவரது பெயரைக் கேட்டாலே போதும், குழந்தைகளுக்கு ஒரே கொண்டாட்டமாக இருக்கும். அவரை வழிகாட்டியாக வைத்துக் கொண்டு கவிஞராகி சிறப்படைந்தவர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்கா. குழந்தைகளுக்காகப் பாடல் எழுதுவோர் மட்டுமல்லாது, பெரியவர்களுக்காகக் கவிதை படைப்போரும் தங்கள் நூல்களுக்கு அவரிடம் அணிந்துரை கேட்பார்கள். நூல் வெளிவந்ததும் ஒரு பிரதியை அவருக்கு அனுப்பி வைத்து அவரது கருத்துகளைக் கேட்பார்கள். அவரும் அதன் நிறைகுறைகளைத் தெரிவித்து வழிநடத்துவார்.



அப்படித்தான் பழனிக்கு வழிநடையாகச் சென்ற அன்பர் ஒருவர் ஒரு புத்தகத்தை அவரிடம் அளித்தார். அவர் ஆண்டுதோறும் காரைக்குடி பகுதியில் இருந்து நண்பர்களுடன் நடந்து பழனிக்குச் சென்று வருபவர். நடந்து செல்லும் துன்பத்தை மறக்க எல்லோரும் பாடுவார்கள். அப்படிப் பாடக்கூடிய பாடல்களை இலவசமாக அச்சிட்டு வழங்குவார்கள். அப்படி இலவசமாக அச்சிட்டதுதான் அந்தக் கையடக்கப் பாடல் புத்தகம்.

கவிஞர் புத்தகத்தைப் பிரித்துப் பார்த்துக் கொண்டே வந்தார். அதில் பல கவிஞர்கள் எழுதிய பாடல்கள் இருந்தன. "நல்லதாகத்தான்; அருமையான சந்தம் உடையவைகளாகத்தான் பார்த்துத் தேர்ந்தெடுத்து அச்சிட்டிருக்கிறீர்கள்" என்று கவிஞர் நண்பரின் முயற்சியைப் பாராட்டியபடி பார்த்துக் கொண்டே வந்தார்.

"அட! இந்தப் பாடலைக் கூடச் சேர்த்திருக்கிறீர்களா! மிக அருமையான பாடலாயிற்றே!" என்று ஒரு பாடலைப் பார்த்துக் கூறியவர், "அட! என்ன இது! இதில் என் பெயரைப் போட்டிருக்கிறீர்களே! இது என்னுடைய பாடல் இல்லையே?" என்று பதறினார்.

"அப்படியா! பாடலைப் பார்த்ததும் அது உங்களுடையதாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணிப் போட்டு விட்டோம்," என்றார் வந்த நண்பர்.


"தயவுசெய்து அடுத்த பதிப்பில் இதை மாற்றி விடுங்கள். சரியானவரின் பெயரைப் போட்டு விடுங்கள்," என்று பதற்றம் குறையாது கூறிய கவிஞர், "இந்தப் பாடலை எழுதிய கவிஞர் இதைப் பார்த்தால் என்ன நினைப்பார்? எவ்வளவு மனம் வருந்துவார்!" என்று எழுந்தார். உடனே அந்தக் கவிஞருக்கு, இப்படி அவருடைய புகழ்படைத்த பாடல் ஒன்று தன் பெயரில் தவறுதலாக வெளியிட்டுள்ளதை இப்பொழுது தான் பார்த்ததாகவும், உரியவர்களுக்கு தவறைச் சொல்லித் திருத்தி விடக் கூறியுள்ளதாகவும் எழுதி அன்றே அந்தக் கடிதத்தைத் தபாலில் சேர்த்தார்.

"என் பாடலை உங்கள் பாடலாக அச்சிட்டுள்ளதற்கு வருத்தம் தெரிவித்து எழுதியுள்ள கடிதம் கிடைத்தது. அந்தப் பாடலுக்காக எனக்குக் கிடைக்க வேண்டிய பெருமைகளும் பாராட்டும் உங்களுக்குக் கிடைத்து விட்டதே என்று உங்களுக்கு ஏற்பட்டுள்ள பதற்றத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. மற்றவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பெருமைகளையும், புகழையும் தங்களுடையதாகவே அனுபவிக்கும் இந்த உலகத்தில், நீங்கள் ஒரு மாறுதலானவர். உண்மையில் அப்படித் தவறாக அச்சிட்டவர்கள் எனக்குப் பெருமையே செய்திருக்கிறார்கள். இது யாராலுமே எனக்குத் தர முடியாத பாராட்டு. ஏன் தெரியுமா? என்னுடைய பாடல், உங்களுடையதாகத்தான் இருக்கும் என்ற மயக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் அளவுக்கு அது அத்தனை சிறப்பாக அமைந்துள்ளது என்பது எனக்கு எத்தனை பெரிய பாராட்டு! பதற்றம் அடைய வேண்டாம். தவறாக உங்கள் பெயரைப் போட்டவர்களுக்கு எனது நன்றியைக் கூறவும்" என்று பொருள்படப் பதில் வந்தது.

இந்த வித்தியாசமான கவிஞர் வேறு யாருமல்ல. கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியரான குழந்தைக் கவிஞர் அமரர் அழ.வள்ளியப்பா அவர்கள்தான். குழந்தைக் கவிஞரின் பாடல்தான் என்ற மயக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்குப் பாடலை எழுதிய பெருமைக்கு உரியவன் அடியேன்தான்! அந்தப் பாடல் இதோ:

"பாலனைப் போல் தோன்றுகின்ற
பழனிவேலா - நீயும்
பண்டாரம்போல் நிற்பதேனோ
பழனிவேலா
வேலைஏந்தும் கரங்களிலே
பழனிவேலா - அங்கே
வேறே ஒரு குச்சியேனோ?
பழனிவேலா"

**திருச்சி பாரதன்**



## தீபாவளி கொண்டாடாதவர்!

பழுத்த காந்தியவாதியும், விடுதலைப் போராட்ட வீரரும், முன்னாள் பிரதமருமான மொரார்ஜி தேசாய்க்கு எத்தனையோ சிறப்புகள் உண்டு. அவைகளுள் முக்கியமானது அவருக்கு நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறையே பிறந்த நாள் வரும் என்பது! ஆமாம், அவர் லீப் வருடம் பிறந்தவர். நூறாவது வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த காந்தியவாதி, தீபாவளி கொண்டாடுவது கிடையாது. தீபாவளி என்றால் எல்லோருக்கும் மகிழ்ச்சி வரும். ஆனால் இவர் அப்படி மகிழ்ச்சியடைவதில்லை. அதற்குக் காரணமும் உண்டு. ஒருமுறை தீபாவளியன்று பட்டாஸ் விடும் போது வெடி சிதறி அவரது பன்னிரண்டு வயதுத் தங்கை பட்டாஸ் வெடிக்குப் பலியானாள். அந்தச் சோகத்தை அன்பு அண்ணனால் மறக்க முடியவில்லை. அதிலிருந்து அவர் தீபாவளி கொண்டாடுவதை நிறுத்திக் கொண்டார். நாட்டின் பிரதமராக இருந்த போது கூட மொரார்ஜிதேசாய் தீபாவளி கொண்டாடவில்லை! மக்களுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியதோடு சரி!

- ஆர். செல்வராணி.

# தீபாவளி! நல்ல தீபாவளி!

பாரதி சுராஜ்

தீபாவளி நல்ல தீபாவளி - ஒளித்
தீபங்கள் ஏற்றுகின்ற தீபாவளி!
புத்தாடை அணிகின்ற தீபாவளி - எங்கும்
புதுமை மணம் வீசும் தீபாவளி!

அம்மா பிள்ளையைத் தண்டித்த - பேர்
அதிசயக் கதை தீபாவளி!
அந்தக் கதையைக் கேளுங்கள் - பின்
அதன் உட் பொருளைத் தேடுங்கள்!

'நரகன்' என்று ஒரு அரக்கன் - இந்த
நானிலம் அவனால் நடுங்கிற்று!
கொடுமை அவனது இயல்பாகும் - என்றும்
கொல்வதே அவனது குணமாகும்!

நங்கையர் பலரைக் கவர்ந்து வந்தே - அவன்
நள்ளிருட் சிறையில் அடைத்து வைத்தான்.
எங்கும் 'அவலம்' 'பீதி'யுடன் - மக்கள்
என்று விடி வெனக் காத்திருந்தார்!


கண்ணன் அவனை எதிர்த்து வந்தான் - உடன்
கையில் வில்லுடன் 'பாமை' வந்தாள்
பெண்களை விடுதலை செய்ய வென்றே - மிகப்
பெரும் போர் நிகழ்ந்தது அப்போது!


அன்னை விடுத்த கணையாலோ - அங்கு
அலறி நரகன் வீழ்கையிலே
அம்மா! ஒருவரம் வேண்டுமென்றான் - பெற்ற
அவரும் அதனை ஏற்று விட்டாள்!

என்னை மடித்த இந்நாளில் - இனி
எவரும் வருந்தக் கூடாது
எண்ணெய்க் குளியல் புத்தாடை - புவி
எங்கும் மகிழ்ச்சி வேண்டுமென்றான்!

புவியைத் தாங்கும் பூமித்தாய் - சத்திய
பாமை வடிவில் வந்தவளாம்!
அவளே நரகனைப் பெற்றவளாம்
அன்று நாராணன்! இன்று கண்ணன்!

தீமை அழித்ததிந்த தீபாவளி - நாம்
திருந்த வழி சொல்லும் தீபாவளி
மரணம் 'மண'மாய் மாறிவிட்ட - பெரும்
மகிமைத் திருநாள் தீபாவளி!





# தவறு தவறு தவறு!

♠ விக்ரமாதித்தனும் நான்கு திருடர்களும் படக் கதை, சூழ்நிலையும் வறுமையுமே திருடர்களை உருவாக்குகிறது என்பதைத் தெளிய வைத்தது. அக்காலத்து மன்னர்களின் சிலம் மெய்சிலிர்க்க வைக்கிறது. - ஓமக்குளம் ஆர். பிரதீபன், திருக் கண்ணங்குடி மு. மாரிமுத்து, கொண்டரசம்பாளையம் பி. சரவணன், நண்பர்கள், கச்சிராபாளையம் அபிநயா, ஆரணி கே. யுவராஜ், மேலப்பாதி எஸ். நாகராஜன் மற்றும் பலர்.

♠ கேளுங்கள் சொல்லப்படும் பகுதியில் கமல நாதன் என்பவரது கேள்விக்கு அளித்துள்ள பதி லில் பூடானை யூனியன் பிரதேசம் என்று கூறியிருக்கிறது. இது தவறு. - உள்ளகரம் பா. ரோகிணி, முத்துக்கூத்தனூர் வெ. சாமிநாதன், வல்லம்படுகை பா. பண்டரிநாதன், கூடலூர் எம். சோமு, சீர்காழி தெ. பர்வதாம்பாள் இன்னும் ஏராளமானோர்.

(இது தவறுதான். பிரபலமான ஒரு நாளிதழில் வெளியான குறிப்பைக் கொண்டே இந்தப் பதில் அளிக்கப்பட்டது. ஆனால், இக்குறிப்பு தவறு என்று அதே நாளிதழே பின்னால் ஒரு திருத்தத்தை வெளி யிட்டதை சோநம்பி கவனிக்காது கோட்டை விட் டார். தவறுக்கு வருந்துகிறோம். - ஆசிரியர்)

♠ சாதனை படைத்த சிங்கக்குட்டி கட்டுரை, படம் எல்லாமே ஒரே அசத்தல். குற்றாலீஸ்வரனைப் பற்றி இத்தனை தகவல்களையும், அழகான புகைப் படத்தையும் எந்தப் பத்திரிகையும் தரவில்லை. அருமையோ அருமை! - வெலிங்டன் க. சரத்பாபு, திருவெண்ணெய்நல்லூர் க. ஞானாம்பாள், வெ. பாளை சந்திரமோகன், ஆலப்பாக்கம் கி. சிவா, காவேரிப்பட்டணம் கே. சோமசேகர், கொண்ட ரசம்பாளையம் எம்.எஸ். பெருமாள் நண்பர், சங்கராபுரம் ஆ. முருகன், ஏழுகிணறு எஸ். பாலாஜி, திருச்சி எஸ். வி. பார்த்தசாரதி, திருவண்ணாமலை இந்திராணி சண்முகம், மேலகிருஷ்ணன்புதூர் கே. எல். பகவதி, சகோதர சகோதரிகள், சர்க்கார் கொல்லப்பட்டி பெரு. ஜெயலட்சுமி ரமேஷ் நண்பர்கள், விவேகானந்த புரம் ஜெயதுரை பரந்தாமன், மேல்மலையனூர் எஸ். சரவணன், அம்மாப்பேட்டை வி. விஜய குமார், விசலூர் ஜி. ஜி. கிருஷ்ணன், தருமபுரி எம். சோமசுந்தரம், மேலப்பாதி என். ராஜலட்சுமி, கச்சிராப்பாளையம் க. கோவிந்தராஜ் மற்றும் ஏராளமானோர்.

♠ எப்படியோ மாயம் பண்ணி காந்தியடிகளைப் பற்றிய விவரங்களைப் படிக்கத் தூண்டும் வகை யில் போட்டி வைத்து விட்டீர்களே! பெரிய ஆளுங்க நீங்க! - விட்டலாபுரம் மு. ஏகாக்ரகன், சரப்பை. து. மாணிக்கவேல், ஒளியனூர் வா. சேது நாதன், எட்டுக்குடி மு. சாந்தநாயகி, கல்விகாபுரம் மா. துரைவேலு மற்றும் பலர்..

♠ 'வயது தடையல்ல' படித்தவுடன் நாமும் சாதனை படைக்க வேண்டும்' என்ற உணர்வை ஏற்படுத்தியது! - சாத்தூர் நல்லசிவம், கரூர் பா. திலகவதி, வெண்தாமரை வெ. அருகாம்பாள், கொத்தங்குடி செ. ராஜசேகரன் மற்றும் பலர்.

♠ எங்கள் ஊர் கிளை நூலகத்திற்கு வருவோரின் எண்ணிக்கை திடீரென்று கூடியுள்ளது. பிறகுதான் இதற்குக் காரணம் ''ஊற்று'' கதை என்பது புரிந்தது! கோகுலத்தின் சமூகப்பணி தொடரட்டும் - நெல்லிக்குப்பம் வா. கடலரசன், கன்னிகாபுரம் வா. ரெஜினா, கலசப்பாக்கம் பா. புவனா, வேட்ட வலம் கா. சிவசங்கரி, சேலம் பெரு. ஜீவாத்மா மற்றும் பலர்.

♠ நவராத்திரி வரவும், பாமாயில் கவர் மாலை செய்வது வெளியாகவும் நல்ல பொருத்தம்! - நகரி. மு. நமச்சிவாயம், புலியூர் ஆர். சிதாராம், சிறுவயல் தவ. சித்தநாதன், குரோம்பேட்டை வா. செல்லப்பா, திருச்சி எஸ். வி. பார்த்தசாரதி மற்றும் பலர்.

♠ 'பெரிய காந்தி இவரு!' காந்தியத்தின் சக்தியை விளக்கும் அற்புதமான சிறுகதை. ஏமாற்றமடைந்து ஏங்கிக் கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான தாத்தாக்களின் சார்பில் பாராட்டுகள்! நன்றி! - திருப்பாக்கம் மா. சாரநாதன், மல்லிகாபுரம் ரா. ராமகிருஷ்ணன், மாணிக்கராஜபுரம் பா. தேசிஸி, சாத்தனூர் மா. கண்ணம்மா, திருவந்திபுரம் மா. தேவசிகாமணி, ஆனைகல்மேடு சி. மாதேஸ்வரன், விருத்தாசலம் வி. பிரபாகர், மணவாளநகர் ஏ. கே. சிவமுருகன், அம்பாசமுத்திரம் கே. பழனி முதலியார் (வயது 81) இன்னும் பலர்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி, ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் ; 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.

கோகுலம்

# கேமல் சேம்ப் போட்டி



**நீங்கள் ஒரு கேமல் சேம்ப்பாக வேண்டுமா மற்றும் கவர்ச்சிகரமான பரிசுகளையும் வெல்ல வேண்டுமா? இது வெகு சுலபம்.** கேமல் வண்ண அளிகளைக் கொண்டு இந்த படத்திற்கு வண்ணம் தீட்டுங்கள். கேமல் தயாரிப்புகளான வாட்டர் கலர்கள், க்ரேயான்கள், ஆயில் பேஸ்டல்கள், ஏதாவது ஒன்றை உபயோகியுங்கள். பல கவர்ச்சிகரமான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு உள்ளது.

**1 ஆம் பரிசு** கேமல் பம்பர் பேக் (ரூ. 150 மதிப்புள்ள பல்வேறு கேமல் தயாரிப்புகள் அடங்கிய) **2ம் பரிசு** கேமல் பிக் பேக் (ரூ. 100 மதிப்புள்ள பல்வேறு கேமல் தயாரிப்புகள்) **3 வது பரிசு** (ரூ. 75 மதிப்புள்ள பல்வேறு கேமல் தயாரிப்புகள்) மற்றும் 100 ஆறுதல் பரிசுகள் — ஒரு குட்டி, வண்ணமயமான "நான் ஒரு கேமல் சேம்ப்" இலவச ஸ்டிக்கர்.

ஆம், நான் ஒரு கேமல் சேம்ப்பாக விரும்புகிறேன். இதோ என் நிறைவு செய்யப்பட்ட சித்திரம்.

பெயர் ______ வயது ______

வீட்டு முகவரி ______

பள்ளியின் பெயர் ______



**கேமல்**

வெற்றி பெறும் வண்ணங்கள்



INTERACT ◆ VISION CL/PAI/7PAM

ஆகும் சக்தியை ராஜூ எவ்வாறு பெற்றான் என்பதைப் படியுங்கள்

# கேமல் சேம்ப்



அன்பார்ந்த நண்பர்களே,

இன்று பள்ளிக்கூடத்தில் ஒரு ஜோக் செய்தேன்.

கேமல் ஆயில் பேஸ்டல் உபயோகித்து ஒரு அழகான பட்டுப்பூச்சியைப்போல் வண்ணம் தீட்டி கரும்பலகையில் ஒட்டி வைத்தேன். பார்ப்பதற்கு இது மிக அழகாக இருந்தது.



வண்ண ஜாலத்துடன் இயறகையாக இருந்தது. ஒவ்வொருவரும் ஏமாந்து போனார்கள். அவர்கள் அதை நிஜமானப் பட்டுப்பூச்சி என்று நினைத்தார்கள். அது மட்டுமல்ல, இரண்டு பட்டுப்




பூச்சிகளும் அதைச் சுற்றி வட்டம் வந்தன, அதனுடன் சிநேகம் செய்து



கொள்ள. என்ன வேடிக்கை! நான் உண்மையில் ஒரு கேமல் சேம்ப். எவ்வாறெனில் உண்மையான பட்டுப்பூச்சிகளையும் நான் கேமல் ஆயில் பேஸ்டல் கொண்டு ஏமாற்ற முடியும்.

உன் அன்புள்ள,

ராஜூ








**கேமல்**

**வெற்றி வண்ணங்களை உபயோகியுங்கள். கேமல் சேம்ப்பாகத் திகழுங்கள்.**

கேம்லின் ஆர்ட்மெட்டீரியல் டிவிஷன், ஜே.பி. நகர், அந்தேரி (கிழக்கு). பம்பாய்-400 059.

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka

